# பழையாறைக் கோயில் வரலாறு

தமிழ் முதுகலைப் பட்டப் படிப்பின் ஒருபகுதியை நிறைவு செய்யும் முகமாகப் பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெற்றத்திட்டக் கட்டுரை


**பொ. செல்வராசு**

பதிவு எண் P 42410703



மார்ச்சு-1986

தமிழ்த்துறை

அரசர் கல்லூரி

திருவையாறு

## மேற்பார்வையாளர் சான்றிதழ்

திரு மா.வேதநாயகம்,எம்.ஏ.,
~~துணைப்~~ பேராசிரியர்,
தமிழ்த்துறை.

அரசர் கல்லூரி,
திருவையாறு,
நாள்:

"பழையாறைக் கோயில் வரலாறு" என்னும் தலைப்பில் செல்வன் பொ.செல்வராசு செய்த இவ்வாய்வு, அவரால் பாரதிதாசன் பல்கலைக்கழக முதுகலைத் தேர்வின் ஒரு பகுதியாக திருவையாறு அரசர் கல்லூரி தமிழ்த்துறையில் தனியலாகச் செய்யப் பெற்றது என்றும், இவ்வாய்விற்காக ஆய்வாளருக்கு வேறு எந்தப் பட்டமும் அளிக்கப் பெறவில்லை என்றும் உறுதி அளிக்கிறேன்.

மா.வேதநாயகம்.
9/4/86.
மேற்பார்வையாளர் கையொப்பம்.

பொ.செல்வராசு
மாணவர் கையொப்பம்.

(சொ.சண்முகசுந்தரம்)
துறைத்தலைவர் கையொப்பம். 9/4/86

## உள்ளடக்கம்.

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை. | 1 |
| 2. | பழையாறைத் திருக்கோயில்களின் வரலாறு. | 4 |
| 3. | பழையாறையின் சிறப்பும் பழமையும். | 41 |
| 4. | பழையாறைக் கோயில் திருவிழாக்கள். | 63 |
| 5. | பழையாறைக் கோயில்களின் கலைச் சிறப்பு. | 77 |
| 6. | நிறைவுரை | 92 |
| | பின்னிணைப்பு. | |
| 1. | துணை நூற் பட்டியல். | 1 |
| 2. | தலவரலாறு பாடல்கள். | 5 |
| 3. | புகைப்படம். | 9 |

# முன்னுரை

## முன்னுரை

மனித மனம் மனிதனால் திருப்தி அடையாத போது இறைவனை நாடுகிறது. பல்தரப்பட்ட மக்களின் ஒருங்கிணைப்புக் கூடமாக கோயில்கள் இருந்து வருகின்றன. குறிப்பாக அண்மைக் காலத்தில் சாதியம் என்பதைக் கடந்த ஒரு நிலையைக் கோயில்களில் காணலாம். இறைவன் பொதுவாக இவ்வுலகில் உள்ள மக்களின் ஒரே பிரதிநிதியாவான். அந்த வகையில் மனித வாழ்வில் கோயிலும், அங்கு நடைபெறும் வழிபாடும் அன்றாடம் தவிர்க்க முடியாதாகி விட்ட காரணத்தால் கோயிலைப் பற்றி ஆராய்வதென்று முடிவு செய்யப்பட்டது.

## ஆய்வுத் தலைப்பு

கோயில் ஆராய்ச்சி செய்யும் போது ஆய்வுக்களம் பரந்தோடிக் கிடக்கின்றது. கல்லூரியில் முழுநேர மாணவனாக இருந்து கொண்டு விரிந்த பரப்பை ஆராய முடியாது என்ற காரணத்தால் பழையாறைத் திருக்கோயில் ஆய்வுத் தலைப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

## ஆய்வு நோக்கம்

இந்த ஆய்வு நான்கு விதமான நோக்கங்களை உள்ளடக்கமாகக் கொண்டது.

பழையாறைக் கோயில் அமைப்பையும் அதன் தனித் தன்மைகளையும் வெளிக் கொணர்வது ஒரு நோக்கமாகும்.

பழையாறைக் கோயில்களின் கலைச் சிறப்பை ஆராய்வது மற்றொரு நோக்கமாகும்.

பழையாறைக் கோயில்களில் நடைபெறும் விழாக்களையும் வழிபாட்டு முறைகளையும் ஆராய்வது பிறிதொரு நோக்கமாகும்.

பழையாறைக் கோயில்களை முறைப்படுத்திக் காட்டுவது வேறொரு நோக்கமாகும்.

## சான்றாதாரங்கள்:

களப்பணி ஆய்வாகிய இவ்வாய்வுக்கு உற்று நோக்கல், பேட்டி, பட்டியல் ஆகிய முறைகளில் திரட்டப்பட்ட நேரடித் தகவல்களே முதன்மை ஆதாரங்களாகும். பழையாறைக் கோயில் பற்றி வெளிவந்துள்ள நூல்களும், வழிபாட்டு முறைகள்

பற்றி வெளி வந்துள்ள ஆராய்ச்சி நூல்களும் முதன்மை ஆதாரத்திற் றுணை ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றன.

## இயல்பாகுபாடு

பழையாறைக் கோயில் ஆராய்ச்சியாகிய இவ்வாய்வு ஆறு இயல்களாகப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது.

'ஆய்வு முன்னுரை' என்ற இவ்வியலை அடுத்துள்ள பழையாறைத் திருக் கோயில்களின் வரலாறு என்ற இயலில் இலக்கியம், கல்வெட்டு கோயிலை ஆண்ட மன்னர்கள் ஆகிய செய்திகள் வரலாற்று முறையில் தொகுக்கப்படுகின்றன.

மூன்றாவதாக அமைந்துள்ள 'பழையாறின் சிறப்பும் பழமையும்' என்ற இயலில் அகழ் வாராய்ச்சி அடிப்படையில் செய்திகள் தொகுத்துத் தரப்படுகின்றன.

பழையாறைக் கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள் என்ற நான்காவது இயலில் பழங்காலம் முதல் பழையாறைக் கோயிலில் நடைபெற்று வரும் விழாக்கள் விரிவாக ஆராயப்படுகின்றன.

பழையாறைக் கோயில்களின் கலைச் சிறப்புக்கள் என்ற ஐந்தாவது இயலில் இழையாறைக் கோயில்களின் அமைப்பும், அதன் கலைச் சிறப்புக்களும் தொகுத்துத் தரப்படுகின்றன.

இறுதியாக அமைந்துள்ள ஆய்வு நிறைவுரை என்ற ஆறாவது இயலில் ஆய்வில் காணப்பட்ட பொதுவான முடிவுகள் தொகுத்துத் தரப்படுகின்றன. ஒவ்வொரு இயலின் இறுதியிலும் மேற்கோட் செய்திகளுக்கு அடிக் குறிப்புக்கள் இடம் பெற்று உள்ளன.

'பின்னிணைப்புக்கள்' என்ற பகுதியில் துணை நூற்பட்டியல், தல வரலாறு பாடல்கள், புகைப்படங்கள் தரப்பாட்டு, ஆய்வேடு முற்றுப் பெறுகிறது.

-----

# பழையாறைத் திருக்கோயில்களின் வரலாறு

## பழையாறை திருக்கோயில்கள் வரலாறு

இன்றைக்கு ஆயிரத்து எழுநூறு ஆண்டுகட்கு முன் பழையாறை மாநகர் கிழக்கே நந்திபுர விண்ணகரம் எனும் நாதன் கோயில் முதல் மேற்கே சுந்தரபெருமாள் கோயில் வரை ஆறு கல் (மைல்) நீளமும், வடக்கே அரசிலாற்றங்கரை முதல், தெற்கேக் குடமுருட்டி ஆறு வரை அய்ந்து கல் அகலமும் உடைய பெருநகராக விளங்கியது.

பழமையான வரலாற்றுச் சிறப்புடைய இந்நகரினைத் தலைநகராகக் கொண்டு சோழ நாட்டை ஆண்ட மன்னர்கள், விண்ணை முட்டும் உயர்ந்த மாடமாளிகைகள், அரண்மனைகள், ஆலயங்கள், அகன்ற அகலமாக அகழிகள் ஆகியவற்றை நகருக்கு அணி செய்யும் வண்ணம் அமைத்திருந்தனர் ஆனால் அவையெல்லாம் இன்று இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டன.

இம்மாநகரில்பல்வேறு காலங்களில் கட்டப்பட்ட ஆலயங்கள் மட்டும் கடந்த கால வரலாற்றினைப் பறைசாற்றி நிற்கின்றன.

அன்று மாநகராக விளங்கிய பழையாறை, மேல் / இன்று சிதறுண்டு சிற்றூர், பேரூர்களாகக் காட்சியளிக்கின்றது.

பழையாறை கீழப்பழையாறை, மேலப்பழையாறை என இரு சிற்றூராக விளங்குகின்றது.

சிற்றூராகிய பழையாறைக்கும் அதன் உட்பிரிவுச் சிற்றூர்களுக்கும் செல்ல கும்பகோணத்திலிருந்து எட்டு, பதினொன்று, இருபத்தைந்து எண்களுடைய நகரப்பேருந்து வசதி உண்டு.

### பழையாறைக் கோயில்களின் பழமை

பழம் வரலாற்றுச் சிறப்புடைய பழையாறை சமயச் சார்பிலும் பழமைமிக்க நகராக விளங்கியது. முதலாம் மகேந்திரவர்மன் (கி.பி.615-630) காலத்தவரான

தேவாரம்பாடிய திருநாவுக்கரசர் இந்நகருக்கு ஒரு முறை வந்த இறைவனை வழிபட்டுப் பதிகம் பாடியதாகப் பெரியபுராணம் கூறும்.[1]

சமயவாதங்கள் இந்நகரில் அடிக்கடி நடந்துள்ளன. சமயப்பூசல்களும் இந்நகரில் நிகழ்ந்துள்ளன. கி.பி 5 - 6-ஆம் நூற்றாண்டில் இந்நகரில் சமணர், பௌத்தர், சைவர், வைணவர் ஆகிய மதத்தினர் ஒருங்குறை சமயத் தலில் வாழ்ந்ததாகப் பெரியபுராணம் குறிப்பிடும்.[2]

தேவாரம் பாடிய மூவரும் இந்நகரில் இறைவனை வழிபட்டுப் பதிகம் பாடியதோடு அல்லாமல் நகரில் உள்ள வேறு தலங்களில் ஒன்றாக இதனைக் கொண்டிருந்தனர். ஆழ்வார்களும் இந்நகர் வைணவ ஆலயங்களை மங்களாசாசனம்[3] செய்துள்ளனர்.

ஒரு காலத்தில் சமணரும் இந்நகரில் அமைந்த தங்கள் ஆலயத்தில் சமயத்தை வளர்த்தனர்.[4]

பௌத்தவிகாரம் இங்கிருந்ததாகக் குறிப்பிடுவர். 1956-இல் பட்டீச்சுரம் விசுவநாத ஐயர், சோழன்மாளிகையில் தங்களுக்குச் சொந்தமான நிலத்தை வயலாக மாற்ற வரப்பு மண்ணை வெட்டி அப்புறப்படுத்திய போதுதான் நடுவே நாலடி உயரமுள்ள, அமர்ந்தகோல, கல்லினால் ஆன அழகிய புத்தர் சிலை ஒன்று கிடைத்தது. அச்சிலை இப்போது சரஸ்வதிமகாலில் வைக்கப்பட்டுள்ளது.[5] இங்கு புத்தவிகாரம் இருந்தமைக்கு இச்சிலை தக்க சான்றாய் அமையும். இவ்வாறு பல சமயச்சார்பின் மையமாக இருந்திருந்த பழமை மிக்க பழையாறை மாநகர் ஆலயங்களின் பழம் வரலாற்றினையும், இன்றைய நிலையினையும் இனிக் காண்போம்.

பிற்காலத்தே பழையாறை மாநகர் 42 சிற்றூர், பேரூர்களாகச் சிதறிவிட்டது. அவ்வூர்களில் வரலாற்றுப் புகழ் பெற்றக் கோயில்கள், தற்காலத்தில் தோன்றிய கோயில்கள் ஆகிய 'அனைத்தும் சேர்ந்து மொத்தம் 80 கோயில்களில் நாயன்மார்களாலும், ஆழ்வார்களாலும் பாடப்பெற்றக் கோயில்கள் 21 ஆகும். இவற்றுள்ளும் காலவெள்ளத்தால் அழிந்தவை போக எஞ்சி நிற்பவை

14 கோயில்களே. இக்கோயில்களின் வரலாற்றுச் சிறப்பினை ஒவ்வொன்றாக இனி காண்போம்.

## 1. கீழப்பழையாறை அருள்மொழித் தேவேச்சுரம்.

இக்கீழப் பழையாறைச் சிற்றூர் திருமலைராயன் ஆற்றுக்கும் முடிகொண்டான் ஆற்றுக்கும் இடையில் அமைந்துள்ளது. இன்றும் அவ்வூரில் தேரின் செழுமணி வீதிகளையும், கம்பீரமாக நின்று நம்மை வரவேற்கும் அரச கோபுரத்தையும், பொழிலுறும் வளமையினையும் காணலாம்.

கும்பகோணத்திலிருந்து நகரப் பேருந்தில் சென்றால் முழையூரில் இறங்கிக் கிழக்கு நோக்கி ஒரு கிலோ மீட்டரில் உள்ள பம்பைப் படையூர்ச் சென்று, அங்கிருந்து உடையாளூர் செல்லும் வழியே திருமலைராயன் ஆற்றினைக் கடந்தால் கீழப்பழையாறை அடையலாம்.

இன்று இவ்வூர் "கீழப்பழையாறை" என்றும் "கீழப்பழையாறு" என்றும் வழங்குகின்றது.

இறைவன் பெயர் :- சோமநாதர்
இறைவி பெயர் :- சோமகலாம்பிகை
தலத்திற்குரிய விருட்சம் :- நெல்லி மரம்.
தலத்திற்குரிய தீர்த்தம் :- சோமதீர்த்தம், சடாயு தீர்த்தம், இந்திரதீர்த்தம், கமல தீர்த்தம் என்பன.

**ஆலயம் கட்டுவித்த மன்னர்:-**

பிற்காலச் சோழப் பேரரசின் எழுஞாயிறாய் சோழர்குலம் விளங்க வந்துதித்த அருள்மொழித் தேவன் எனும் முதலாம் இராசராசன், தான் பிறந்து வளர்ந்த இப்பழையாறை மாநகரில் தன் இளமைக் காலத்திலேயே கட்டுவித்தான். இது ஒரு மாடக்கோயில்.

இப்பேரரசனே பிற்காலத்தில் உலகப் புகழ்பெற்ற தஞ்சை பிரகதீஸ்வரர் ஆலயத்தை வைத்து வரலாற்றில் அழியாத புகழ்பெற்றான்.

**கல்வெட்டுகள்:**

சோமநாதர் ஆலயத்தில் முன்மண்டபத்தில் உள்ள தூண்கள் சிலவற்றில் சில கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

"சகாப்தம் 1375-இன் மேற் செல்லா நின்ற ஸ்ரீமுக சித்திரை சோமநாதசு-
வர(ர்) கோயில் பெரிய மண்டபமும், சோபானமும் பொறுவலுடையான் வாணாதராய நாயன் நரசிங்க தேவர் திருப்பணி".[5]

இச்சாசனம் அக்கோயிலில் பெரிய மண்டபமொன்றும், சோபானமும் அமைத்த பொறுவலுடையான், வாணாதராயன், நரசிங்கதேவர் என்பவர் திருப்பணி செய்த விபரத்தைக் கூறும். சகாப்தம் 1375-இல் இச்சாசனம் எழுதப்பட்டது.

பட்டீச்சுரம் கல்வெட்டு இவ்வூரைச் "சோமநாதபுரம்"[6] என்ற பெயரால் சுட்டும். தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயில் கல்வெட்டு "ஆயிரத்தளி"[7] என அழைக்கின்றது.

## இலக்கியம்:

இப்பழையாறை நகரின் பழமையையும், கோயிலின் சிறப்பையும் சேக்கிழார் பெருமான் தன் பெரியபுராணத்தில் நாவாரப் பாராட்டுகின்றார்.

"செய்ய சடையார் பழையாறை எய்த அதனில் செல்பொழுதில்
மையில் சமணர் மறைத்த வட தளியின் மன்னும் சிவனாரை"[8]

என்றும்,

"செறிவிரை நன்மலர்ச் சோலை பழையா றெய்தித் திருச்சத்தி முற்றத்திற்
சென்று சேர்ந்தார்"[9]

என்றும்,

"சண்பவரும் பிள்ளையார் சடாமகுடர் வலஞ்செய்வ
என் பெருகத் தொழுதேத்திப் பழையாறை எய்துதற்கு"[10]

என்றும், சேக்கிழார் பெருமான் அருளியுள்ளமை இவ்வாலயத்தின் தொன்மையினைக் காட்டுவதாகும்.

அறுபத்து மூன்று நாயன்மார்களில் அமர்நீதி நாயனாரும், தம் இளமைக் காலத்து மங்கையர்க்கரசியாரும் வாழ்ந்த புண்ணியத்தலம் இவ்வூர்.

நீண்ட நெடுங்காலமாகச் சீரழிந்த நிலையில் மேலும் சீரழிந்து கொண்டு வந்த இச் சோமநாதர் ஆலயத்தை இக்காலத்தே செம்மைப்படுத்தி திருப்பணி செய்தவர் திரு.கு.சுந்தராச வன்னியராவர்.

1957-இல் அறங்காவலர் குழு தலைமைப் பொறுப்பேற்ற திரு.சுந்தரராச வன்னியர், அன்றைய இந்து அறநிலையப் பாதுகாப்பு ஆணையர் திரு.எ.உத்தண்டராமப்பிள்ளை, பி.ஏ.பி.எல்., ஐ.ஏ.எஸ்., அவர்களைக் கொண்டு ஆலயத்திருப்பணிகளைத் தொடங்குவித்து, அவர்கள் துறையிலிருந்து 15,000/- ரூபாயும், பொதுமக்களிடமிருந்து 25,000/- ரூபாயும் நன்கொடையாகப் பெற்றும் திருப்பணியினைச் சிறப்பாகச் செய்து முடித்தார்கள். அன்றைய பேரரசன் முதலாம் இராசராசனால் அமைக்கப்பட்ட இவ்வாலயம் இன்றைய குடிமகனார் சுந்தரராசனால் திருப்பணி செய்யப்பட்டு புத்தழகும் பெற்று, இன்று சீரோடும் சிறப்போடும் கம்பீரமாக வருவோரை வரவேற்கின்றது.

## 2. பழையாறை வடதளி:

பழையாறை மாநகராக, விளங்கிய அப்பழமையானக் காலத்தில் இன்றைக்கு 1500, ஆண்டுகட்கு முன் அம்மாநகரைச் சுற்றி நான்கு திசைகளிலும், நான்கு படைவீடுகள்[11] நான்கு தளிகள்,[12] பன்னிரெண்டு (சிறிய கோயில்கள்) நகருக்கு அணிகலனாக அமைந்திருந்தன என்பர் பண்டாரத்தார்.

இந்த நான்கு தளிகளில் ஒன்றுதான் நகரின் வடதிசையில் அமைந்திருந்த ஆறை வடதளியாகும். மற்ற தளிகள் ஆறை மேற்றளி, ஆறை கீழ்த்தளி, ஆறை தென்றளி என்பனவாம்.

தேவாரங்களில் பழையாறு, பழையாறை, "ஆறை" என்றும், 'பழசை' என்றும் குறிக்கப்படுதலை முன்னர் கண்டோம். எனவே ஆறை வடதளி என்பது பழையாறை வடதளியாகும். கும்பகோணத்திலிருந்து நகரப் பேருந்து இவ்வூர் வழியேதான் ஆவூர் செல்கின்றது. அந்நகரப் பேருந்தில்

சென்றதால் இவ்வூரிலேயே இறங்கிக் கொள்ளலாம்.

பழையாறை வடதளி ஆலயம் உள்ள ஊர் இப்பொழுது 'வள்ளலார் கோயில்' என்று வழங்கப்படுகிறது. இதுவே பழையாறை மாநகரின் வடதளி அமைந்திருந்த பகுதியாகும்.

பழையாறை மாநகரின் ஒரு பகுதியாகிய 'மழபாடி' யில் அமைந்துள்ள 'பட்டீச்சுரர்' என்ற இறைவன் பெயரால் அவ்வூர் பிற்காலத்தே பட்டீச்சுரம் என்று வழங்கப்படுவது போல 'ஆறை வடதளி' உறை இறைவன் பெயரால் 'வள்ளலார் கோயில்' என்றும், "தருமபுரீச்சுரர் கோயில்" என்றும் அவ்வூர் இன்று வழங்கப்படுகிறது. ஆறை வடதளி என்ற பெயர் இப்பொழுது வழக்கில் இல்லை. இஃது ஒரு மாடக்கோயில். பழையாறைக் கணேசக் கோயிற்கு 1957-இல் திருப்பணி நடைபெற்ற போது இக்கோயிலுக்கும் சேர்த்தே திருப்பணி செய்யப்பட்டது.

இக்கோயில் மற்ற சிவக்கோயில்களினின்றும் மாறுபட்டு மேற்குத் திசைநோக்கி அமைந்துள்ளது ஒரு சிறப்பாகும். 'தருமபுரீச்சுரர்' என்ற பெயரே பண்டு சமணர்களோடு இக்கோயில் பெற்றத் தொடர்பினை நினைவூட்டி நிற்கிறது.

தொடக்கத்தில் சிறிய செங்கல் கோயில்களாக இருந்தவற்றையே பிற்காலத்தில் பல்லவர்களும், பிற்காலச் சோழர்களும் பெரிய கருங்கல் கோயில்களாக விரிவு படுத்தினர் என்பது வரலாற்று உண்மையாகும். திருவீழிமிழலை திருத்தாண்டகத்தில் இப்பரடிகளால் வைப்புத்தலமாகக் குறிக்கப்பட்டுள்ள தஞ்சை தளிக்குளத்தை[13]த்தான் முதலாம் இராசராச சோழன் பெரிய கற்றளியாக எடுப்பித்து அதற்கு 'இராசராசேச்சுரம்' என்னும் பெயரும் வழங்கிச் சிறப்பித்தான் என்பது நன்கு உணரற்பாலதாகும்.[14]

அங்ஙனம் தொடக்கத்தில் சிறிய கோயிலாக இருந்த பின்னர் விரிவு பெற்றக் கோயில்களில் பழையாறை வடதளி கோயிலும் ஒன்றாகும். பழையாறை வடதளி ஆலயத்தை முதல் இருமுறை வந்து வழிபட்டுச் சென்ற திரு நாவுக்கரசர் மூன்றாம் முறையாக வழிபட வரும்போது அன்றைய நாளில் பழையாறை உறை சமண-ர்கள் அத்தருமபுரீச்சுரரை மறைத்துச் சமணர் ஆலயமாக மாற்ற முனைந்தனர்.

தாம் முன்பு இருமுறை வந்து வழிபட்ட இடத்தில் ஆலயத்தைக் காணாது விழித்த நாவுக்கரசர், தாம் சமணத்தில் இருந்த காலை, சமணர்களின் அடாத இழிந்த செயல்களையெல்லாம் அறிந்தவர் ஆகையால் உண்மை நிலையை ஓரளவு உய்த்துணர்ந்து வருந்தி தருமபுரீச்சுரரைக் கண்டு வணங்காது இவ்விடம் விட்டு அகலேன், உண்ணேன் என்று உண்ணாநோன்பு மேற்கொண்டு விட்டார். அன்றைய நாளில் பழையாறை மன்னர் பாண்டிய நாட்டில் சைவம் வளர்த்த மங்கையர்க்கரசியாரின் அருமைத் தந்தையார் மணிமுடிச் சோழராவார்.[15]

இம்மணிமுடிச் சோழரே திருநாவுக்கரசர் மேற்கொண்ட உண்ணா நோன்பினையும், சமணர்களின் அடாத செயலையும் அறிந்து விரைந்து வந்து, சமணர்களை அகற்றி ஆலயத்தை மீட்டார்.[16]

சமணர்களின் அடாத செயலால் உருக்குலைந்த ஆலயத்திற்கு விமானம் அமைத்துத் திருப்பணி செய்து இறைவி நிவந்தங்கள் அளித்து ஆலயத்தைப் புகழ் பொலிவோடு நிலைநிறுத்தினார்.[17]

எனவே இவ்வாலயத்தை மீண்டும் அமைத்த பெருமை மணிமுடிச்சோழரைச் சாரும்.

இறைவன் பெயர்:- தருமபுரீசுவரர் வள்ளலார்

இறைவியின் பெயர்:- சோமகலாம்பிகை

தீர்த்தம் :- சடாயுதீர்த்தம், இந்திரதீர்த்தம்,
கமலதீர்த்தம்.

விருட்சம் : நெல்லி.

பிறதெய்வங்கள் : கோயில் புறமதில் உருவறையில் உள்ள அர்த்தநாரி உருவம் அழகிய தோற்றப்பொலிவுடையது. விங்கோத்பவர் தென்முகக் கடவுள் ஆகிய கோஷ்டச் சிலைகள் காணப்படுகின்றன. திருக்காமக் கோட்டமுடைய நாச்சியார் 'விமல நாயகி' என்ற அழைக்கப் பெறுகிறார்.

<u>கல்வெட்டுக்கள்</u>:

இவ்விடத்தியில் இரண்டு கல்வெட்டுக்கள் உள்ளன. பிற்காலத்தில் தோன்றிய இக்கல்வெட்டு ஒன்ற வருமாற. " சகம் 1375 (கி.பி.1453-ல்) ஸ்ரீமுகவருடம் சித்திரை மாதம் பொருளைா நிலைச் சேர்ந்த வாணாதராயன், நரசிங்கதேவன் பழையாறை வடதளி மகாமண்டபத்தையும், சோபானங்களையும் (படிக்கட்டுகளையும்) கட்டுவித்தான்."[18]

மற்றொரு சாசனம் நரசிங்க தேவனால் தாங்கள் சேவிக்கப் பெற்றதாகக் கறம். இவன் மகாமண்டபம் கட்டிய வாணாதராயன் நரசிங்க தேவனே ஆகலாம்.[19]

<u>தஞ்சைக் கல்வெட்டில் வடதளி</u>

பல்லவர் காலத்தொன்மையுடைய இத்திருக் கோயிலைப்பற்றி முதலாம் இராசராசன் தான் அமைத்த தஞ்சைக் கோயில் கல்வெட்டில் குறிப்பிடுகின்றான். இராசராசன் தஞ்சை தளிச்சேரிகளில் குடியமர்த்திய பெண்டிருள் பழையாறை வடதளிக்கு உரியவர் பதின்மூவர் ஆவர்.[20] என்ற குறிப்பிட்டுள்ளார். இவர்கள் பற்றிய விபரம் வருமாற.

"27-ம் வீட்டில் "நக்கன்தெள்ளைவன் மாதேவி" என்பவரும், 33-ம் வீட்டில் 'நக்கன் சோமசுந்தரி' என்பவரும், வடசிறகில் 88-ம் வீட்டில் 'நக்கன் நயனவல்லி' என்பவரும், 89-ம் வீட்டில் 'நக்கன் பெற்ற திரு' என்பவரும் குடியேற்ற வைக்கப்பட்டனர்.

வடக்குத் தளிச்சேரி எதற்கு சிறகில் 53-ம் வீட்டில் 'நக்கன் அறம்'

என்பவரும், 54-ம் வீட்டில் 'நக்கன் குளமணி' என்பவரும், 55-ம் வீட்டில் 'நக்கன் எகவீரி' என்பவரும், 28-ம் வீட்டில் 'நக்கன் ஒருப்பகை' என்பவரும், வடசிறகில் 8-ம் வீட்டில் 'நக்கன் சீல குளாமணி' என்பவரும், 52-ம் வீட்டில் 'நக்கன் அராமி' என்பவரும், 53-ம் வீட்டில் 'நக்கன் சிங்கடி' என்ப என்பவரும், 54-ம் வீட்டில் 'நக்கன் சீல குளாமணி' என்பவரும் குடியேற்ற--விக்கப் பெற்றனர். இத்தளிச்சேரிப் பெண்டிர் தஞ்சைக்குத் தருவிக்கப் பட்டமை பழையாறை வடதளியின் சமயச் சிறப்பினைக் காட்டும்சான்றாகும்.

<u>இலக்கியத்தில் வடதளி:</u>

திருநாவுக்கரசர் இவ்வடதளி ஆலயத்தை வழிபட்டு சிறப்பாகப் பதிகம் பாடியுள்ளார்.[21] திருநாவுக்கரசர் இப்பழையாறை வடதளி ஆலயத்தில் சமணரால் செய்யப்பெற்ற தீங்குகளை வென்ற, நின்ற சிறப்பினைப் பெரியபுராணத்தில் அறிகின்றோம்.[22]

<u>3. பழையாறை மேற்றளி</u>: பழையாறையின் மேற்குத் திசையில் அமைந்திருந்த திருக்கோயிலாகும். இது நான்கு தளிகளில் ஒன்றாக மேற்கைப்புரத்தில் அமைந்த மேற்றளியாகும். இதனை திருமேற்றளி என்றும், திருமத்தடி என்றும், திருமத்தழி என்றும் வழங்குவர். இவ்வூர் பட்டீச்சுரத்திலிருந்து சுந்தரபெருமாள் கோயில் போகும் வழியில் அமைந்துள்ளது.

<u>இலக்கியத்தில் பழையாறை மேற்றளி</u>

இவ்வூர் ஒரு வைப்புத்தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது திருப்புறம்பியம் திருப்பதிகத்தில் இந்த ஆறை மேற்றளியைக் குறிப்பிடுகின்றார்.[23] திருஞான சம்பந்தர் பழையாறை மேற்றளியை வழிபட்ட சிறப்பினை,

"திருவாறை மேற்றளியில் திகழ்ந்திருந்த செந்தீயும்
உருவாளன் அடிவணங்கி"[24]

என்று சேக்கிழார் பெருமான் தமது பெரியபுராணத்தில் குறிப்பிடுகின்றார்.

சுந்தரர் இத்தளி இறைவனை வழிபட்டச் சிறப்பு.

"தேடும் இருவர் காண்பரியார்
திருவாறை மேற்றளி சென்றணைந்தார்."[25]

"செம்பொன் மேருச் சிலைவளைத்த
சிவனார் ஆறை மேற்றளியில்
நம்பர் பாதம் பணிந்தெழுந்து"[26]

என்று சேக்கிழார் பெருமானால் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கல்வெட்டுகள்:

பல்லவர் காலத் தொன்மையுடைய இவ்வாலயத்தில் கல்வெட்டுக்கள் இல்லை. பிற ஊர் ஆலயங்களின் கல்வெட்டுக்களிலும் இவ்வூர் பற்றிய செய்திகள் இல்லை. பழையாறையில் இருந்த பல ஆலயங்களைக் குறிக்கும் தஞ்சை தளிச்சேரி கல்வெட்டும் இவ்வாலயத்தைக் குறிக்கவில்லை.

## இன்றைய நிலை

இவ்வாலயத்தின் கோபுரம் முற்றிலும் அழிந்துள்ளது. இது குறைந்தது மூன்று நிலைகளையேனும் உடைய கோபுரமாக இருந்திருத்தல் வேண்டும். கோபுர வாயிலின் நுழைவுப்பாதை அடைபட்டு மேடாகக் காட்சி தருகிறது. கோபுர வாயிலின் வெளிப்புறத்தில் நந்தி ஒன்று அமைந்துள்ளது. ஒரு காலத்துப் பெரிய திருச்சுற்றுச் சுவர் உடையதாக இருந்து நிலைமாறி இன்று பொலிவிழந்து நிற்கின்றது.

## திருஞானசம்பந்தர் மேடு

இத்திருக்கோயிலின் வடமேற்கே ஒரு மணல் மேடு காணப்படுகின்றது. இதனை ஞானசம்பந்தர் மேடு என்றும், நந்தமேடு என்றும் குறிப்பிடுவர். இம்மேடு தோன்றிய காரணம் பற்றி பல கதைகள் வழங்கப்பெறுகின்றன. அக்கதைகளில் ஒன்று வருமாறு:

பழையாறையில் வாழ்ந்த சோழ அரசருள் ஒருவன் பட்டத்தரசியிடம், காமக்கிழத்தியின் பால் பேரன்பு உடையவனாக வாழ்ந்துவந்தான். ஒருமுறை ஒரு வணிகன் மிகவும் விலை உயர்ந்த புடவை ஒன்றினை அம்மன்னன் பால் விற்க வந்தான். மிக நுண்ணிய வேலைப்பாடமைந்த அப்புடவையோ இறையொன்று ஆயிரம் காசுபெறும் சிறப்புடையது. பட்டத்தரசியார் தன் கணவன் சோழ மன்னனை அப்புடவையினைத் தனக்குப் பெற்றுத்தருமாறு வேண்டினாள். அவன் மறுத்தான். மாறாக, காமக்கிழத்திக்குப் பேரன்போடு பெற்றுத்தந்தான்.

வணிகனிடம் சிறிது பொருள் கொடுத்தனுப்பிப் பின்னர் வருமாறு ஆணையிட்டான். வணிகன் சென்றபின் பண்டாரத்தை நோக்கினான். சோழ மன்னன். வணிகனுக்குத் தரவேண்டிய பாக்கியைப் பொன்னாகத் தன்னால் கொடுக்க இயலாது என்பதை உணர்ந்தான். பொன்னால் நாணயம் அமையும் முறையை மாற்றித் தோலால் நாணயம் செய்வித்தான். தொகை பெற வந்த வணிகனிடம் தோல் நாணயங்களைத் தந்து நாணயம் காக்க முயன்றான், எனினும் அவ்வணிகனுக்கு அந்நிகழ்ச்சி நிறைவுதரவில்லை. மன்னன் தன்னை ஏமாற்றி விட்டான் என்ற பெருஞ்சினத்தோடு இட்ட சாபத்தால் இப்பகுதியில் மண்மழை பொழிந்து அரண்மனை மண் மேடாயிற்று என்பர்.

4. பழையாறைத் தென்தளி.

பழையாறை மாநகரின் தெற்குப் பகுதியில் அமைந்த சிவாலயம் பழையாறைத் தென்தளியாகும். பழையாறையின் நான்கு திசைகளில் இதுவும் ஒன்று. மூவர் தேவாரத் திருப்பதிகங்களிலும் இவ்வாலயம் பற்றிய குறிப்புகள் இல்லை.

இவ்வாலயம் சோழர் காலத்தில் சிறந்திருந்தது என்பதைச் சாசனங்களின் வாயிலாக அறிகிறோம். முதலாம் இராசராசன் தஞ்சைப் பெருவுடையார் கோயில் தளிச்சேரிகளில் குடியமர்த்திய நானூற்றுவருள் பழையாறைத் தென்தளிக்கேறியார் நால்வராவர். தஞ்சைத் தளிச்சேரி தெற்கில் வடசிறகில் 20-ம் வீட்டு 'நக்கன் பெற்ற திரு' ஏகம்பமும், வடக்குத்தளிச்சேரி தென்சிறகில்

51-ம் வீட்டு 'நக்கன் ஆச்சம்' என்பவளும், இதே பகுதியில் 52-ம் வீட்டுச் சிறிய 'நக்கன் ஆச்சி' யும், வடசிறகு 51-ம் வீட்டு 'நக்கன் பட்டி' யும் பழையாறை தென்தளிக்குரியார் என்பது தஞ்சைக் கல்வெட்டுச் செய்தியாகும்.[27]

ஆய்வாளர்கள் பலகால் முயன்றும் தென்தளிக்கோயில் எது எனக் கண்டுபிடிக்க இயலாமல் கால வெள்ளத்தில் அழிந்து போயிருக்கலாம், அல்லது வேறு பெயருடன் நின்று நிலவலாம் என்று கருதுகின்றனர்.

## 5. திருப்பட்டீச்சரம்:

திருப்பட்டீச்சரம் திருக்கோயில் மழபாடி நகரில் அமைந்துள்ளது. இந்நகருக்கு நிகரான பகுதி இம்மண்ணுலகில் இல்லை.

"மன்னிய மிசை நேரின் மழபாடியுள் பட்டீச்சரம்"[28] என்று இந்நகரினை ஆளுடைய பிள்ளையார் பாராட்டுகின்றார். இதனால் பட்டீச்சரக் கோயில் உள்ள பகுதி மழபாடி என வழங்கப்பட்டமை அறியலாகும்.

இன்று மழபாடி என்ற பெயர் மறக்கப்பட்டு ஆலயத்தின் பெயரால் பட்டீச்சரம் ஸ்ரீ என வழங்கி வருகின்றது. பட்டீச்சரம் உடையாரை வாயால் புகழ்ந்துரைத்தால் வகை வினைகளும் அடையும். அவர் கோயில் கொண்டுள்ள இடம் பழசைப்தி. இந்த கொன்றைமாலை அணிந்த சிவபெருமானின் திருவிரப்-பத்திற்குரியது என்பர் திருஞான சம்பந்தர்.

"கார்மலி கொன்றைவிரி தார்கடவுள்
காதல் செய்து மேயநகர்தான்
பாரின்மலி சீர்பழசை பட்டீசரம்
ஏத்தவினைப் பற்ற றுதலே"[29]

என்ற அவரதும் அருள்வாக்கால் பட்டீச்சரம் இருந்த இடம் பழையாறை மாநகர் என்பது தெளிவாகின்றது.

பழங்காலத்தே கோயிலுக்கொரு பெயரும், ஊருக்கொருபெயரும் வழங்கப்-படுவதுண்டு. தஞ்சை என்பது ஊரின் பெயர். இராசராசேச்சரம் என்பது

தஞ்சையில் முதல் இராசராசசோழன் எடுப்பித்தக் கோயிலின் பெயர். இதுபோலவே ஊரும் கோயிலும், கோயில் இருந்த பகுதியும் வேறு வேறு பெயர்கள் திருஞானசம்பந்தர் காலத்திலேயே வழங்கப்பெற்றன. இதேபோல் பழையாறை என்பது நகரின் பெயர். மழபாடி என்பது கோயில் இருந்த பகுதியின் பெயர். பட்டீச்சரம் என்பது சிவாலயத்தின் பெயர். இங்ஙனம் தனித்தனியே பெயர் அமைந்திருக்கும் சிறப்பினைக் காண்கிறோம்.

கல்வெட்டுக்கள்:

பட்டீச்சரம் திருக்கோயிலில் உள்ளவாக எட்டுக் கல்வெட்டுகள் வெளியிடப்பட்டுள்ளன. திருப்பட்டீச்சரம் பல்லவர் காலத் தொன்மையுடையதாகிய திருக்கற்றளியாயினும் இத்தொன்மையை நிறுவும் சாசனங்கள் இங்கே இல்லை. சோழர் காலத்திய சாசனங்களும் இங்கே இல்லை. இங்குத் தொன்மையான சாசனங்கள் இல்லாமைக்குப் பிற்காலத்தில் செய்விக்கப் பெற்ற திருப்பணிகளின் போது இவை அழிந்ததே காரணம் எனலாம். பட்டீச்சரம், தேனுபுரீசுரர் கோயில், ஸ்ரீபலி பீடத்திலிருக்கும் கல்வெட்டு ஒன்று இம்முடிவுக்குப் பெரிதும் துணை புரிவதாகும்.

கல்வெட்டு ஆண்டு அறிக்கை மூன்று சாசனங்கள் வடமொழிக் கிரந்த எழுத்திலும், இரண்டு தமிழிலும் ஆக ஐந்து சாசனங்கள் இக்கோயிலில் உள்ளவாகக் கூறும். இவை ஐந்தில் ஒரு சாசனம் மட்டும் கி.பி.1592க்கு உரியது.[30] ஏனையவற்றின் காலம் பற்றியக் குறிப்புகள் இல்லை.

ஒரு வடமொழிச் சாசனம்

திருப்பட்டீச்சரத்தில் இரண்டாம் கோபுரத்தில் அமைந்துள்ள சாசனங்களில் ஒன்று சிதைவுற்றுள்ளது. இதன் காலம் பற்றியக் குறிப்பு சிதைவுற்றுள்ளது. ~~இதன் ஆண்டும் பற்றியக் குறிப்பு~~ இல்லை. சாசன ஆண்டறிக்கை இத்திருக்கோயிலில் செய்யப்பட்ட திருப்பணிகளை உணர்த்துகின்றது. தென்னிந்தியக் கோயிற்சாசனத்தொகுதி, மேற்குறிப்பிட்டுள்ள சாசனத்தை, ஒத்ததொரு சாசனம் தேனுபுரீச்சுரர் கோயிலின் வெளிப்புறச் சுவரில் இருப்பதாகக் கூறுகிறது.

முதற்பகுதியில் உள்ள வடமொழிப்பாடல்களின் பொருள் சரியாக அறியக் கூடுவதாக இல்லை." காவிரித் திருநதி பாய்ந்து அழகூட்டும் சோழநாட்டில் வாழ்வதற்குத் தகுதியற்றக் காடுகளைத்திருத்தி வளமான பகுதியாக ஏற்படுத்தி-யமைத்ய நாம் அறியலாம். குளம் வெட்டி, கோயில் பழுது பார்த்ததையும் நாம் அறியலாம். பின்னர்உள்ள தான் தமிழ்ப்பகுதியில் இராசாதிராச பரமேச்சுரர் தருமமாகப் பன்னிரு திருக்குளமும், திரு மண்டபமும் கட்டுவித்து திரு பூசைக்கு நாழமா முக்காணி நிலம் விட்டது"[31] என்று கூறப்பட்டுள்ளது.

சகம் 1191 ஆம் ஆண்டில் (கி.பி.1269-ல்) பகுதானிய சம்வத்சரம் விருச்சிக மாதம் சுக்ல பட்சத்து தொளி தியையும், ஆதி வாரமும் பெற்ற நதி வோகத்து நாளில், பாண்டியகுலபதி வடநாட்டு ஸ்ரீபட்டீச்சுரத்து ஸ்ரீபட்டீச்சுரதேவர்க்குக் கோயில் திருக்குளமும், மடைபமும் கட்டுவிக்கப்-பெற்றதாக முற்பட்டது. தவறானது என்று திரு ந.சுப்பிரமணியம் அவர்கள் கூறுவர். இப்பொழுதால் இச்சாசனம் சகம் 1199க்குரியது என்பதும் தவறானக்குறிப்பேயாகும்.

தமிழ்க் கல்வெட்டுக்கள்:
-----------------

இரு தமிழ் சாசனங்களும் வெளிப்பிரகாரத்துப் பலிபீடத்தில் உள்ள கல்வெட்டு முற்பட்டது. இதனால் இவ்வ அந்த் சிதைந்துள்ளது. நிலதானம் பற்றிய செய்திகளை இது தவிரஉடன் திருஞானசம்பந்தன் மடம், திருநாவுக்கரசன் மடம், திருமூலதேவன் மடம் என்னும் திருவண்ணக்கதிசக் மட்டங்களின் பெயர்களைக் குறிக்கிறது.[32]

இரண்டாம் கோபுரச் சுவரில் உள்ளதொரு சாசனம் 'வழக்கு முறை' ஒன்றினைக் காட்டுகிறது. பட்டீச்சுரத்திலிருந்த பட்டுசாற் செட்டிமார்களிடையே கருத்து வேறுபாடு உருவாயிற்று. இறைவன் திருக்கல்யாண விழாவில் முந்துரிமை 5 பணம் மதிப்புள்ள புடவையும், 30காய் 100 வெற்றிலை ஆகியவற்றைத் தருவோர் முதல் வெற்றிலைப் பாக்குப் பெறலாம் என்று முடிவு செய்து அச்சிக்கல் தீர்க்கப் பெற்றது. "நாயக்கரய்யர் திருவடியாலே' என்னும் காப்புரையுடன் முடியும் இச்சாசனம் கோவிந்த தீட்சிதரை "தீக்ஷிதஸ்வாமி' என்று கூறும்.

இந்த வழக்குமுறி கல்வெட்டு கி.பி.1634க்கு உரியது.[33] இச்சாசனகால அரசன் இரகுநாத நாயக்கனாகலாம்.

இலக்கியம்:

திருஞான சம்பந்தர் மழபாடி உறைப் பட்டீச்சுரரைப் பாடியுள்ளார். அப்பாடல் மறை எனத் தொடங்கும் திருப்பதிகம் ஆகும். இத்திருப்பதிகம் பல்லவர் காலத்திலேயே இவ்வாலயம் சமயச் சிறப்புற்றிருந்தமையைக் காட்டுவதாகும். சேக்கிழார் பெருமான் திருஞானசம்பந்தர் இவ்வாலயத்தை வழிபட்டச் சிறப்பினை,

"சென்றணைந்த திருவாயிற் புறத்திறைஞ்சி உள்புக்கு
வெற்றிவிடை யவர்கோயில் வலங்கொண்டு வெங்கோட்டுப்
பக்திமீ களைத்தறியாத பாதத்தாமரை கண்டு
முன்தொழுது விரைந்தெழுது மொழிமாலைப் போற்றி செய்தார்.[34]

எனப் போற்றிக் கூறியுள்ளார்.

6. திருச்சத்திமுற்றம்

திருச்சத்தி முற்றம் இக்காலத்தில் பட்டீச்சுரத்தின் ஒரு பகுதியாக விளங்குகிறது. முற்காலத்தில் இது பழையாறையின் ஒரு பகுதியாக விளங்கியது. சிவனை வழிபட்ட உமையம்மையார் அவனைத் தழுவி முத்தமிட்டார். சத்திமுத்தம் சத்திமுற்றமாயிற்று என்பது புராணச்செய்தி. சத்திமுத்தக்காட்சி தழுவிய உடையார் என்றும், சிற்ப உருவம் இக்கோயிலில் உள்ளது. சிவக்கொழுந்தீசரை உமை வழிபட்டமையை "தம்பிபம்பும் மட்டார்குழலி மலைமகள் பூசை மகிழ்ந்தருளும் சிட்டா, திருச்சத்தி முற்றத்துறையும் சிவக்கொழுந்தே"[35] என நாவுக்கரசர் குறிப்பர். சேக்கிழார் இதனை,

"மலோரும் குழல்மலையாள் வழிபாடு செய்ய அருள்
தலையார்தம் திருச்சத்தி முற்றம்"[36]

"திருச்சத்தி முற்றத்தில் சென்றெய்தி திருமலையாள்
இருக்கின்ற சேவடிகள் ஆற்றுறப் பணிந்தேத்தி"[37]

என்றும்,

"முற்ற மகள் தன்மைக்காதல் வழிபூசைக் கொண்டருளும்.
என்றுமினிய பெருமான்"[38]

பெரியபுராணத்தில் கூறுவர். சத்தி சிவனை வழிபட்ட இடம் (முற்றம்) என்னும் பொருளில் இக்கோயிலின் பெயர் அமைந்தது என்பதை நாம் இதன் மூலம் அறிகிறோம். முற்றம் பிற்காலத்தே பேச்சுவழக்கில் முத்தமான போது அதனடியாகப் புராணக் கதையும் எழுவதாயிற்று.

இத்திருச்சத்தி முற்றம் பண்டைக்காலத்தில் அறிவிற் சிறந்த ஆன்றோர்கள் பலர் வாழ்ந்த இடம் என்பதை நாம் பல நூல்கள் வாயிலாக அறிகிறோம். "நாரையின் வாய் பனம்படு கிழங்கு பிளந்தன்ன" பெற்றியாம் அமைந்துள்ளதென்ற உண்மையினைப் பாடியதை திருச்சத்தி முற்றப் புலவர்க்குப் பரிசளித்தப் பாண்டியனது பான்மையைப் பாடல்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடிகிறது.

## கல்வெட்டுக்கள்:

இத்திருச்சத்தி முற்றக் கோயிலிலுள்ள சாசனங்கள் அனைத்தும் தொல்லியல் துறையினரால் படியெடுக்கப் பெற்றுள்ளன. கல்வெட்டாண்டறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள சாசனங்கள் ஒன்பதாகும்.[39] இவற்றுள் இராசதிராசனுக்குரியன இரண்டு, காலம் அறியப்பெறாதன மூன்று. விசய நகர அரசர் காலத்தன இரண்டு. அவை ஒன்பதன் ஏழு சாசனங்களின் மூலங்கள் தென்னிந்தியக்கோயில் சாசனத் தொகுதியில் வெளியிடப் பெற்றுள்ளன. திருச்சத்தி முற்றத்து திருச்சத்தி வனப்பெருமான் என்னும் பெயரை கி.பி.1450 (சகம் 1372) க்குரிய வீரப்பிரதாப தேவ மகாராயன் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. "சத்திவனம்" என்பது இவ்வூர்க்கு நிலவிய பெயர்களுள் ஒன்றென்பது தலபுராணநூல்களில் கண்டது. சிவக்கொழுந்தீசர் என்னும் பெயரும் சாசனங்களில் காணப்பெறுகிறது.

திருநறையூர் நாட்டு, இராசராசபுரத்துத் திருச்சத்தி முற்றமுடையாருக்கு அரசு திருவாணையின் வண்ணம் பூசாவிற்காக நிலம் தரப்பெற்றமையைக் கூறுகிறது. இச்சாசனத்தில் அரசனுடைய திருமந்திர ஓலை நாயகம் சோமேந்திர சிங்க குவேந்த வேளான் உட்பட பல அதிகாரிகள் கையொப்பமிட்டுள்ளனர்.[40]

7. அரை எருமான் தளி:-

பழையாறை மாநகரில் அரை எருமான் தளி என்னும் திருக்கோயில் இராசராசன் காலத்தில் இருந்தது என்பதைத் தஞ்சைக் கல்வெட்டு ஒன்றின் மூலம் அறிகின்றோம்.[41] பழையாறை மாநகரில் அமைந்திருந்த திருக்கோயில்களில் இதுவும் ஒன்றாகும். இங்கிருந்து தஞ்சைத் தளிச் சேரிக்குக் குடியேற்றப் பெற்ற தளிச்சேரிப் பெண்டுகளைப் பற்றியக் குறிப்பு தஞ்சைக் கல்வெட்டில் காணப்படுகிறது.[42] தஞ்சைக் கல்வெட்டு இவ்வாலயம் வழிபாட்டில் சிறந்திருந்தமையை உணர்த்துகிறதேயன்றி, ஆலய அமைவிடம் பற்றிக் கூறவில்லை. இக்கோயில் பற்றியக் குறிப்புக்கள் இதற்கு முன்னும் இல்லை. பின்னும் இல்லை. இவ்வாலயம் பழையாறை மாநகரில் எங்கு அமைந்துள்ளது என்பதை அறிய முடியவில்லை.

8. முன்னூர் நக்கன் தளி:-

முன்னூர் நக்கன்தளி என்னும் ஆலயம் பழையாறை மாநகரில் இருந்தது என்பதை முதல் இராசராசனின் தஞ்சாவூர் தளிச்சேரி நிவந்தக் கல்வெட்டின் மூலம் அறிகின்றோம்.[43] இங்கிருந்து தஞ்சாவூர் தளிச்சேரிப்பகுதிக்குத் தளிச்சேரிப் பெண்டிரை முதலாம் இராசராசன் குடியமர்த்திய செய்தியையும் நிவந்தக் கல்வெட்டு தெரிவிக்கின்றது.[44]

முன்னூர் நக்கன்தளி சிவத்தலமேயாகும். முன்னூர் நக்கன் என்பதற்குப் "பழையாறையில் ஒரு பகுதியாகிய முன்னூரில் கோயில் கொண்ட சிவன்" எனப்பொருள் கொள்ளலாம். பழையாறையின் ஒருபகுதியாகிய முன்னூரைப் பற்றியச் செய்தி ஒன்றும் கிடைக்கவில்லை. இக்கோயில் பழையாறை மாநகரில் எவ்விடத்தில் அமைந்துள்ளது என்பதைக் காண இயலவில்லை. இன்று இவ்வாலயம் வேறு பெயருடன் நிலவுகிறதா? அழிவுற்றதா? என்பதை அறிய முடியவில்லை.

9. சக்கீச்வரம்:-

பழையாறை மாநகரில் சக்கீச்வரம் என்ற ஒரு சிவாலயம் இருந்ததைத் தஞ்சையிலுள்ள முதல் இராசராசனுடைய தளிச்சேரப் பெண்டிர் நிவந்தக் கல்வெட்டு உணர்த்துகின்றது.[45]

பழையாறை சங்கீச்சரத்து 'நக்கன் கோயில்' என்பவள் தஞ்சை பெருவுடையார் கோயில் வடக்குத் தளிச்சேரி, வடசிறகில் 55 -ஆம் வீட்டில் குடியேற்றப்பட்டாள் எனும் செய்தியை தஞ்சைக் கோயில் நிவந்தக் கல்வெட்டு மூலம் அறிகிறோம்.

இந்த ஒரு குறிப்பைத் தவிர இக்கோயிலைப் பற்றி வேறு செய்திகள் நமக்குக் கிடைக்கவில்லை. இதன் முன்பும், பின்பும் சாசனங்களும், இலக்கியங்களும், புராணங்களும் இவ்வாலயம் பற்றிய செய்திகள் இல்லை.

10. நந்திகேச்சரம்

நந்திகேச்சரம் அமைந்துள்ள இடம் பற்றி மூன்று மாறுபட்டக் கருத்துக்கள் நிலவுகின்றன. 1) இந்நந்திகேச்சரம் மைசூர் நாட்டில் உள்ள நந்தீச்சரம் என்ற சிவாலயம் என்பர் ரா.பி.சேதுப்பிள்ளை. 2) செங்கல்பட்டு மாவட்டம் கருவாஞ்சேரி ரயில் நிலையத்திற்கருகில் உள்ள நந்திவரம் என்பர் திரு.செங்கல்வராயப் பிள்ளை.[3] 3) பழையாறையில் உள்ள நந்திவனமே நந்திகேச்சரம் என்பர் திரு.தி.வை.சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள்.

இந்த மூவர் கருத்தினை "பன்னிரு திருமுறை வரலாறு" என்ற நூலில் தொகுத்துக் கூறுகின்றார் வெள்ளைவாரணனார்.[46] பண்டாரத்தார் கருத்துப்படி நந்திவனமே நந்திகேச்சரம் என்பதே வலியுறுகின்றது. நந்திவனம் பழையாறையின் ஒரு பகுதியாக நிலவியது. இவ்வாலயத்தின் இன்றைய நிலை அறியப்பெறவில்லை. இது நாதன் கோயிலுக்கு அருகிலிருந்து அழிந்திருக்கக் கூடும் என்று ஊகிக்கப்படுகிறது.

இறைவன் உறையும் ஈச்வரங்களில் ஒன்றாக நந்தி கேச்சரம் குறிக்கப்படுகிறது என்பதை திருவடைத்திருத்தாண்டகம் மூலம் அறிகிறோம்.

11. அரிச்சந்திரம்

பழையாறைமாநகரில் உள்ள அரிச்சந்திரம், அரிச்சந்திரபுரமென்றும், 'உறரிபுரம்' என்றும், 'அரிபுரம்' என்றும் இன்று வழங்குகிறது. அரிச்சந்திரத்தில்

பார்குளத்தை அப்பரடிகள் "பழையாறம் பார்களும்"[47] எனக் குறிப்பிடுகின்றார். இவ்வரிச்சந்திரத்தைப் பற்றி திருவீழிமிழலைத் திருத்தாண்டகம்,

"அரிச்சந் திரத்துள்ளார் அம்ப ருளார்
அரிபிரமர் இந்திரர்க்கும் அரிய ராளார்
புரிச்சந் திரத்துள்ளார் போகத் துள்ளார்
பொருப்பரையன் மகளோடு விருப்ப ராகி
எரிச்சந்தி வேட்டு மிடத்தார் ஏம
கூடத்தார் பாடத்தே விசையார் கீதர்
விரிசங்கை எயறிக்கொண்டீவு காடும் வேடர்
விழி மிழலையே மேவி னாரே"[48]

எனச் சிறப்பிக்கும்.

அரிச்சந்திரபுரத் தமைந்துள்ள சந்திர மௌலீஸ்வரர் ஆலயமும், மகாகாளி ஆலயமும், பட்டீஸ்வரம் சிவநாதய்யர் அவர்களின் தவப்புதல்வர்களான இராசகோபலய்யர், பிச்சையய்யர், பாலு அய்யர் ஆகியோரின் பெருமுயற்சியால் திருப்பணி செய்யப்பட்டுக் குடமுழுக்கு விழாவும் சிறப்பாக அண்மையில் நடந்தேறியது.

## 12. சோழன் மாளிகை:

சோழ மன்னர்களின் மாளிகை அமைந்திருந்த பகுதியே இன்று சோழன் மாளிகை என்ற சிற்றூராகக் காட்சியளிக்கிறது. பிற்காலச் சோழ பேரரசர்களைப் பெற்றெடுத்த பெருமை இந்தச் சோழன் மாளிகைக்கே உண்டு. இச்சோழன் மாளிகையில் தோன்றிய, மாமன்னர்கள் தாம் விண்ணை முட்டும் மாபெரும் ஆலயங்களை பழையாறை நகரில், சோழன் மாளிகையின் சுற்றுப் பகுதிகளில் அமைத்தனர், எனினும் சோழன் மாளிகையில் குறிப்பிடத்தக்க, பெரிய கோயில் எதனையும் காண இயலவில்லை. மூன்று சிறிய கோயில்களே இவ்வூரில் இப்பொழுது அமைந்துள்ளன. இவற்றில் வெங்கடாசலபதி திருவிண்ணகரமும், இராசகோபால்சாமி திருவிண்ணகரமும், இராசகோபால்சாமி மிகப்பிற்காலத்தில் தோன்றியவையாகும். மிகப்பழமையான சிறிய சிவன் கோயில் சீரழிந்த நிலையில் காணப்படுகிறது.

## கோட்டை வாயில் துர்க்கை

சோழர் அரண்மனை சிதைந்தபின் இப்பகுதியில் இருந்த சிலைகள் அண்மையில் உள்ள ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டன. பட்டீச்சுரம் சுற்றாலயத்தில் உள்ள சிற்பங்களில், மகாராஜப்பிள்ளையார், சண்முகம், வைரவர், துர்க்கை ஆகியவை சோழர் மாளிகையில் இருந்து கொண்டுவரப்பட்டு இங்குப் பிரதிஷ்டை செய்யப்பட்டவையாகும்.

## 13. பாற்குளம்:

பழையாறையின் ஒரு பகுதியே பாற்குளம் ஆகும். இங்கு ஒரு தீர்த்த-மென்றும், தலமென்றும், மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன.

"பழையாற்றில் உள்ளதொரு தீர்த்தக்குளம் என்பர். தி.வை.சதாசிவ-பண்டாரத்தார். "பழையாறும், பாற்குளமும், கைச்சினம் நால்புறம்பயம், நம்மூரென்ற பெயினாரே" என்பது திருத்தாண்டகம். "சித்த வடமும், மதிகைச் சேறையர் வீரட்டம் குறித்த தத்தலம் கேதலப் புனம் உடையார்" எனத் தலமும், தீர்த்தமும் இணைந்து வருவதால், தலப்பெயரே என்று வரவேண்டுமென்ற நியதி இல்லை."[49] என்று கூறுவர் வெள்ளை வாரணார் அவர்கள்.

பாற்குளம் உறப்புரத்திற்கு அருகில் உள்ளது. மிகப்பழைய குளமாகிய பாற்குளம் பெரும்பகுதி மண்ணால் மூடப்பட்டுச் சிறுகுட்டையாக இப்பொழுது காட்சியளிக்கிறது. இச்சிறு குட்டையின் அருகே பெருங்கோயில் இருந்ததற்கான சான்றுகள் இருந்தன. பல சிலைகள் கண்டெடுக்கப்பட்டு புதிதாகக் கட்டப்-பட்டுள்ள கோயிலில் அவை வைக்கப்பட்டுள்ளன.

## 14. முழையூர்.

திருநாவுக்கரசரின் சேத்திரக் கோவையில் இவ்வூர் வைப்புத்தலமாகக் குறிக்கப் பெறுகிறது. பழையாறை மாநகரின் ஒரு பகுதியான முழையூரில் தொன்மையான சிவாலயங்கள் இல்லை. பிற்காலத்தில் எழுந்த சிவாலயம் ஒன்றில் அழகிய சிற்பங்கள், ஓவியங்கள் நிறைந்துள்ளன.

## 15. இராசராசேச்சுரம்

பழையாறை மாநகரின் பழம்பகுதிகளில் ஒன்றான இராசராசேச்சுரம் இன்று தாராசுரம் என்னும் சிற்றூராய்க் காட்சியளிக்கிறது., கி.பி.12-ம் நூற்றாண்டில் பரகேசரி, இரண்டாம் இராசராசன் (1146-1173) என்பவன் சோழ அரசனானான். இவன் பழையாறையைத் தனது முதல் தலைநகரமாக மாற்றினான். தன்னுடைய பெயரால் இராசராசபுரம் என அமைத்தான். புது அரண்மனையொன்றினைத் தாராசுரத்தில் ஏற்படுத்தினான்.

இரண்டாம் இராசராசன் பழையாறை ஆயிரத்தளி அரண்மனையில் நோயாளியாக இருந்தமையால், கங்கை கொண்ட சோழபுரத்தில் இருந்த விக்கிரம சோழனின் பேரனும், நெறியுடையப் பெருமானின் மகனுமான எதிரிலிப்பெருமானை இளவரசராக்கினான். அங்கே இறந்தான். இவர்க்குத் தீங்கு வராமல் காப்பாற்றுவதற்காகப் பெருமானம்பிப் பல்லவராயன் என்னும் முதலமைச்சர், அந்தப்புர மகளிர், மக்கள், இளவரசன் ஆகியோரை இன்று தாராசுரம் என்று வழங்குகின்ற ஊரில் அமைந்திருந்த அரண்மனையில் வைத்துக் காப்பாற்றினான் என்று கி.பி.1171-க்குரிய இரண்டாம் இராசாதிராசனின் பல்லவராயன் பேட்டைச் சாசனம் கூறுகிறது.[50] இச்சாசனக் கூற்றால் தாராசுரத்தில் பல வலிமைமிக்க படைகளும், அரண்மனைக் கட்டடங்களும் இருந்தன என்பதை நாம் அறிகிறோம். இரண்டாம் இராசராசன் குன்றமன்னதோர் கோயிலைக் கட்டினான். அஃது இன்று அய்ராவதேசுவரர் திருக்கோயில் என்று வழங்கப்படுகிறது.

தாராசுரம் கல்வெட்டுக்களில் "இராசராசபுரம்" எனப்படுகிறது. இதனைக் 'இராசபுரி' என்று தக்கயாகப்பரணி கூறுகிறது.[51] "குலோத்துங்க சோழவளநாட்டுக் கீழ்ப்பழையாறு ஆயின ராசபுரம்" என வரும் கல்வெட்டுக் குறிப்பால் பழையாறை மாநகரின் கிழக்குப் பகுதியில் தாராசுரம் அமைந்திருந்ததை அறியலாம். கி.பி.1486 -க்குரிய கல்வெட்டு "இராசாசுரம்" எனக் கூ

கூறுகிறது. இராசபுரம் என்பது இன்று தாராசுரம் என வழங்கி வருகிற-தென்னாம். இவ்வூரில் இரண்டாம் இராசராசன் கட்டிய "ஸ்ரீராசராசேச்வரம்" கோயில் இன்று ஐராவதேசுவரர் திருக்கோயில் என வழங்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு தொல்லியல் துறையினர் இதனைப் பரிசெடுத்து, சீர் செய்து வருகின்றனர். சுற்றுலாப் பயணிகளைக் கவர சுற்றிலும் பூங்கா அமைக்கவும் திட்டமிட்டிருக்கிறார்கள்.

பலிபீடத்தின் தென்புறத்தில் அமைந்த படிக்கட்டு வழி, யாளியும், யானையும் இழுப்பதாக அமைந்திருக்கிறது. படிக்கட்டுகளின் இருபுறங்களிலும் "அழகுக் கன்னியர்" சிலைகள் உண்மை வடிவம் போலவே காட்சி அளிக்கின்றன. படிக்கட்டுக்களைத் தட்டினால் பலவிதமான ஓசைகள் ஒவ்வொரு படிக்-கட்டிலிருந்தும் எழுகின்றன. இவ்விசை கருதி 'பாடும் படிக்கட்டுகள்' என்று மக்கள் கூறுகின்றனர். சுற்றுலாப் பயணிகளும், குழந்தைகளும் இப்படிக் கட்டுகளைத்தட்டி, இன்னோசை கேட்டு இன்புறுவதையும், ஒரே கல்லில் செதுக்கப்பட்ட எருது, யானையும் உருவம் மாறிமாறித் தெரிவதையும் கண்டு களிப்படைகின்றனர்.

கல்வெட்டுக்கள்
-----------

தெற்கிந்தியக் கோயில் சாசனங்கள் இராசராசன் காலத்தவையாகத் ஐந்து கல்வெட்டுக்களைக் குறிக்கின்றன. மத்தரா கோபுரத்து அடியிலாவே விட்ட திருப்பணிகள், திருத்தேர், கிழு முதலான வழிகளுக்காக பதினாறாவது ஆட்சியாண்டில் கொடை தரப்படுபெற்றது. திருநாமத்துக் காணியாக நிலம் தரப்பட்டமையும், வில்லிப்பேடையான் என்பவன் இறைவனை எழுந்தருளிக்கவும், வழிபாட்டுக்கும் நிலம் தந்தமையும் 22-வது ஆட்சியாண்டில் நடந்த நிகழ்ச்சி-களாகும்.[52]

குலோத்துங்க சோழவளநாட்டு அட்டத்தூர் நாட்டவர் இராசராச ஈஸ்வரத்தில் திருப்பணி நடைபெற நிலம் தந்தனர் என மாறவர்மன் ஸ்ரீவல்லபனின் 10-ம் ஆண்டு கல்வெட்டு கூறுகிறது.

எழிலுடன் காட்சி தருகின்ற இராசராசேச்சுரம் கோயில் அமைந்துள்ள அருமையும், பெருமையும் வாய்ந்த அருள்மிக்க அய்ராவதேசுவரை, "இராசராசபுரம் உடையார் இராசராச ஈஸ்வரமுடையார், இராசராசேஸ்வரம் உடையார் இராசராசரம் உடைய நாயனார்" என்று கல்வெட்டுக்கள் புகழ்கின்றன.[53]

வீரபத்திர சுவாமி கோயில்
---

சோழநாட்டில் வாழ்ந்த வீர சைவர்களின் குலதெய்வமாகத் தாராசுரத்தில் அமைந்துள்ள இவ்வீரபத்திர சுவாமிகள் பண்டு முதல் வழிபட்டு வந்துள்ள செய்தியைத் தக்கயாகப் பரணியால் அறிகின்றோம். பழையாறை அரண்மனையில் சோழ மன்னர்கட்கு அரச குருவாக அவையில் சோழ [illegible] விளங்கியவர் ஒட்டக் கூத்தர். இப்புலவர் பெருமான் விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்க சோழன், இரண்டாம் இராசராசசோழன் ஆகிய மூவர் ஆட்சிபுரிந்த காலங்களில் அவைக் களப் புலவராகவும், அரச குருவாகவும், அந்தரங்க நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் முறையில் மிக நெருக்கமானவராகவும் தொடர்ந்து விளங்கினார்.

ஒரே புலவன் மூன்று சோழ மன்னர்களின் அரசியல் நிகழ்ச்சிகளில் தொடர்ந்து பங்குபெற்று வந்த வரலாற்றினை இதற்கு முன்னும், பின்னும் நாம் கண்டதில்லை. நீண்ட நாட்கள் பழையாறை மாநகரில் வாழ்ந்த இப்புலவர் பெருமான் மறைந்ததும் இம்மாநகரில்தான். இவரது பூத உடல் வீரபத்திரசுவாமி ஆலயத்தில் சமாதி நிலையில் மிக மதிப்போடும், மரியாதையோடும் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

16. நந்திபுர விண்ணகரம்:
---

இன்றைய நாளில் நாதன் கோயில் என்று வழங்கும் ஊர் முன்னர் "நந்திபுரவிண்ணகரம்" என்று வழங்கப்பட்டது. இதன் பொருள் நந்திபுரத்தில் இருந்த விஷ்ணுவின் கிரகம் என்பதாகும். இக்கோயில் இரண்டாம் நந்திவர்மப்

பல்லவனால் எடுப்பிக்கப் பெற்றது. திருமங்கையாழ்வாரது பாடல்கள் இதனை உணர்த்தும்.

"............... மயில்களாடு பொழில்சூழ் நந்திபணி
செய்த நகர் நந்திபுர விண்ணகரம் நண்ணு மனமே."[54]

எனும் ஆழ்வார் வாக்கினால் அறியலாம்.

கோயில்பகுதிகள்:
-------------

இக்கோயிலை பலிபீடம், திருக்கொடித்தேவர், கருடாழ்வார் மண்டபம், மகாமண்டபம், அர்த்தமண்டபம், கருவறை என்னும் பலபகுதிகளாகப் பிரிக்கலாம். நுழைவு வாயிலைக் கடந்ததும் பலி, திருக்கொடித் தேவர் திருவுருவங்கள் உள்ளன. ஸ்ரீகருடாழ்வார் அஞ்சலி, உருவத்துடன் காட்சித்தருகிறார். இவர் ஸ்ரீமானுடையதொரு மண்டபத்தே எழுந்தருளியுள்ளார்.

அடுத்தமைவது பதினாறு கால்களாலாய மண்டபம். இது கலைச்சிறப்புடையது. இம்மண்டபம் பிற்காலத்திய இணைப்பு 1729-ம் ஆண்டு செப்டம்பர் 5-ம் தேதி, சுக்ல வருடம் 32-ம் நாள் இம்மண்டப கைங்கரியம், கும்பகோணம் பெரிய தெரு சடகோப அய்யங்காரின் பாரியை கனகம்மாளால் செய்யப்பட்டது.[55] என்ற சாசனம் இதற்குச் சான்று.

ஸ்ரீவிமானம்.
-------

இவ்விமானம் "நந்திவிமானம்" எனத்தலபுராணத்தில் கூறப்படும். வடபுறத்திருச்சுற்றாலையில் நுழைந்தவுடன் பல்லவர் காலக் கட்டடக்கலைக்கு எடுத்துக் காட்டாக மிக அழகிய சிலைகள் விமானத்தில் அமைந்துள்ளன. அடிப்பகுதி அகன்று, மிக வளைந்து குறுகிச் செல்லும் அமைப்புடையது. இவ்விமானமும், திருச்சுற்றும், பல்லவர் காலக் கலைத்தொன்மை வாய்ந்தவை.

கருவறை:
--------

கருவறையில் மூலவர் ஸ்ரீநிவாசர், காட்சித் தருகிறார். இங்கு மூலவர், உற்சவர், நித்யோத்சவர், பலிப்பேரர், யாகபேரர் என்னும்

பஞ்ச பேர்களும் உள்ளனர். கருவறையின் தெற்குச் சுவரில் நாற்கால்களுடன் நரசிம்ம பெருமாளும், வடபுறச் சுவரில் நான்முகனும் திருமாலும் வணங்குபவராக அமைக்கப்பட்டுள்ளன.

## 17. கோபிநாதப்பெருமாள் கோயில்

கோபிநாதப் பெருமாள் கோயில் இன்று கோபிபெருமாள் கோயில் என்று வழங்குகிறது. இக்கோயிலின் ஒரு பகுதியைக்கூட முழுமையாகக் காண இயலவில்லை. அனைத்தும் முற்றும் அழிந்து விட்டன. இழந்த பகுதிகளில் கருங்கற்கள் அருகிலேயே குவிந்து கிடக்கின்றன.

இடிந்து கிடக்கும் கோயிற்பகுதிகளைக் கூர்ந்து நோக்கினால் ஓரளவு இவ்வாலயத்தின் பழைய நிலையை அறியலாம். உயர்ந்த கோபுரம், பல திருச்சுற்றுக்கள், திருமுற்றம், இரண்டாவது திருவாயில், திருமண்டபம், அர்த்த மண்டபம், கருவறை முதலிய எல்லாப்பகுதிகளையும் உடையதாக அமைந்திருந்தது இவ்வாலயம் எனலாம்.

விசயநகர அரசர் காலத்தில் பழையாறையில் இருந்த பெரிய விண்ணகரம் இதுவே என்பதில் சிறிதும் ஐயமில்லை.

### கல்வெட்டுக்கள்:

கருவறையின் வெளிப்புறம் ஜகதிப் படைகளில் கல்வெட்டுக்கள் காணப்பெறுகின்றன. இரண்டாம் வாயிலும், கோபுரமும் அமைத்ததாகக் கூறும் சாசனம் முதலாயின இன்மையில் படியெடுக்கப்பெற்ற புதிய சாசனங்கள் அரசுத்-தொடர்பிலா ஆய்வாளர் படியெடுக்க முடியாத ஒரு சூழல் அங்குள்ளது. எல்லாக் கல்வெட்டுக்களும் படி எடுக்கப்படுமானால் இக்கோயில் பற்றி உண்மைகள் வரலாற்றுவருக்குப் புலனாதல் உறுதி.

### சோழ சாசனங்கள்:

திரிபுவனச் சக்கரவர்த்திகள் குலோத்துங்க சோழதேவரின் 12-வது ஆட்சியாண்டில் கிழார்க் கூற்றத்துப் பாண்டிய குலபதி வளநாட்டுச் சோழபுரத்துச் செவ்வாக்கு உடையார் என்பார் கோபிநாதப் பெருமானுக்குத்

திருவமுதுபடி, திருவலங்காரம் திருவடி முதலானவற்றிற்காக அவ்வூரையடுத்த சோழ புரத்தில் திருவடியாக நிலமும் தந்துள்ளார்.[56]

இதே அரசனுடைய 21-ம் ஆட்சி ஆண்டில் கிழார்க் கூற்றத்து மேல் ஏயல் வன்றிருடையான், மோற்றன் வெல்லோடையான் எம்பவன் கோபிநாதப் பெருமாள் திருவிடையாட்டமாகக் விராவயல் தடிக்கொல்லையூர் உட்பட்ட நிலமும், திருத்தோப்பும் கூடியுள்ளதுமான நிலத்தை "அறசியான் புண்யமாக பட்டன்" கையில் இக்கோபிநாதன் சந்நிதியில் மனம் பொருந்திக் கொடுத்தான்.[57]

இம்மன்னனின் 32-வது ஆட்சி ஆண்டில் பாண்டியக் குலாசனி வளநாட்டுக் கிழார் கூற்றத்துச் சோழபுரம் கொல்லையூருடையான் இக்கோபிநாதப் பெருமானுக்குத் திருவிடையாட்டத்து நிலமாகக் கோபிநாதநல்லூரில் பெருமானுக்கு ஒன்றரை வேலி நிலம் தந்தான்.[58]

<u>விசயநகர அரசர் காலத்தில்</u>

சகம் 1372 (கி.பி.1450 நவம்பர் 21) குரிய வீரமல்லிகார்ச்சுன தேவமகாராசனுடைய கல்வெட்டு திருமலைய தேவமகாராசர் கோவிந்தப் பெருமானுக்குத் திருப்பணிக்கும், திருச்சாத்துக்கும், திருக்குளம், திருத்தேர், திருநாளுக்கும் நிலமாக,

"முடிகொண்ட சோழபுரம் படுகைக்குக் கிழக்கு
திருமலை யார்மக்குத் தெற்கு
கோமாறக் கொல்லைக்கு மேற்கு
படுபத்தி ராய சோழபுரத்துக்கு வடக்கு"

என்னும் பெருநான்கெல்லைக்குட்பட்ட நிலம் இறையிலியாக்கித் தரப் பெற்றது.[59]

இதே அரசன் காலத்தில் சகம் 1372-இல் சாளுவ திருமலை தேவமகா ராசர் திருச்சந்தி முன்றமான் முடிகொண்ட சோழபுரத்தில் கோபிநாதப் பெருமாளுக்குத் திருவிருப்பு, திருத்தோப்பு திருமடைவிளாகம் கண்டதாகக் கூறும் இக்கல்வெட்டில் எல்லைக் கூறப்பெறும் பகுதியில் பழையாறையில் பழம்பஞ்சிகளில்

பெயர்கள் கூறப்பட்டுள்ளன.[60]

கி.பி.1450-இல் செப்டம்பர் 17-ஆம் நாள் சமமான மல்லிகார்ச்சுன தேவராயர் சாசனமொன்று சாளுவத் திருமலைநந்தேஷமகாராசர் இந்தக் கோபிநாதப் பெருமானுக்கு அலங்காரத் திருப்பணிக்காக இந்தக் கோயிலைச் சுற்றி சருவமானியமாகவே அனுபவித்துக் கொள்வதாகக் கோவிந்தாதன் திருமலைப்பதிதி மண்டபம் முதல்கொண்டு தந்ததாகக் கூறும்.[61]

## 18. இராசகம்பீரேச்சரம்

இரண்டாம் இராசராசனின் சிறப்புப் பெயர்களில் "இராசகம்பீரன்" என்பது ஒன்றாகும். தாராசுரம் ஐராவதேசுவரர் கோயில் திருமதிலின் வெளிப்புறத்தில் உள்ள சாசனமொன்றில் இந்நாட்டு பள்ளிப்படை இராஜகம்பீரேச்சுர முடைய மகாதேவர்க்குத் தரப்பெற்ற நிவந்தங்கள் கூறப்பட்டுள்ளன. சாசனம் எழுதப்பட்டுள்ள சுவரின் அடிப்பகுதி பூமியில் புதையுண்டுள்ளது. இச்சாசனம் மூன்றாம் குலோத்துங்கன் காலத்ததாகும்.[62] இச்சாசனத்தால் பழையாறையைத் தன்னகத்தே கொண்ட திருநறையூர் நாட்டுப் பகுதியில் இப்பள்ளிப் படைக்கோயில் இருந்தமை அறியப்பெறும்.

இராசகம்பீரன் என்பது இரண்டாம் இராசராசனின்சிறப்புப்பெயராதலின் இப்பள்ளிப்படை (சமாதி) ஆலயம் அவனுக்கு உரியதாகும். இவ்வாலயம் இன்று உள்ளதா? எப்பெயரால் வழங்கப் பெறுகின்றது? என்பது அறியப் பெறவில்லை.

## 19. பஞ்சவன் மாதேச்சரம்:

பஞ்சவன் மாதேவி; பழையாறைச் சோழப் பெருமன்னர்கள் வரிசையில் திலகமெனத் திகழ்ந்தவன் மாமன்னன் முதலாம் இராசராசன் ஆவான். இப்பெருந்தகையோரின் மனைவியருள் ஒருத்தியே பஞ்சவன் மாதேவி. இத்தேவி சேரர்குல குறுநில மன்னர்களுள் ஒருவராகிய பழு வேட்டரையரின்

மகளாவாள். திருச்சி மாவட்டம் உடையார் பாளையம் தாலுகாவில் உள்ள பழுவூரே இச்சிற்றரசரின் ஊராகும். பஞ்சவன் மாதேவி என்ற பெயரில் முதற்பராந்தக, உத்தம சோழர் மற்றும் இராஜேந்திர சோழன் போன்ற மன்னவர்களின் மனைவியர் இருந்த போதும், இத்தேவியைப் போல் சோழர்கள் வரலாற்றில் யாரும் புகழடையவில்லை. பஞ்சவன் மாதேவி அளித்த அறக்கொடைகளும், சாதனைகளும் மிகப்பலவாகும்.

திருப்புகலூர்க் கல்வெட்டால் இத்தேவியின் பிறிதொரு பெயர் நக்கன் தில்லையழகி என அறிய முடிகிறது.[63] எண்ணிலா இறைப்பணிகள் செய்த இத்தேவியின் தொண்டும் ஆற்றலும் மாமன்னன் இராசேந்திர சோழனால் நினைவாலயம் எடுக்குமளவு தூண்டியிருந்தன என்றால் அது மிகையாகாது.

<u>பஞ்சவன் மாதேச்வரம் பள்ளிப்படை:</u>

இத்திருக்கோயிலில் காணப்படும் இராசேந்திர சோழனின் கல்வெட்டில் இதனைப் பழையாறையான முடிகொண்ட சோழபுரத்துப் பள்ளிப்படை, பஞ்சவன் மாதேச்சுரம் என்றே குறிப்பிடுகிறது.[64]

மறைந்த பஞ்சவன் மாதேவி கல்லறையின் மீது எழுப்பப்பட்ட பள்ளிப்படைக் கோயிலான இவ்வாலயம் கலைச்சிறப்பால் வியத்தகு சிறப்புகள் பல பெற்றுள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் சோழர்கள், பல்லவர்கள், பழுவேட்டரையர் இவர்களின் தனித்தனிக்கலை மணம், காலந்தோறும் ஒருங்கே சேர்ந்து புகழ்மணம் பரப்புகிறது. திருச்சுவரில் தேவ கோஷ்டங்களில் உள்ள விநாயகப்பிச்சைத் தேவர், ஆலமர், செல்வர், இலிங்கோத்பவர், பிரமன், துர்க்கை, அர்த்தநாரி, கங்காதரர் போன்ற சிற்பங்களின் அழகு, இராசேந்திர சோழன் காலத்துச் சிற்பக் கலையின் தனி முத்திரையாகும்.

இரண்டு சிவபெருமானின் கோலநிலைகளில் பல்லவர்களின் கலைமணம் கமழ்கிறது. இவை கி.பி.710-715 வரை ஆண்ட இரண்டாம் நந்திவர்மப் பல்லவனின் காலத்தில் அவனது கடிநகரான பழையாறையில் இடம் பெற்றிருந்த

சிலைகளாய் இருந்திருக்கலாம்.

மறைந்துபோன திருக்கோயில்களின் பட்டியலில் இடம்பெறாவண்ணம் காலத்தை வென்று நின்று கலைப் பேழையாம் பஞ்சவன் மாதேச்சுரம், பழையாறை மாநகரின் எஞ்சியுள்ள ஒரே பள்ளிப்படை ஆலயமாகும்.

20. திருவரஞ்சுழி

அரசலாற்றங்கரையின் தென்கரையில் அமைந்துள்ள திருவலஞ்சுழி பல்லவர்-காலப் பழமை உடையது. சோழன் மாளிகை அரண்மனைக்கு அருகில் அமைந்திருந்த இவ்வாலயம் அச்சோழ மன்னர்களின் கவனத்தையும், மனத்தையும் கவர்வதில் வியப்பில்லை.

இலக்கியம்:

இக்கோயிலைப் பற்றிய பழைய புராண வரலாறொன்று வடமொழியில் எழுதப்பட்டுள்ளதாகக் கூறுவர். சேக்கிழார் பெருமான் தமது பெரிய புராணத்தில் (திருஞான சம்பந்தர் புராணம், திருநாவுக்கரசர் புராணம்) இவ்வூரைப் பற்றிய சிறப்புக்களை விளக்குகிறார்.

திருஞான சம்பந்தர் இத்தலத்தில் தம் குழாங்களுடன் பல நாள் தங்கி அன்னையின் தேனினும் இனிய தேவாரப் பாடல்கள் அருளிச் செய்து, மீண்டும் இங்கு வந்து தங்கியிருந்தார் எனச் சேக்கிழார் பெருமான் தம் பெரிய புராணத்தில் மிக நயம்படக் கூறுகிறார்.[65] திருஞான சம்பந்தரும், இத்திருவரஞ்சுழி இறைவன் கற்பக நாதேஸ்வரர் (வலஞ்சுழி நாதர்) மீது பதிகம் பாடியுள்ளார்.[66] திருநாவுக்கரசரும் கைலாவய வலஞ்சுழி நாதர்மீது பதிகம் பாடிச் சிறப்பிக்கின்றார்.[67]

கல்வெட்டுக்கள்:

இவ்வாலய உள் சுற்றுச் சுவரில் காணப்படுகிற கல்வெட்டுக்கள் பல வரலாற்று உண்மைகளை நமக்கு விளக்குகின்றன. சோழமன்னர்களான திரிபுவனச்-

சக்கரவர்த்தி, திரிபுவன வீரதேவன் மதுரையையும், இலங்கையையும், கருவூரையும் கைப்பற்றியதுடன் பாண்டியர் முடியும் கொண்ட சோழன் இராஜாதிராஜதேவன் இராசகேசரிவர்மன் பரகேசரி வர்மன். இராஜராஜதேவன் முதலிய சோழமன்னர்கள் ஆட்சிக் காலங்களில் கோயில் வழிபாட்டுக்கு நிலங்களும் நந்தா விளக்குகளும் வழங்கப்பட்டுள்ளன.[68] சிவபாதசேகர தேவன் என்னும் பட்டம் பெற்ற இராஜராஜதேவன் என்னும் பட்டம் பெற்ற திருவலிவதத்தில் தங்கியிருந்த பொழுது தனது பிறந்தநாள் திருவிழாவாக (நாள்மங்கல விழா) நிலங்களைத் தானம் செய்துள்ளான். திருநாவுக்கரசர், திருவாதவூரார் கண்ணப்பர் முதலிய மூர்த்திகளின் வழிபாட்டுக்காகவும், நிலங்களையும் தந்துள்ளான்.[69] இராஜராஜ தேவனுடைய பட்டத்தரசியார் லோக மாதேவியார் புதல்விகள் குந்தவையும், மாதேவடிகளும் லோகமகேந்திர பாலதேவர் கோயில்களுக்கு நகைகள் வழங்கியுள்ளனர்.[70] சுவேத விநாயகருக்கும் நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன.[71]

இறைவன் பெயர்; கற்பக நாதேஸ்வரர்.
(வலஞ்சுழி நாதர்)
இறைவியின் பெயர்; பெரிய நாயகி.
தலவி-நாயகர் ; சுவேத விநாயகர்.
வெள்ளை வாரணம்.

தேவேந்திரனால் கடல் நுரையைக் கொண்டு செய்யப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது என்பது பழைய வரலாறு.

தீர்த்தங்கள் - 1. காவேரி, 2. அரிசொல்நதி (அரசலாறு)
3. ஜடா தீர்த்தம் (கோபுரத்தை அடுத்த உட்புறமுள்ள பழமையான குளம்)

தலவிருட்சம். வில்வமரம் (அம்மன் சந்நிதியில் உள்ளது)

தலப்பெயர்:
---------

காவிரியை வலஞ்சுழித்து ஓடுவதாலும், வெள்ளை விநாயகர் வலஞ்சுழித்து-

மூர்த்தியாக இருப்பதாலும் திருவலஞ்சுழி எனப்பெயர் வழங்கலாயிற்று. சக்திவனம், திருநாவர்த்தம், தட்சிணாவர்த்தம் எனவும் பெயர்கள் உண்டு. தீர்த்தம், மூர்த்தி, தலம் என்ற மூன்று பெருமைகளையும் உடையது இத்தலம்.

அருள் பெற்றவர்கள் "இவ்வாலய இறைவன் வலஞ்சுழி நாதனை வழிபட்டுப் பேறு பெற்றவர்கள். 1. சோழமன்னன், 2. ஏரண்டமுனிவர். 3. ஆதிசேடன். 4. பராசக்தி, 5. திருஞானசம்பந்தர், 6. திருநாவுக்-கரசர், 7. பிரமன், 8. இந்திரன், 9. ஒரு மணப்பாம்பு.

## 21. சுந்தரப்பெருமாள் கோயில்:

அரசலாற்றிற்கும், திருமலைராயன் ஆற்றிற்கும் இடையில் அமைந்துள்ள வளமான ஊர் சுந்தரபெருமாள் கோயிலாகும். கோயில் பெயரே ஊரின் பெயராக விளங்குகின்றது. ஒரு காலத்தில் வன்னிமரங்கள் மிகுந்திருந்தமையால் இத்தலத்திற்கு 'சமிவனம்' என்ற வடமொழிப் பெயரும் உண்டு.

இறைவன்; ஸ்ரீசௌந்தரராஜப் பெருமாள், இறைவி ஸ்ரீசௌந்தரவல்லி.

உற்சவர் ஸ்ரீகோபாலர்.

பிறதெய்வங்கள் ஸ்ரீஆண்டாள், கருப்பையா.

### ஆலயம் கண்ட மன்னன்

ஆதியில் இக்கோயில் தேவேந்திரனால் அமைக்கப்பட்டது என்று புராணம் கூறும்.[72] இதனை ஏற்கக் கொள்ளமுடியாது எனினும் இவ்வாலயம் சுந்தரச் சோழன் என்று அழைக்கப்பட்ட இரண்டாம் பராந்தகச் சோழனால் அமைக்கப்பட்டிருக்கலாம் என்பர் ஆய்வாளர்.[73] யாரால் கட்டப்பட்டது என்பதற்குத் தக்க சான்று இல்லை. பின்னர் வந்த சோழமன்னர்கள் காலந்தோறும் இவ்வாலயத்தைப் புதுப்பித்து விரிவு படுத்தினர்.

"புதுமைப் பல்கலை வேறு புரிவதின் பழைய தொன்மை
விரிவுளி புதுக்கு வோர்க்கு மிகப்புண்ணியந்தான் எய்தும்"[74]

என்ற சான்றோர் வழிநின்ற புதியதோர் ஆலயத்தை அமைப்பதைக் காட்டிலும் பழமையானக் கோயிலைப் புதுப்பித்தல் மிக்க புண்ணியத்தைத் தரும் என்ற அறிவுவழியில் பின் வந்த சோழமன்னர் இவ்வாலயத்தைக் காத்தனர்.

மேற்கு எல்லை:

பழையாறை மாநகரின் கிழக்கு எல்லையாக நந்திபுரவிண்ணகரம் எனும் நாதன் கோயிலும், மேற்கு எல்லையாக இச்சுந்தரபெருமாள் கோயிலும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பழையாறை மாநகரின் கிழக்கு எல்லையும், மேற்கு எல்லையும் வைணவத்தலங்கள் அமைந்துள்ளமையும் சுட்டத்தக்கதாம்.

கல்வெட்டு

இக்கோயிலில் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. எனினும் சிதைந்து விட்டன. முழுமையாக உள்ள கல்வெட்டுக்கள் மூன்று.

1. இராஜராஜ தேவசோழனது 21-வது ஆட்சி ஆண்டில் பெருமாளின் ஒரு திருவிழாவிற்காக நாலுமாவும், முந்திரைக் காணியும் கொண்ட நிலம் வழங்கியுள்ளது.[75] இக்கல்வெட்டு சுந்தரராஜப் பெருமாள் கோயில் கோபுரப்படிகளில் உள்ளது.

2. சகம் 1193-இல் விசவாலய ஆண்டில் பிரதாபராயதேவர் இரண்டு வேலி நிலம் பெருமாளுக்கு வழங்கினார்.[76] இக்கல்வெட்டும் சுந்தரராஜப் பெருமாள் கோயில் கோபுரப்படிகளில் உள்ளது.

3. சகம் 1299-இல் நள ஆண்டில் விருப்பாட்ச தேவராயர் பன்னிரண்டு வேலி நிலம். பெருமாளுக்கு வழங்கியது.[77] இக்கல்வெட்டும் மேற்படி இடத்தில் உள்ளது.

இக்கல்வெட்டுக்களால் பிற்காலச் சோழ மன்னர்களும், விசயநகரத்தரசர்களும் இக்கோயிலைக் கண்காணித்து நிலங்கள் வழங்கியிருப்பதும், 13-ஆம் நூற்றாண்டிலிருந்து கோயில் சீரும் சிறப்பும் கொண்டு விளங்கிவந்திருப்பதும் தெரியவருகின்றன.

## முடிவுரை:

பெரிய புராணமும், தேவாரமும் காட்டும் சான்றுகளின் படி இங்குச் சமணபௌத்தர் வாழ்ந்தனர் எனலாம். ஆனால் அம்மதத்தினர் இங்கு வாழ்ந்ததற்குரியச் சான்றுகள் ஒன்றும் இன்று கிடைக்கவில்லை.

பழம்பதியாம் பழையாறை மாநகர் இன்று பேரூர். சிற்றூர்களாகச் சிதைந்து விட்டது. கீழ், மேல் ஆறு கல் தொலைவும், தென், வடல் அய்ந்து கல் தொலைவும் உடைய மாநகராய் ஒரு காலத்தே திகழ்ந்தது. இப்பரப்பிலே கால வெள்ளத்தால் அழிந்தன போக எஞ்சியுள்ள சில ஊர்களும், கோயில்களும் இப்பழம் நகரின் புகழ்மிக்க வரலாற்றினைப் பறை சாற்றுகின்றன.

அங்கே காணப்படும் கல்வெட்டுக்களும், சிற்பங்களும், பிற இலக்கியக் குறிப்புகளும் இப்பழம்பெரு நகரின் புகழ்பாடுகின்றன.

சங்ககாலச் சோழரின் எஞ்சியோர் வாழ்விடமாகவும், பல்லவரின் புகுமிடமாகவும், பிற்காலச் சோழர் மீண்டும் தலையெடுத்த இடமாகவும், நாயக்கமன்னரும், தனி பாராட்டிய இடமாகவும் தொடர்ந்த பழையாறை பழம்பதி பல ஆயிரம் ஆண்டு வரலாற்றின் நிலைக்களமாக அமைந்தது எனலாம்.

### அடிக்குறிப்புகள்

1. சேக்கிழார் சுவாமிகள் - திருத்தொண்டர் புராணம் - திருநாவுக்கரசர் சுவாமிகள் புராணம். பா.294-300.
2. மேற்படி நூல், பா.294-300.
3. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் - திருமங்கை -யாழ்வார் பாசுரம் - 10 -ஆம் திருமொழி. திசை. பா.7.
4. சேக்கிழார் சுவாமிகள் - திருத்தொண்டர் புராணம் - திருநாவுக்கரசர் புராணம் - பா.294-300.

5. க.சுவர்ணகாளீச்சுரன் - பழையாறைத் தலவரலாறு. ப.23.

6. மேற்படி நூல், ப.23.

7. Epigraphia Indica. Vol. 22. PP.267-281.

8. சேக்கிழார் சுவாமிகள், - திருத்தொண்டர் புராணம்." -
   திருநாவுக்கரசர் சுவாமிகள் புராணம். பா.294.

9. மேற்படி நூல், ப.192.

10. சேக்கிழார் சுவாமிகள் - திருத்தொண்டர் புராணம் -
   திருஞான சம்பந்தன் புராணம். பா.389.

11. தி.வை.சதாசிவ பண்டாரத்தார் - பிற்காலச் சோழர்
   சரித்திரம், பக் 8-9.

12. மேற்படி நூல். ப.9.

13. மேற்படி நூல் ப.134.

14. மேற்படி நூல் ப.135.

15. திருஞானசம்பந்தர் தேவாரம் 3:120:9.
   தேவாரம் அடங்கல் முறை - மயிலை இளமுருகனார் பதிப்பு -
   சென்னை - 1953.

16. சேக்கிழார் சுவாமிகள், திருத்தொண்டர் புராணம்,
   திருநாவுக்கரசர் புராணம், பா.298 - 300.

17. மேற்படி நூல், பா. 300.

18. No.254 and 255 of 1927. S.I.T.

19. Ins. Vol. II. P. 543 ins No.548.

20. தஞ்சைக் கோயில் கல்வெட்டுகள், தமிழக அரசு தொல்லியல் துறை
   வெளியீடு கல்வெட்டு எண் 7. 41 பக்.54-59. S.I.T.Vol.II.No.66.

21. சேக்கிழார் சுவாமிகள் - திருத்தொண்டர் புராணம் திருநாவுக்கரசர்
   புராணம் - பா.294 - 300.

22. மேற்படி நூல், பா. 294 - 300.

23. சுந்தரர் தேவாரம் - 7:35:1. தேவாரம் அடங்கன் முறை - மயிலை இளமுருகனார் பதிப்பு - சென்னை - 1953.

24. சேக்கிழார் சுவாமிகள், திருத்தொண்டர் புராணம். திருஞானசம்பந்தர் புராணம், பட்டீச்சரத்து முத்துப் பந்தர் பெறுதல் - பா.390.

25. சேக்கிழார் சுவாமிகள் - திருத்தொண்டர் புராணம் திருஞான சம்பந்தர் ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணம். பா.93.

26. மேற்படி நூல் பா.94.

27. தஞ்சைக் கோயில் கல்வெட்டு எண். 7. ப.54 - 59. 3:73:4.

28. சேக்கிழார் சுவாமிகள், திருத்தொண்டர் புராணம், திருஞானசம்பந்தர் புராணம் - பா-5,28,30

29. மேற்படி நூல் பா-3,73,2,

30. a) A.R.E. Year 1927 ins No.257 - 261

b) South Indian Temple ins.Vol.II.PP.12. 569 - 571, ins 577 - 578.

c) Topographical List of ins. Vol.II.P.1235.

31. மேற்படி நூல், ப.1235.

32. மேற்படி நூல், ப.1235.

33. மேற்படி நூல். ப.1235.

34. சேக்கிழார் சுவாமிகள், திருத்தொண்டர்புராணம், திருஞான சம்பந்தர் புராணம் பா.397.

35. திருநாவுக்கரசர் தேவாரம் - 4:96:7. தேவாரம் அடங்கன் முறை - மயிலை இளமுருகனார் பதிப்பு - சென்னை - 1953.

36. சேக்கிழார் சுவாமிகள் - திருத்தொண்டர் புராணம், திருஞானசம்பந்தர் புராணம், பா.390.

37. மேற்படி நூல், பா.391.

38. சேக்கிழார் சுவாமிகள், திருத்தொண்டர் புராணம், திருநாவுக்கரசர் புராணம் - பா.193.

39. South Indian Temples Inscription Vol.II
No 570 to 576.

40. A.R.E. Year 1927 Part II P.83.

41. தஞ்சைக் கோயில் கல்வெட்டுகள், தமிழக அரசு தொல்லியல் துறை
வெளியீடு, கல்வெட்டு எண் 7. பக். 54 - 59.

42. மேற்படி நூல், ப.55.

43 மேற்படி நூல், ப.57.

44. மேற்படி நூல், ப.59.

45. மேற்படி நூல், ப.56.

46. க.வெள்ளைவாரணர் பன்னிரு திருமுறை வரலாறு, பாகம்.1. ப.929.

47. திருநாவுக்கரசர் தேவாரம்.6.13:1.

48. மேற்படி நூல், 6:51:10.

49. க.வெள்ளைவாரணர், பன்னிருதிருமுறை வரலாறு, ் பாகம்.1. ப.929.

50. A nnual Report of Epigraphy Year. 1923 - 24,
Vol.II.P.103. Eprigraphia Indica.Vol.21.PP.164-192.

51. ஒட்டக்கூத்தர், தக்கயாகப் பரணி, கடைத்திறப்பு, தாழிசை.15-20.

52. South Indian Temples Inscription. Vol.II. No.580.

53. மேற்படி நூல்.

54. நாலாயிரத்திவ்விய பிரபந்தம், திருமங்கையாழ்வார் பாசுரம் - பெரிய
திருமொழி, திருநந்திபுர.

55. வே.மகாதேவன், வரலாற்றுப் போக்கில் பழையாறை மாநகர்.ப.92.

56. மேற்படி நூல், ப.99.

57. மேற்படி நூல், ப.99

58. மேற்படி நூல், ப.99.

59. மேற்படி நூல், ப.100.

60. மேற்படி நூல், ப.100.

61. மேற்படி நூல், ப.100.

62. மேற்படி இச்செய்தியைப் பேட்டியின் போது திரு.ந. சேதுராமன்.
(இயக்குநர் ராமன் & ராமன், கும்பகோணம்)

63. South Indian Inscription Vol.II.No.620.

64. மேற்படி நூல் - 620.

65. சேக்கிழார் சுவாமிகள், திருத்தொண்டர் புராணம், திருஞானசம்பந்தர் புராணம், பா. 378 - 383.

67. திருநாவுக்கரசர் தேவாரம், 5:60:1:10.

66. திருஞான சம்பந்தர், 3:106:1.11.

68. South Indian Inscriptions Vol.II. ins No.618 - 619.
சுவாமிமலை, திருவலஞ்சுழி தல வரலாறு, ஸ்ரீசுவாமிநாத சுவாமி திருக்கோயில் வெளியீடு.

69. Ibid. ins. No. 620 - 624.

70. Ibid. ins. No. 625 - 629.

71. Ibid. ins. No. 630 - 634.

72. சௌந்தரராஜப் பெருமாள் கோயில் தல வரலாறு தேவஸ்தான வெளியீடு.ப.15.

73. மேற்படி நூல், ப.16.

74. மேற்படி நூல், ப.15.

75. South Indian Inscription Vol.II ins No.115 -117-

76. Ibid. ins. 116.

77. Ibid. ins. 117.

## பழைய ஏறையின் சிறப்பும் பழமையும்

## பழையாறையின் சிறப்பும், பழமையும்

பிற்காலச் சோழர்களுக்கும், பல்லவர்களுக்கும் தலைநகராக விளங்கிய பழையாறை மிகுந்த தொன்மையுடையது. கி.பி. 3-ஆம் நூற்றாண்டு முதல் பழையாறையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். மத்திய அரசு தொல்லியல் துறையினரும், சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறையினரும், தனித்தனியே அகழாய்வு செய்து, அங்குக் கிடைத்துள்ள முதுமக்கள் தாழி, கருப்பு, சிவப்பு ஓடுகள் போன்ற பல பொருள்கள் மூலம் இந்நகரின் தொன்மையினை நிறுவியுள்ளார்.

## பழையாறையில் அகழாராய்ச்சி

தமிழக வரலாற்றில் தனிச் சிறப்பிடத்தைப் பெறும் பழையாறை மாநகரில் மத்திய அரசு தொல்லியல் துறையினரும், சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறையினரும் ஒரு முறை விருப்போடு அகழாய்வு நடத்தினர்.

இரு தொல்லியல் துறையினரும் எதிர்பார்த்ததை விட மிக அதிகமாகவே தக்கச் சான்றுகளைப் பெற்றும் கூட ஆர்வத்தோடு தொடங்கிய ஆய்வினைத் தொடராமல் யாது காரணத்தாலோ குறையாகவே விட்டு விட்டனர். இது எதிர்பாராத நிகழ்ச்சியாகும்.

பழையாறையில் நடந்தது முழுமை பெறாத ஆய்வே என்றாலும் கூட அங்குக் கிடைத்த ஒரு சில சான்றுகளே பழையாறை மாநகரின் தொன்மையான நிலைநாட்டப் போதியன.

ஒரு பகுதியை 'அகழ் ஆய்வு செய்யும்போது பூமியிலிருந்து கிடைக்கும் பொருள்களைக் கொண்டு, அவ்விடத்தில் மக்கள் வாழ்ந்த பழங்காலத்தைக் கணித்தறக் கருவதில் பலமுறைகள் உள்ளன. அம்முறையில் சில பின்வருமாறு;-

1, முதுமக்கள் தாழிகள், கருப்பு, சிவப்பு, பானை ஓடுகள். இவற்றைக் கொண்டு மிகத் தொன்மையான காலத்தை அறிதல்.

2. மரங்களில் உண்டாகும் வளையங்களைக் கொண்டு தொன்மையான காலத்தை அறிதல்.

3. நிலத்தில் இயல்பாக அமைந்துள்ள பாலை நிலைகளால் பழங்காலத்தை அறிதல்.

இவை போன்ற பலவகையான நெறிமுறைகளின் வழித் தொன்மையின் சிறப்பை ஆய்வாளர் ஆய்ந்து காண்கின்றனர்.

## நந்தன் மேட்டில் அகழ் ஆய்வு

மத்திய அரசு தொல்லியல் துறையினர் பழையாறை மாநகரின் ஒரு பகுதி ஆகிய 'நந்தன் மேடு' என்னும் ஓர் இடத்தை அகழ் ஆய்வு நடத்தினர்.

இவ்வாய்வில் மிகத் தொன்மையான காலத்தைச் சேர்ந்த 1. முதுமக்கள் தாழிகள் 2. கருப்பு, சிவப்பு, பானையோடுகள் கிடைத்தன. இவை பழையாறை மாநகரின் தொன்மைக்குச் சான்றுகளாய் அமைந்துள்ளன.

## சோழன் மாளிகையில் அகழ் ஆய்வு

பழையாறை மாநகரில் அரண்மனை இருந்த பகுதி இன்று 'சோழன் மாளிகை' என்ற பெயரில் தனிச் சிற்றூராய் விளங்குகின்றது.

சென்னைப் பல்கலைக் கழக தொல்லியல் துறையினர் இச்சோழன் மாளிகையில், ஒரு சிறிதளவு அகழ்ந்து ஆய்வு செய்து, அங்குக் கிடைத்த பாசிநிலைகள் போன்ற பொருள்களைக் கொண்டு பழையாறை மாநகரின் ஒரு பகுதியான சோழன் மாளிகையில் பெருங்கற்காலம் முதலாக கி.பி.12, 13-ஆம் நூற்றாண்டு வரை மக்கள் தொடர்ந்து வாழ்ந்தனர்[1] என்னும் உண்மையை வெளிப்படுத்தியுள்ளனர்.

## நகர் தோன்றிய காலம்

பழையாறைப் பகுதியில் மக்கள் பழங்காலம் முதற்கொண்டே வாழ்ந்து வந்தனர் என்று தெரிகின்றதேயன்றி, அப்பேரூர் எக்காலம் முதற்கொண்டு சோழ மன்னர்க்குத் தலைநகராய் விளங்கியது என்று தெரியவில்லை.

இந்நகர் தோன்றி காலத்தை அறிவதில் பெரும் சிக்கல் உள்ளது. தொன்மை-யான நூல்களாக நமக்குக் கிடைத்துள்ள கடைச்சங்க காலத்து. எழுந்த பத்துப் பாட்டு, எட்டுத் தொகை ஆகிய இலக்கியங்களில் பழையாறை பற்றிய குறிப்புகள் இல்லை.

சங்க காலச் சோழ வேந்தர்கட்கு உறையூரும்,[2] காவிரிப்பூம்பட்டினமும்,[3] பழையாறையின் வடக்குப் பகுதியை அடுத்த ஆலூரும்,[4] தலைநகரங்களாக விளங்கியமையைச் சங்க இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன.

பழையாறையின் தென்பகுதியை அடுத்த குடந்தையும்,[5] சங்க இலக்கியத்தில் இடம் பெறுகின்றது. இடைநிற்கும் பழையாறை மட்டும் சங்க இலக்கியத்தில் குறிக்கப் படவில்லை.

பழையாறை நகர் சங்க இலக்கியத்தில் குறிக்கப்படவில்லை என்பதால் அதன் பழமைக் குறைவாக மதிப்பிட்டு விடக்கூடாது. பழையாறையைப் பற்றிச் சங்க இலக்கியங்களில் குறிப்பிடும் வாய்ப்பு இல்லாமல் இருக்கலாம். அல்லது பழையாறைக் குறிப்பிட்ட, சிறப்பித்த சங்க இலக்கியப்பாடல்கள் நமக்குக் கிடைக்காமல் போயிருக்கலாம். நமக்குக் கிடைக்காமல் மறைந்து போன சங்க இலக்கியங்கள் பல என்பதும், இங்கு நினைவு கூரத்தகும்.

தில்லையைப் பற்றிய குறிப்பு சங்க இலக்கியத்தில் இல்லையென்பதால் சங்க காலத்தில் தில்லை இல்லையென்றே அறுதியிட்டுக் கூறிவிட முடியாது. பெரும்பாலும் எல்லா நகரங்களையும் இலக்கியத்தில் குறிப்பிடுவதற்கு வாய்ப்பு இருக்காது.

கடைச் சங்க காலத்துக்குப் பின் எழுந்த முதல் காப்பியமான சிலப்பதிகாரத்தில் காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றிய வாழ்த்தும், அந்நகர்ச் சிறப்பும் கூறப்படுகின்றன. அக்காப்பியத்தின் தொடர்ச்சியாய் அடுத்து எழுந்த மணிமேகலை அந்நகர் கடல் கோளால் அழிவுற்ற செய்தியை முதன் முதலாகக் குறிப்பிடுகின்றது.[6]

பாண்டிய நாட்டுத் தலைநகர் முதற்சங்கம் இருந்த தென்மதுரையும், இடைச் சங்கம் இருந்த கபாடபுரமும், கடைச்சங்ககாலத்துச் சோழர் தலைநகர் காவிரிப் பூம்பட்டினமும் கடல் வெள்ளத்தால் அழிவுற்ற நிலையைக் கண்ட சோழர் கடற்கரைப் பகுதியைத் துறந்து உள்நாட்டுப் பகுதியைத் தலைநகராகக் முனைந்தனர்.

கடைச் சங்க காலத்திற்குப் பின் அங்ஙனம் உள்நாட்டுப் பகுதியில் வான் பொய்ப்பினும் தான் பொய்யா அன்னை காவிரியாற்றின் தென்கரையில் அமைந்திருந்த முச்சிறப்புடைய பேரூரான பழையாறையைச் சோழர் தங்கள் தலைநகராக்கிக் கொண்டனர்.

கடைச்சங்க காலத்திற்குப் பின் காவிரிப் பூம்பட்டினமும் அழிவுற்ற பின் சோழ மன்னர்கள் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு முதல் வலிவிழந்த சிற்றரசர்களாய் களப்பிரார், பல்லவர், பாண்டியர் இவர்கட்கு உட்பட்டுத் திறை செலுத்தும் குறுநில மன்னர்களாய் வாழ்ந்த காலத்து பழையாறையைத் தலைநகரமாக்கிக் கொண்டனர் என்று ஆராய்ச்சிப் பேராசிரியர் சதாசிவ பண்டாரத்தார் குறிப்பிடுகின்றார்.[7]

எனவே கி.பி. 3-ஆம் நூற்றாண்டில் சோழ மன்னர்கள் பழையாறை நகரைத் தங்களின் தலைநகராய்த் தோற்றுவித்துப் பெரும் புகழும் பெற்று உள்ளனர் எனலாம்.

பழையாறை நகர் பெயர் ஆய்வு

பல்வேறு காலங்களில் வேறுபட்டப் பெயர்களால் மருவி வழங்கிய பழையாறை மாநகரின் பெயர்க் காரணம் ஒரு சிக்கலாக உள்ளது.

பழையாறை மாநகர் மூவர் தேவாரப் பாடல்களுள் 'ஆறை'[8] எனவும், "பழையாறை"[9] எனவும், "பழசை"[10] எனவும் குறிக்கப் பட்டுள்ளது. நாவன்மை மிக்க தெய்வச் சான்றோர்களால் வழங்கப்பட்டுள்ள ஆறை, செய்யுள் விகாரமன்று; இயல்பான பெயரே ஆகும். ஆறை என்ற ஊர் பெயர் பழமை என்ற தொன்மையை குறிப்பிடும் சொல்லோடு இணைந்து பழையாறை என்ற சொற்றொடர் தோன்றி இருக்கலாம்.

தஞ்சாவூரைத் தஞ்சை என்று குறிப்பிடுவதைப் போல பழையாறை மாநகரை பழசை என்று மரூஉ மொழியாக வழங்கப்பட்டிருக்கலாம்.

சங்க காலச் சோழ வேந்தர்களின் தலைநகரமாக விளங்கிய காவிரிப் பூம்பட்டினம், உறையூர், ஆரூர் ஆகிய மாநகரங்கள் காரணப் பெயர்களாகவே அமைந்துள்ளன.

சோழ வளநாட்டைச் சோலை மிக்க நாடாகவும், சோற்று வளமிக்க நாடாகவும், மற்றும் காவிரி கடலோடு புகும் நகரைக் காவிரி பூம்பட்டினம் (காவிரி கடலில் புகும் பட்டினம்) என்று கொண்டனர்.

சோழ மன்னர்களை நெறிப்படுத்தும் எண்பேராயம், அம் பெருங்குழு உறைந்த ஊர் உறையூர் எனப்பட்டது, 'ஊரெனப் படுவது உறையூர்' என்பது பழம் பழக்கு. ஆ-நிரை மிகுந்த ஊர் ஆவூர் எனப்பட்டது. இதைப் போல் பழையாறை என்பதற்கும் பொருள் கொள்வதை இனிக் காண்போம்.

<u>ஆறை மண்டிய ஊர்</u>

பழங்கால ஊர்ப் பெயர்கள் பெரும்பாலும் அங்கு மலிந்த, மண்டிக் கிடக்கும், மரம், செடி, இலைகளின் பெயரால் அமைந்துள்ளன என்பதை 'தமிழக ஊரும் பேரும்'[11] என்னும் நூலால் அறிகிறோம்.

தில்லை மரம் மிகுந்த ஊர் தில்லை எனப்பட்டது.

உசிலை மரம் மலிந்த ஊர் உசிலை எனப் பெயர் பெற்றது.

ஆத்தி மண்டிய ஊர் ஆர்க்காடு எனப்பட்டது.

இதனைப் போல் ஆறை என்ற செடி மலிந்த ஊர் ஆறை எனப்பட்டது என்பர் சுந்தரேசனார்.[12]

தொடக்கத்தில் ஆறை என்றே வழங்கியது என்பதை, 'ஆறை வடமாகறல் அம்பர் ஐயா றடையார் பெருவேளூர் விளமர் தெங்கூர் சேறை துலைபுக லூரக
லாதிலை

காதலித் தானவன் சேர்பதியே'[13] என்ற திருஞான சம்பந்தர் தேவாரத் தாலும்,

'தலையெ லாம்பறிக் குஞ்சமண் கையருள்
நிலையி னான்மறைத் தான்மறைக் கொண்டுமே
அலையி லார்பொழி லாறை வடதளி
நிலையி னானை யேநினைந் துய்ம்மினே'.[14]

என்ற திருநாவுக்கரசர் தேவாரத்தாலும் அறிகிறோம்.

<u>பழையாறு</u>

பழைய காவிரியாறு ஓடிய பகுதி என்னும் பொருளால் இப்பெயர் தோன்றி இருக்கலாம் என்பர் அமரர் இராசேந்திர சோழன் என்னும் இந்நூற்றாண்டுக்

கவிஞர். தமிழக ஆறுகள் பெருவெள்ளம் பெருகி ஓடும் போது தம் போக்கினை மாற்றியுள்ளன என்பதைக் கடந்தகால வரலாற்றில் அறிகின்றோம்.

இன்றைய வைகை பழங்காலத்தில் திருப்பரங்குன்றம் பக்கமாக ஓடியது என்று பரிபாடலின் வருணனைக் குறிப்புக்களைக் கொண்டு கூறுவர்.[15]

காவிரி யாறும் கடந்த காலத்தில் வெள்ளம் பெருக்கெடுத்த காலை தன் போக்கை மாற்றியிருக்கிறது என்றும், இன்றைய பழையாறைப் பக்கமாகக் காவிரி ஒரு காலத்தில் ஓடியது என்றும் கூறி அதனால் பழையாறு என்ற பெயர் இந்நகருக்கு ஏற்பட்டது என்று குடந்தை சுந்தரேசனாரும், இலுப்பூர்த்தலை கவிஞர் அமரர் இராசேந்திர சோழனும் குறிப்பிடுவர்.[16]

சுந்தரர் இந்நகரைப் பழையாறு என்று குறிப்பிடுகின்றார்.

"முந்தையூர் முதுகுன்றம் குரங்கணில்முட்டம்
சிந்தையூர் நன்று சென்றடைவான் திருவாரூர்
பந்தையூர் '<u>பழையாறு</u>' பழனம் பைஞ்ஞீலி
எந்தையூர் எய்தமா இடையாறிடை மருதே" [17]

திருக்காட்டுப் பள்ளிக்கும், ,திருவையாற்றுக்கும் இடையே உள்ள சாத்தனூர் என்ற சிற்றூரில் 'பழையாறு' என்ற பகுதி உள்ளது. அப்பகுதி வழியேதான் 'பழைய காவிரியாறு' ஓடியது என்று கூறுகின்றனர். அப்பழையாறு வழியே ஆறு ஓடியது என்பதற்கு உரிய சான்றுகளை இப்பொழுதும் அங்கு காணலாம். சாத்தனூரில் இப்பொழுது காவிரியாறு ஓடும் திசைக்கும் பழைய காவிரியாறு (100) ஒரு நூறு அடி இடைவெளி இருக்கும்.

பழங்காலத்தில் ஆறு என்னில் அது காவிரி ஆற்றையும், 'மன்னன்' என்னில் அது சோழனையும் 'மண்' என்னில் அது 'சோழமண்டலத்தை'யுமே குறிக்கும் என்பர் பிற்கால அவ்வையார்.

'தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ தும் சோழ மண்டலமே'[18]

என்று கூறியுள்ளார். இக்கூற்றால் ஆறு என்பதைக் காவிரியாற்றையேக் குறித்துப் பழையாறு என்பது பழைய காவிரியாறு ஓடிய ஆற்றின் பகுதியைக் குறித்தது

எனலாம். இன்றும் பழையாறையில் பழைய காவிரியாறு ஓடிய பகுதியில் அதன் அறிகுறியாகப் பல சான்றுகளைக் காணமுடிகின்றது.

பழையாறையில் வாழ்ந்த அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகிய அம அமர்நீதி நாயனார் (கி.பி. 4) வரலாற்றில் அந்நகரின் வழியே ஓடிய காவிரி ஆறு பற்றிய செய்தியும் பெரிய புராணத்தில் குறிக்கப்படுகின்றது.[19]

பழையாறு (பழைய கோட்டை வழி)

பழையாறையின் தென்பகுதியை அடுத்துள்ள சங்ககாலச் சோழ வேந்தர்களின் தலைநகராய் விளங்கிய ஆலூர்க் கோட்டையின் பழையவாயில், வழி என்ற பொருளில் பழையாறு பெயர் பெற்றது என்பர். திரு. டாக்டர் சிவநாதனார் அவர்கள்.[20]

பழையாறை (ஆற்றங்கரை நகர்)

பழைய நாகரிகங்கள் அனைத்தும் ஆற்றங்கரையில் தோன்றின. கங்கைக் கரை நாகரிகம், நைல்நதி நாகரிகம் என்பது போல் காவிரிக்கரை நாகரிகமும் பழமையான நாகரிகச் சிறப்புடையது.

காவிரி ஆற்றங்கரையில் அமைந்த பழைய நாகரிகச் சிறப்புடைய ஊர் என்ற பொருளில் அறை என்ற பெயர் தோன்றியிருக்கலாம்.

'அறை' என்பது ஆற்றங்கரை என்ற பொருள்படும்.[21] மிகப் பழைய என்ற அடைமொழி பெற்றுப் பழையாறை என்ற பெயர் பெற்றது என்பார் திரு. பிச்சைக்கண்ணு அவர்கள்.[22]

பழையாறை மன்னர்கள்

கி.பி. 3-ஆம் நூற்றாண்டு முதல் பழையாறையைத் தலைநகரமாகக் கொண்டு சோழ நாட்டை ஆண்ட மன்னர்களைப் பிற்காலச் சோழப் பேரரசிற்கு வித்திட்ட விஜயாலய சோழனுக்கு முற்பட்ட மன்னர்கள், பிற்பட்ட மன்னர்கள் என இருபிரிவாகக் கொள்ளலாம்.

## விஜயாலயனுக்கு முற்பட்ட மன்னர்கள்

கடைச்சங்க இறுதி காலத்திற்குப் பிறகு கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இடையில் தஞ்சை மாநகரைக் கைப்பற்றி அரசாளத் தொடங்கிய சோழன், விஜயபாலன் காலம் வரையில் சோழ நாட்டை ஆண்ட மன்னர்களைப் பற்றிய செய்திகள் நன்கு புலப்படவில்லை.

அக்காலத்தில் வெளிவந்துள்ள செப்பேடுகளும், கல்வெட்டுக்களும், தமிழ் நூல்களும் ஒரு சில மன்னர்களைப் பற்றி இலைமறை காய்போல் சிற்சில செய்திகளைக் குறிப்பிடுகின்றனவேயன்றி முழுமையான வரலாற்றைத் தெரிவிக்க இல்லை.

பழையாறை உறைந்த சோழ மன்னர்களும் வலிமை குன்றி களப்பிரர், பல்லவர், பாண்டியர், இவர்களுக்கு அடங்கி உட்பட்டு திறை செலுத்தும் சிற்றரசர்களாய் தாழ்ந்த நிலையில் இருந்தனர்.

### மணிமுடிச்சோழன் (640-700)

கடைச் சங்க காலத்திற்கு பின் கி.பி.3ஆம் நூற்றாண்டில் தோன்றிய சோழர் தலைநகரமான பழையாறையில் நாம் காணும் முதல் சோழமன்னர் மணிமுடிச் சோழராவார்.

இவர் திருஞான சம்பந்தரை மதுரைக்கு வரவழைத்த சமணரை வென்ற சைவம் வளர்த்த தமிழாசிரியராகிய மங்கையர்க்கரசியாரது அருமை தந்தையார் ஆவர். இதனை,

"மங்கையர்க் கரசி வளவர் கோன் பாவை வரிவளைக்
கைமடமானி
பங்கயச் செல்வி பாண்டியமா தேவி"

என்ற திருஞான சம்பந்தர் தேவாரத்தால் அறியலாம்.[23]

கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் இடையில் பாண்டிய நாட்டை மதுரை மாநகரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தவனும், அறுபான்மும்மை நாயன்மார்களில் ஒருவனும் சுந்தரமூர்த்திகளால் நெல்வேலி வென்ற நின்ற சீர் நெடுமாறன்[24] என்ற திருத்தொண்டர் தொகையில் பாராட்டப்பட்டவனுமாகிய பாண்டியன் அரிகேசரி

மாறவர்மன் தலைவியாரே இந்த மங்கையர்க் கரசியாவார்.

திருப்பனந்தாளிலிருந்த சிவலிங்கப்பெருமான் சாய்ந்திருக்கக் கண்டு தன் சேனைகளோடு அங்கே சென்று தன் புயவலிமையால் முயன்று, நிமிர்க்க இயலாமல், குங்கிலியக் கலயர் தன் அன்பின் வலிமையால் நிமிரச் செய்ததை நேரில் கண்டுகளித்த அரசன் இம்மணிமுடிச் சோழரேயாவார்.

இரண்டாம் நந்திவர்மன் (கி.பி. 710-715)

மணிமுடிச் சோழருக்கு பின் பழையாறை உறை மன்னராய் வருபவர் இரண்டாம் நந்திவர்மன் என்ற புதிய பல்லவ அரசராவார். இவர் பழையாறையை தம் தென்புறக் கூடநகராகக் கொண்டவர்.

இம்மன்னர்தம் பெயரால் பழையாறையிலே 'நந்திபுரம்' என்ற மாற்றினார் மேலும், இந்நந்திபுரத்தில் வைணவராக இம்மன்னர் (இம்மன்னர் 'நந்திபுரவிண்ணகரம்') எனும் வைணவ ஆலயம் ஒன்றும் கட்டுவித்தார். இவர்காலத்தில் வாழ்ந்த திருமங்கை-யாழ்வார் இந்த நந்திபுர விண்ணகரத்தை மங்களா சாசனம் செய்துள்ளார். இந்த நந்திபுர விண்ணகரம் இப்பொழுது நாதன் கோயில் என்று வழங்குகின்றது.

இரண்டாம் நந்திவர்மன் நந்திபுக் கோட்டையிலிருந்து சோழ நாட்டை ஆட்சி புரியுங்கால் பாண்டியன் பெருஞ்சேனை வியூடன் படைதிரட்டி நந்திபுரக் கோட்டையை முற்றுகையிட்டான். பல்லவர் கோன் படைத்தலைவன் உதய சந்திரன் பாண்டியனைப் புறங்கண்டான்.[25]

மூன்றாம் நந்திவர்மன் (கி.பி.825-847)

கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இடையில் கும்பகோணம் என்ற இந்நாளில் வழங்கும் குடமூக்கில் நடைபெற்ற போரில் பாண்டியன் ஸ்ரீமாறன், ஸ்ரீபல்லவன் என்பான் சோழர், பல்லவர், கங்கர் முதலானோரைப் போரில்வென்று புறங்-கண்டான் என்று சின்னமனூர்ச் செப்பேடுகள் உரைக்கின்றன.[26] அதற்குத்தெள்ளாறு எனும் இடத்தில் நடந்த போரில் மூன்றாம் நந்திவர்மன், ஸ்ரீமாறன், ஸ்ரீபல்லவன் (830-862) என்னும் பாண்டியன் தலைமையில் அமைந்த தமிழர்தம் அணியை வென்றான்.[27]

இம்மன்னன் 'உறந்தையர்கோன்' எனவும், 'காவிரி நாடன்' எனவும் கூறப்படுவதால் சோழநாடு இவனால் வெல்லப் பெற்றமை அறியப்பெறும் இவன்

மூவேந்தரையும் வென்றவன்.[28]

பழையாறை மாநகரில் போரிட்டுப் பகைவரின் படைவலிமையைக் கெடுத்த அழிந்த செய்தியை,

"பாடிய நாவலரோ வேந்தரோ பன்பூரவிப்
படியன் மாவிற்றார் பிச்சத்தார்—கூடார்
படையாறு சாயப் பழையாறு வென்றான்
கடையாறு போந்தார் கலந்து"[29]

என்று நந்திக் கலம்பகம் பாராட்டும்.

குமராங்குசன்
---------

இவன்பல்லவ வேந்தனாகிய தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் காலத்தவன். நந்திவர்மனுக்குத் திறை செலுத்திய ஒரு சிற்றரசன்.

சோழர் குலத்து உதித்த வீரர் தலைமணி என்றும் கொடையில் கர்ணனைப் போன்றவன் என்றும், நேர்மையா ஒழுக்கமுடையோன் என்றும், வேளூர்பாளையச் செப்பேடு இவனைப் பாராட்டும்.[30]

விஜயாலயனுக்குப் பிற்பட்ட சோழர்கள்
---------------------------

மாவீரன் விஜயாலய சோழன் தோற்றுவித்த பிற்காலச் சோழப் பேரரசு பழையாறையில் தான் தொடங்குகிறது. பழையாறையைத் தலைநகராகக் கொண்டு சோழ பேரரசன் புரிந்த வீரதீரச் செயல்களையும் அவன் வழித்தோர் பெற்ற பெருமை, வெற்றிச் சிறப்பு ஆகியவற்றையும் இனி காண்போம்.

விஜயாலயன் (கி.பி.846-881)
-----------------------

தெள்ளாறெறிந்த நந்திவர்மன் சமகாலத்தவனாக வேளூர் பாளையச் செப்பேடுகளால் அறியப்படும் குமாரங்குசன்[31] என்ற சோழ மன்னனுக்கு நம் விஜயாலயன் புதல்வனாய் இருத்தல் வேண்டும் என்பர் பண்டாரத்தார்[32]

இவ்விஜயாலயன் வழிவந்த பிற்காலச் சோழ மன்னர்களின் ஆட்சிக் காலங்களில் வரையப் பெற்ற அன்பில் செப்பேடுகளும்,[33] ஆனைமலைச் செப்பேடு-களும்,[34] திருவாலங்காட்டுச் செப்பேடுகளும்,[35] கன்னியாகுமரி

கல்வெட்டும்,[36] கடைச் சங்க காலத்தில் புகழுடன் விளங்கிய பெருநற்கிள்ளி கரிகாலன் செங்கணான் நல்லடி எனும் சோழ அரசர்களின் வழியில் தோன்றியவன் விஜயாலயன் என்று உறுதியாகக் கூறுகின்றன.

கி.பி. 846-முதல் பழையாறையைத் தலைநகராக்க் கொண்டு சோழ நாட்டை ஆண்ட இவ்விஜயாலயன் முதலில் முத்தரையரிடமிருந்து தஞ்சையைக் கைப் பற்றினான்,[37] சற்றேறக்குறைய 35 ஆண்டுகள்[38] ஆட்சி புரிந்த இவ்வேந்தன் தன் பகைவர்களாகிய பேரரசர்களோடும், சிற்றரசர்களோடும் தன் வாழ்நாள் முழுமையும் பெரும் போர் புரிந்து பிற்காலச் சோழப் பேரரசிற்கு அடிகோலினான்.

தான் நிகழ்த்திய போர்களில் எல்லாம் வாகை சூடுமாறு அருள்புரிந்த வீரமிக்க அருள் மிகு துர்க்கையம்மனுக்குப் பழையாறையிலும், தஞ்சையிலும் கோயில் எடுத்து வழிப்பட்டான்.[39]

மார்பில் தொண்ணூற்றாறு விழுப்புண் கொண்ட வெற்றிப் புரவலன் என்று மூவருலாக்களில் ஒட்டக்கூத்தரால்[40] புகழப்படும் சோழ மன்னன் விஜயாலயனே என்று நிறுவுகின்றார் திரு.சதாசிவ பண்டாரத்தார்[41] அவர்கள்

பழையாறையால் புகழ் பெறுகிறான் விஜயாலயன், விஜயாலயனால் புகழ் பெறுகிறது பழையாறை.

## இரண்டாம் பராந்தகன் (கி.பி. 957-970)

விஜயாலயனுக்குப் பின் வந்த அரசர்களுள் பழையாறையைத் தலைநகராக கொண்டவர்களில் முதலிடம் பெறும் இரண்டாம் பராந்தகன் சுந்தர சோழன் என்றும் குறிப்பிடப்படுகின்றான். இவன் மிகவும் அழகுடையவனாய் திகழ்ந்தமையால் சுந்தர சோழன் என்று குடிமக்களால் அழைக்கப்பட்டான்.

இம்மன்னன் பழையாறையில் ஆட்சிபுரிந்தமையை 'மேதகு நந்திபுரமன்னர் சுந்தர சோழர்' என்றும், 'பழையாறை நகர் சுந்தரசோழர்' என்னும் பழம் பாடல்களின் வழி அறிகின்றோம்.[42]

சுந்தர சோழனின் தேவியர்கள் சேரன்மாதேவி, வானவன் மாதேவி என்ற இருவராவர். சுந்தர சோழனின் அருமை மக்கள் ஆதித்த கரிகாலன் அருள்மொழி தேவன், குந்தவைபிராட்டி ஆகிய மூவராவர் அனைவரும் சிவனேயச் செல்வர்கள்.

சுந்தர சோழன் நாட்டில் 'ஆ' என்ற ஒலமிட்டு அரற்றியவர் எவருமிலர் என்றும், அதற்கு மாறாகச் சிவபெருமானை வழங்குங்கால் மக்கள் கூறிய 'அர' என்ற ஒலிதான் கேட்கப் பெற்றது என்றும் திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன.[43]

முதல் இராசராசன் (கி.பி.985-1014)

சுந்தர சோழனின் அருமைப் புதல்வராகிய அருள்மொழித் தேவர் என்னும் இராசராசன் தன் பெயரால் தான் பிறந்து வளர்ந்த பழையாறையில் அருள் மொழித் தேவேச்சரம் என்றும் சோமநாதர் ஆலயத்தை அமைத்தவன். பேரன்பு கொண்ட தன் மனைவியாகிய பஞ்சவன் மாதேவியின் நினைவாகப் பஞ்சவன் மாதேவீச்சரம் எனும் பள்ளிப்படையை[44] பழையாறையில் ஒரு பகுதியாகிய பட்டீச்சுரத்தில் திருமலைராயன் ஆற்றின் வடகரையில் அமைத்துள்ளான்.

பழையாறை அரண்மனையில் குந்தவைப் பிராட்டியார், செம்பியன் மாதேவியார் போன்ற அரச குலத்தவர் தங்கிச் சிவத்தொண்டு செய்து வந்தனர்.

முதலாம் இராசேந்திரன் (கி.பி.1012-1044)

பிற்காலச் சோழப் பேரரசிற்குப் பெருஞாயிறாய் பேராற்றலுடன் தோன்றிய முதலாம் அராசராசனுடைய அருமைமகனாகிய இராசேந்திர சோழன் பழையாறை அரண்மனையில் குந்தவை தேவியாரால் வளர்க்கப்பட்டான். இங்கு பன்னாட்கள் தங்கிக் கல்வியும், பல்வகையான பயிற்சியும் பெற்றான். இப்பழையாறை மாநகரில் இம்மா மன்னன் பெற்ற பயிற்சிகளே பிற்காலத்தில் சோழப் பேரரசராம் பேரும் புகழும் பெற அடிப்படையாய் அமைந்தன.[45] சோழர் குலத்தின் சிங்கமாக மாவீரனாக கோலோச்சிய இராசேந்திரன் தனது மூன்றாவது ஆட்சியாண்டில் (கி.பி.1015ல்) திருக்கற்குடி விழுமியோர்க்குரிய பிரமதேய நிலங்களை அளந்து சீர்படுத்துவதற்குரிய உத்தரவைப் 'பழையாற்று அரண்மனையில் தெற்குப்பக்கத்து உணவுச் சாலையில் இருந்த போது பிறப்பித்தான்' என்று உண்மைக் கொண்டான் திருமலைக் கல்வெட்டு கூறுகிறது.[46]

இவன் பழையாறை அரண்மனையில் தான் முடிசூட்டிக் கொண்டான். சோழ நாட்டுக்குத் தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம் ஆகியவை தலைநகரங்களாக விளங்கினாலும், மன்னர்கள் முடிசூட்டிக் கொள்ளும் பழமை நகரமாகப் பழையாறை விளங்கியது. பழையாறை அரண்மனையில் அமைந்திருந்த மிகப் பெரிய சோழ

வளவன் என்னும் முடிசூட்டிக் கொள்ளும் மண்டபத்தில், முடிசூடிக்கொள்ளும் மன்னவன், பேரரசனாய்ச் சென்ற இடமெல்லாம் வென்றான் என்ற புகழுக்கு உரியவனாய்ப் பெருமைபெற்ற விளங்குவான் என்ற நம்பிக்கை உடையவராய் அக்காலச் சோழ குலத்தவர் இருந்தனர்.

வயதில் முதிர்ந்த அரச குடும்பத்தினர் பலர் இப்பழையாறையில் தங்கி தங்கள் வாழ்நாள் முழுவதும் சிவத்தொண்டு செய்து வாழ்ந்தனர். முதலாம் இராசேந்திரன் மாமன்னனாய்ப் பல மன்னர்களின் முடிகளைத் தன் வெற்றியால் கொண்டவன் என்பதாலும் இலங்கையிலிருந்த சோழர் தம் முடியைத் திரும்பப் பெற்றவன் என்பதாலும் 'முடி கொண்ட சோழன்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான்.

'பொருகட லீழத்தரசர் தமுடியும்
ஆங்கவர் தேவிய ரோங்கெழில் முடியும்
முன்னவர் பக்கற்றென்னவர் வைத்த
சுந்தர முடியு மிந்திர னாரமும்
தெண்டிரை யீழமண்டல முழுவதும்
எறி படைக்கேரளன் முறைமையிற் சூடும்
குலதன மாகிய பலர் புகழ் முடியும்
செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலைத்
தொல்பெருங்காவற் பல்பழந் தீவும்
செருவிற் சினவி யிருபத்தொரு கால்
அரசுகளை கட்ட பரசுராமன்
மேவருஞ் சாந்திமத் தீவரண் கருதி
இருத்திய செம்பொற் றிருந்தகு முடியும்"[47]

என்ற மெய்க்கீர்த்தி 'முடி கொண்ட சோழன்' முதலாம் இராசேந்திரன் பெருமைகளைத் தெளிவுபடுத்தும்.

இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் பழையாறை அவன் பெயரால் 'நந்திபுரம்' என்று வழங்கப்பட்டது போல, இராசேந்திரன் ஆட்சிக் காலத்தில் 'முடிகொண்ட சோழபுரம்' என்று இப்பழையாறை அவனது சிறப்புப் பெயரால் வழங்கப்பட்டது.

தன் வெற்றிச் சிறப்புக்கு மேலும் ஒரு அணிகலனாய் விளங்கப் பழையாறை நகரின் தென்பால் முடி கொண்ட சோழப் பேராற்றினையும் வெட்டுவித்தான்.[48]

முதல் இராசாதி ராசன் (கி.பி.1018-1054)

முதல் இராசாதிராசன் ஐந்தாம் ஆட்சியாண்டு (கி.பி.1023) 87-ஆம் நாளுக்குரிய காளத்திக் கல்வெட்டு ஒன்று சோழச் சக்கரவர்த்தி இராசாதிராசன்; உய்யக் கொண்டார் வளநாட்டு அம்பர் நாட்டுப் பழையாற்றன் இறையிலி நீக்கி கொடைக்கு உள்வரி யோலைப் போக்கியமை காட்டுகிறது.[49]

முதற் குலோத்துங்கன். (கி.பி.1070-1120)

கி.பி.112க்குரிய அம்பர் மாகாளம் கல்வெட்டு முதற் குலோத்துங்கன் பழையாறை அரண்மனையில் வாளாதிராயன் என்னும் பெயருடைய இருக்கையில் வீற்றிருந்ததைத் தேவதானங்கள் பற்றி ஆணை பிறப்பித்தமையைக் கூறுகிறது.[50]

விக்கிரசோழன் (கி.பி.118-1136)

இவன் ஆட்சியாண்டில் பழையாறை இரண்டாம் தலைநகராக இருந்தது. இம்மன்னன் பழையாறை அரண்மனையில் இருந்து கோயிலுக்கு நிலநிவந்தம் தந்ததனை கல்வெட்டால் அறிகின்றோம்.[51]

இரண்டாம் இராசராசன். (கி.பி.1146-1163)

இரண்டாம் இராசராசன் பழையாறையைத் தன் முதல் தலைநகரமாகக் கொண்டான் முன்னவர் வழி தன் பெயரால் பழையாறை மாநகர் பெயரை இராசராசபுரம் என்று மாற்றினான். இங்குப்பாதுகாப்பு மிக்கப் புதியதொரு அரண்மனையை உருவாக்கினான்.[52] இந்நகரின் வடபால் அரிசிலாற்றங்கரையில் இராசராசேச்சுரம் என்ற சிவாலயம் ஒன்று எடுப்பித்து வழிபாடு புரிந்தான்.[53]

இவன் காலத்தில் பழையாறையின் வரலாற்றுச் சிறப்பும், கலைச்சிறப்பும் இதுவரை ஆட்சி புரிந்த ஏனைய மன்னர்களின் காலத்தை விடப் பன்மடங்கு உயர்ந்தே வேறு பொலிவுற்றது எனலாம்.

மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1178-1218)

இம்மன்னன் காலத்தும் பழையாறை தலைநகரமாக விளங்கியது. இம்மன்னன் பழையாறை இராசராசேச்சுர ஆலயத்தில் பல திருப்பணிகள் புரிந்தான் பொன் வேய்ந்தும் அழகுபடுத்தினான் என்று இவனது ஆட்சி ஆண்டு மெய்க்கீர்த்தி குறிப்பிடும்.[54]

மூன்றாம் இராசராசன் (கி.பி. 1216-1256)

இம்மன்னன் காலத்தில் பாண்டிய மன்னன் முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியன் சோழ நாட்டை வென்றான்.[55] தஞ்சையையும், உறையூரையும் தீ இட்டுக் கொளுத்தினான்.[56] அரசமாதேவியர் அழுத கண்ணீரால் நனைந்த சோணாட்டின் மாளிகைகள் எல்லாவற்றையும் தகர்த்தான்.[57] கழுதை ஏரு பூட்டி உழுது கவடி விதைத்தான்.[58] சோழ நாட்டில் இருந்த பிற நகரங்களுக்கு நேர்ந்தது போல பழையாறையும் அழிவுக்குள்ளாயிற்று எனலாம்.

பிற்காலச் சோழப் பேரரசின் வீழ்ச்சி

கி.பி. 846-இல் தம் வாழ்நாள் முழுவதும் போர்புரிந்து தொண்ணூற்று விழுப்புண்களை மார்பிலே ஏந்தி வெற்றிப்புரவலன் என்று பாராட்டப்பட்ட விசயாலய மாமன்னனால் பழையாறையில் தோற்றுவிக்கப்பட்ட பிற்காலச் சோழப் பேரரசு ஏறக்குறைய 400 ஆண்டுகட்குப் பின் முதல் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் தொடர்ந்த இரு படையெடுப்பால் நலிவுற்றுச் சிதறியது; வீழ்ச்சியும் அடைந்தது.

இரண்டாம் இராசராசனால் எடுப்பிக்கப்பெற்ற இராசராசேச்சுரம் எனப் பெற்ற தாராசுரம் கோயிலில் இரு சுரங்கப் பாதைகள் உள்ளன. இவற்றுள் ஒன்று தஞ்சாவூருக்குச் செல்வது. மற்றொன்று தாராசுரத்தின் தென்மேற்குப் பகுதியில் இவ்வரசனால் கட்டப்பட்ட மும்முடிச் சோழமண்டலத்து அரண்மனைக்குச் செல்வது. இவ்விரண்டாம் சுரங்கப் பாதையின் 33-ம் படிக்கட்டில் இரண்டாம் இராசராசனின் சிலையும் உள்ளது. முகமதியார் (மாலிக்காபூர்) மும்முடிச் சோழ மண்டலத்தை அழிக்கும் காலத்தில் இருந்த அரசி ஒருத்தி விக்கிரகம் முதலாகிய விலைமதிப்பற்ற பொருள்களையும் மற்றைய செல்வங்களையும் இச்சுரங்கப்

பாதைகளில் மறைத்து வைத்தார். இன்று நீரில் மூழ்கியிருக்கும் அப்பொருள்கள் விரைவில் வெளிப்படுத்தப் பெறுமென்று கதை கூறுகிறது.[59]

<u>பழையாறைக்கு வழங்கிய வேறு பெயர்கள்</u>

வரலாற்றுப்புகழுடைய இப்பழையாறை மாநகரின் பெயர் பல்வேறு காலங்களில் மாறி வழங்கப்பட்டு வந்துள்ளது. இன்றைய கும்பகோணத்தின் தென்மேற்குப் பகுதியில் தாராசுரம் என்னும் சிற்றூர் உள்ளது. இதற்கு முற்காலத்தில் இராசராசபுரம், இராசராசபுரி என்னும் பெயர்கள் பெருமையுடன் விளங்கின.

தாராசுரமும், அதன் தென்பகுதியில் உள்ள சோழன் மாளிகை, பட்டீஸ்வரம், முழையூர், பழையாறை, கோபிநாதப் பெருமாள் கோயில், பம்பப் படையூர், ஆரியப்படையூர், புதுப்படையூர், மணப்படையூர், நந்திபுரம் போன்ற சிற்றூர்கள் எல்லாமும் ஒருங்கிணைந்து சுமார் ஐந்து மைல் நீளமும், மூன்று மைல் அகலமும் கொண்டு பெருமையுற மாநகராம் 'மும்முடிச் சோழமண்டலம்' என்று விளங்கியது. இந்நகர் கோட்டைக் கொத்தளங்களும், அரண்மனைகளும், நிறைந்து குபேரப்பட்டணம் போன்று புகழுடன் விளங்கியது.[60]

அமர்நீதி நாயனார் வாழ்ந்த கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் பழையாறை என்றும், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் தேவார காலமான கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் 'பழையாறை' என்றும் 'அறை' என்றும், 'பழசை' என்றும், சுந்தரர் தேவாரகாலமான கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் இறுதியில் 'பழையாறு' என்றும் வழங்கப்பட்டுள்ளது.

கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் அம்மன்னன் பெயரால் நந்திபுரம், நந்திபுரி என்று வழங்கியுள்ளது.

கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் மூன்றாம் நந்திவர்மனின் சிறப்பு விருதுகளின் வழியாக அவனி நாராயணபுரம் என்ற பெயரால் வழங்கியது.[61] கி.பி. 11ஆம் நூற்றாண்டில் முதலாம் இராசேந்திரன் காலத்தில் அவனது சிறப்புப் பெயரால் 'முடிகொண்ட சோழபுரம்' என்று வழங்கியது.[62] வீரராசேந்திரன் காலத்தில் 'ஆகவமல்லகுல காலபுரம்' என்று வழங்கியது.[63] கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் ஆயிரத்தளி[64] என்றும், இராசராசபுரம்[65] என்றும் வழங்கியது. ஆயிரத்தளி என்ற பெயர் பெற்றமைக்குப் பலகாரணங்கள் கூறுவர்.

கி.பி.12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இரண்டாம் இராசராசன் தன் பெயரால் இந்நகரை இராசராசபுரம் என மாற்றியமைத்தான், கீழப்பழையாறாகிய ராசராசபுரம் [66] என சாசனங்களில் பழையாறை குறிக்கப்படுகிறது.

நாயக்க மன்னர் காலத்தில் பழையாறை முன்னை பெயரான 'முடிகொண்ட சோழபுரம்' என்னும் பெயரால் வழங்கப்பட்டு வந்துள்ளது.

<u>அரண்மனைகள்</u>

கி.பி.9ஆம் நூற்றாண்டில் வலிமை குன்றிய சோழ மன்னர்கள் பழையாறையைத் தலைநகராகக் கொண்டனர் என்பதை முன்னர் கண்டோம். அச்சோழ மன்னர்கள் இன்றைய சோழன் மாளிகை என்ற பகுதியில் தங்களின் அரண்மனைகளை அமைத்தனர் சோழமன்னர்களின் மாளிகை இருந்த இடமே இன்றும் அப்பெயரால் வழங்குகிறது.

பல்லவர் காலத்தில் இரண்டாம் நந்திவர்மன் பழையாறையைத் தென்புறக் கடிநகராகக் கொண்டிருந்தான்.[67] ஆதலின் இவன் காலத்தில் ஓர் அரண்மனை இவன் கண்ட நந்திபுர விண்ணகரம் எனும் நாதன் கோயிலையொட்டி அமைந்து இருத்தல் கூடும் என்பர் ஆய்வாளர்.[68] சோழர் அரண்மனையின் பெரும்பகுதி இன்றைய சோழன் மாளிகை என்ற சிற்றூரில் இருந்திருக்க வேண்டும் சோழர் அரண்மனையில் பல பகுதிகளைச் சோழர் சாசனங்கள் சுட்டுகின்றன. பாண்டியர் தம் சாசனங்கள் இவ்வரண்மனையை 'ஆயிரத்தளி' என்று குறிப்பிடுகின்றன.[69]

இரண்டாம் இராசராசன் தாராசுரத்தை ஒட்டி அமைந்த பகுதியில் பேரரண் மிக்க காப்புடைய ஓர் அரண்மனையைப் புதிதாக அமைத்தான் என்பது பல்லவராயன் பேட்டை சாசனத்தால் அறியப் பெறும் உண்மையாகும்.[70]

இதனால் பழையாறை மாநகரின் பல இடங்களில் வலிமை மிக்கக் கோட்டைகள் அரண்மனைகள் இருந்ததை ஊகித்து அறியப்படும் செய்தியாகும்.

நந்திபுர விண்ணகரம் என்னும் நாதன் கோயிலில் இரண்டாம் நந்திவர்மனால் அமைக்கப்பெற்ற அரண்மனை இருந்த இடம் தெரியாமல் சிதைந்து விட்டது.

சோழன் மாளிகையில் சோழ மன்னர்களால் கலைச் சிறப்போடு அமைக்கப் பட்ட அரண்மனையும், சுந்தரபாண்டிய மாறவர்மன் சீற்றதால் அழிந்து பட்டது [illegible]

மாலிக்காபூர் படையெடுப்பால் அழிந்துபட்டது
எனவும், அறியக் கிடக்கின்றது.

தாராசுரத்தை ஒட்டியமைந்த அரண்மனையும், சுந்தரபாண்டிய மாறவர்மன் படையெடுப்பாலும், மாலிக்காபூரின் படையெடுப்பாலும், உருக்குலைந்து விட்டது. பழையாறையில் அகழ்வாராய்ச்சியால் தொல்லியல் ஆய்வாளர் தொடர்ந்தால் அரிய பல வரலாற்றுச் செய்திகள் அரண்மனை அமைப்பு போன்ற உண்மைகளையும் நாம் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்.

இராஜராசபுர அரண்மனையில் எட்டாவது வாயிலில் இருந்ததுர்க்கையம்மன் இன்று பட்டீஸ்வரத்தில் சிவனார் கோயிலில் காட்சிதருகிறாள். [71]

நான்கு படைவீடுகள்:-

பழையாறை மாநகருக்கு அரணாய் அந்நகரின் நான்கு திசைகளிலும் நான்கு படைவீடுகள் அமைக்கப்பட்டிருந்தன.

படைவீடு என்றால் படைகள் தங்கியிருக்கும் பாசறை என்று பொருள்படும். பழையாறை மாநகரின் மேற்குப் பகுதியில் மணப்படைவீடும், புதுப்படைவீடும், கிழக்குப் பகுதியில் பம்மைப் படைவீடும், ஆரியப்படைவீடும் நகருக்கு அரண்கூட்டும் வண்ணம் விளங்கின.

மன்னர்களின் அன்றாட நிகழ்ச்சிகள் மற்றும் படையெடுப்புகள் அனைத்திலும் இப்படை வீட்டின் வீரப் பெரும் மக்கள் பங்கு கொள்வர்.

மணப்படை வீடு

அரண்மனையில் நடைபெறும் எல்லா மங்கல நிகழ்ச்சிகளுக்கும் மணமுரசு அறையும் படைவாழ்ந்த பாசறையே மணப்படை வீடு என்பர் ஆய்வாளர். இப்பொழுது இம்மணப்படை வீடு மணப்படையூர் என்ற மருவி தனிச்சிற்றூராய் காட்சி அளிக்கிறது.

புதுப்படை வீடு

நாடு பிடிக்கும் நல்லெண்ணத்தோடு படைபலத்தைப் பெருக்குவதற்குத் தக்க வீரர்களைத் தேர்ந்தெடுத்து உரிய பயிற்சியளிக்கப்படும் பாசறையே புதுப்படைவீடு, இன்று இப்புதுப்படை வீடு புதுப்படையூர் என்ற தனிச்சிற்றூராய் விளங்குகின்றது.

பம்பைப்படை வீடு

போர்களத்தில் மறப்போர் புரியும் வீரர்களுக்கு வீர வெறியூட்டிப் போரில் மாபெரும் வெற்றி பெற, அவர்களுக்கு உணர்வூட்டும் முறையால், முழக்கப்படும் பம்பைப் பறையினை முழக்கும் படையினர் வாழ்ந்த பாசறையே பம்பைப்படை வீடு இப்பம்பைப் பறையினை படைவீடு இன்று தனிச்சிற்றூராய் பம்பைப் படையூர் என வழங்கப்படுகிறது.

ஆரியப்படைவீடு

தன் அறிவில் தேர்ச்சி பெற்ற அரசியல் அலுவலர்கள், அமைச்சர்கள் படைத் தளபதிகள் மற்றும் உளவு அறியும் அலுவலர் போன்றோர் வாழ்ந்த பாசறையே ஆரியப் படைவீடு இவ்வாரியப் படைவீடு இன்று ஆரியப் படையூர் என தனிச் சிற்றூராய் உள்ளது.

சமயச் சிறப்பு

மிகத் தொன்மையான வரலாறும், நாகரிகமும் படைத்த பழையாறை பல்லவர் காலத்தில் மற்ற நகரங்களை விடச் சமய எழுச்சியில் முதலிடம் பெற்றது.

கி.பி. 7ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் எழுச்சிபெற்றிருந்த சைவம், வைணவம், சமணம் பௌத்தம் ஆகிய எல்லாமதத் தலைவர்களும் வாழ்ந்த மாநகராகப் பழையாறை விளங்கிய சிறப்பைக் காண்கிறோம்.

சைவ சமயக் குரவர் மூவர் தேவாரத்திலும் பழையாறை இடம் பெறுகிறது. திருமங்கை மன்னன் பழையாறை நந்திபுரத்தை மங்களாசாசனம் செய்துள்ளார்.

எனவே பழையாறை வரலாற்று நாகரிகச் சிறப்போடு சமயச் சிறப்பும் பெற்று திகழ்ந்தமை அறியலாம்.

அடிக்குறிப்புகள்.

1. இந்தியத் தொல்லியல் ஒரு திறனாய்வு, 1964-1965ஆம் ஆண்டிதழ்
2. புறம் பா.39, 58,69 பட்டினப்பாலை பா285.
3. சிலம்பு மங்கல வாழ்த்துப் பாடல் 89-110 பட்டினப்பாலை பா.285
4. புறம் பா.38,40,44,116
5. அகம் பா 13,60

6. மணிமேகலை உ.வே.சா.பதிப்பு 25வது காதை பா200.

7. தி.வை.சதாசிவ பண்டாரத்தார், பிற்கால சோழர் சரித்திரம் பகுதி1 அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 1958 பக்.7-8

8. திருஞான சம்பந்தர் தேவாரம் 2:1:39:5 தேவாரம் அடங்கல் முறை, மயிலை இளமுருகனார் பதிப்பு

9. மேற்படி நூல் 3:73:3

10. மேற்படி நூல் 3:73:1

11. சங்க காலம் முதல் வழங்கிவரும் பழமொழி (வழக்கு)

12. பேட்டியின் போது

13. திருஞான சம்பந்தர் தேவாரம் 2:39:5

14. திருநாவுக்கரசர் தேவாரம் 5:58:1

15. பேட்டியின் போது

16. பேட்டியின் போது

17. சுந்தரர் தேவாரம் 7:31:1

18. ஔவையார் தனிப்பாடல் திரட்டு, பா.16

19. சேக்கிழார் சுவாமிகள், பெரியபுராணம், அமர்நீதி நாயனார் புராணம், ஈ பாடல் 13

20. பேட்டியின் போது

21. ஆனந்த விகடன் அந்தாதி, ஆனந்த விகடன் வெளியீடு சென்னை

22. பேட்டியின் போது

23. திருஞானசம்பந்தர் தேவாரம், 3:120:9

24. திருத்தொண்ட தொகை பா.8

25. நந்திவர்மனுடைய 21-வது ஆட்சியாண்டில் வெளியிடப்பெற்ற உதயேந்திர சாசனம் வே.மகாதேவன் வரலாற்றுப் போக்கில் பழையாறை மாநகர் பக். 6-7

26. சின்னமனூர் செப்பேடுகள் S.II.Vol 111 No 206

27. நந்திக் கலம்பகம் பா.14.27,31,42

28. மேற்படி நூல் பா.14,31

29. மேற்படி நூல் பா.35

30. வேலூர் பாளையச் செப்பேடு S.I.I.Vol XII.No.43

31. மேற்படி நூல் Vol II N o. 98

32. தி.வை.சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் சரித்திரம், பகுதி அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு 1958.

33. அன்பில் செப்பேடுகள்

34. Epigraphia Instica, Vol XV No 5

35. மேற்படி நூல், Vol XXII No 34

36. S.I.I.Vol III No. 205

37. Travancore, Archaeological Servies Vol III

38. K.A.Neelakanta Sastri, "The Cholas" Vol I.P.135

39. Annual Repoet on sowth Indian Spigraphy for 1908¼-09 page 86. Ine-No 447 of 1917.

40. விக்கிரம சோழனுலா பா 27-32, குலோத்துங்கச் சோழனுலா பா38-44 இராசராச சோழனுலா பா.35-40

41. தி.வை.சதாசிவ பண்டாரத்தார். பிற்காலச் சோழர் சரித்திரம் Vol I.20 அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு 1958,

42. திருவாலங்காட்டுச் செப்பேடு

43. S.I.I.Vol III N o 205, V.42-58

44. இறந்தவர் சமாதி மீது எழுப்பப்படும் கோயில்.

45. K.A.Neelakanda Sastri, The "cholas" Vol I.P.548

46. A.R.F. 1909, P.99 Paragra ph 43

47. S.I.I. Vol Iv No.327

48. க.வைத்தியநாதீச்சரன், பழையாறைத் தலவரலாறு ப.7 பழையாறைத் தேவஸ்தான வெளியீடு 1957

49. வெ.மகாதேவன் வரலாற்றுப் போக்கில் பழையாறை மாநகர் ப.20

50. மேற்படி நூல் ப.20

51. மேற்படி நூல் ப.21

52. மேற்படி நூல் ப.21

53. மேற்படி நூல் ப.21

54. South Indian Temple I.N.S. Vol II P.945-950

55. Inscription of the Pattukkotai State No.249 I.N.S. 358 of 1916

56. தஞ்சைச் செயமுறந்தையுச் செந்தமிழ் தொகுதி எக்ம சுந்தரபாண்டியன் மெய்க் கீர்த்தி வரம்.

57. திருவெள்ளறைக் கல்வெட்டு செந்தமிழ் தொகுதி 41 ப.215

58. மேற்படி நூல் ப.215

59. எஸ்.சேதுராமன், அருகடைச் சோழ மண்டலம் ராமன் & ராமன் பிரைவேட் லிமிடெட், பிடாரிகுளம் தெரு கும்பகோணம் 1976 ப.30

60. மேற்படி நூல் பக்.1.2.

61. நந்திக்கலம்பகம் பா.14,18,22,66.

62. வே.மகாதேவன், வரலாற்றுப் போக்கில் பழையாறை மாநகர் ப.26

63. மேற்படி நூல் ப.26

64. தஞ்சை கோயில் கல்வெட்டுக்கள் தமிழக அரசு தொல்லியல் துறை வெளியீடு கல்வெட்டு எண் 7. பக்.54-59

65. S.I.I V/ol II. No 66

66. வே.மகாதேவன் வரலாற்றுப் போக்கில் பழையாறை மாநகர் ப.27

67. மேற்படி நூல் ப.5

68. மேற்படி நூல் ப.5

69. தஞ்சைக் கோயிற் கல்வெட்டுக்கள், தமிழக அரசு தொல்லியல் துறை வெளியீடு கல்வெட்டு எண் .7, பக்,54-59 S.I.I. Vol.II.No.66

70. Annual Refort on Epigraphgy years Vol II.P.103 Paragraphy 19-21 Ephigraphia Indda Vol21, PP. 184-193

71. எஸ்.சேதுராமன் அருகடைச் சோழ மண்டலம் ராமன் & ராமன் பிரைவேட் லிமிடெட் பிடாரிகுளம் ரோடு, கும்பகோணம், 1976, ப.32.

பழைய நகைக் கோயில் திருவிழாக்கள்

## பழையாறைக் கோயில் திருவிழாக்கள்

வரலாற்றுப் புகழ்பெற்ற பழையாறை மாநகரின் திருக்கோயில்களின் திருவிழாக்கள் அனைத்தும் தமிழர்தம் மரபுப்படி, வளர்பிறையில் சித்திரை, வைகாசி, ஆனித் திங்களில் தொடர்ந்து பன்டு முதல் நடைபெற்று வருகின்றன.

## பழையாறை அருள்மொழித் தேவேச்சுரத் திருவிழா

ஆண்டுதோறும் ஆனிமாதத்தில் நடைபெறும் ஆனித்திருமஞ்சனத் திருவிழா அருள்மொழித் தேவேச்சுர ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இவ்விழாவுக்குரிய எல்லா செலவினங்களையும் முப்பக்கோயில் ஸ்ரீனிவாச இடங்கா பறந்தார்[1] பரம்பரையினர் ஏற்றுத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

ஆலயத்தில் இருந்த பெரும் சொத்துக்கள் அனைத்தும் ஆட்சியால் இவ்வாலயப் பெயரால் தோற்றுவிக்கப்பட்டு 'சோமநாதன்' அறக்கால் என்ற தர்க்காவுக்கு மாற்றியமைக்கப்பட்டன எனத் தக்க சான்றுகளுடன் ஆய்வாளர் கூறுகின்றனர்.[2]

இங்ஙனம் பெரும் சொத்தையும் வருவாயையும் இழந்த பழையாறைச் சோமநாதர் ஆலயம் வறுமையுற்றமையால் அவ்வூரிலுள்ள வாய்ப்பு வசதி மிக்கோர் பண்டு முதல் நடைபெற்று வந்த திருவிழாவினை விடாது ஆளுக்கு ஒன்றாகப் பங்கீடு செய்து கொண்டு மிக்க விருப்போடு நடாத்தி வந்தனர். இங்ஙனம் நடைபெற்று வந்த இவ்விழாக்களில் சில ஆதரிக இன்மையால் நடைபெறாது விட்டன.

சுவாமி மலை சுவாமி நாத சுவாமி கோயில் நிர்வாகத்துடன், இக்கோயில் நிர்வாகம் இணைக்கப்பட்ட பின் நடைபட்ட விழாக்களை மேற்படி நிர்வாகம் எளிமையாக நடாத்தி வருகின்றது.

பரம்பரையாக ஆலயத் திருவிழாவினை நடத்தி வந்த சைவ அடியார்கள் ஒருசிலர் விடுபடாமல் தொடர்ந்து இன்றும் அவ்விழாவினை நடாத்தி வருகின்றனர்.

ஐப்பசியில் தீபாவளி நன்னாளில் விசேட பூசை நிகழும். கார்த்திகையில் சுடலைக் கொளுத்தப்படும். மார்கழியில் தனுர் பூசைகளும், வைகுண்ட ஏகாதசி விழாவும் நடைபெறும். தை மாதம் சங்கராந்தி நாளிலும், பங்குனி உத்திரத்திலும் விழாக்கள் நடைபெறும்.

## 3. பட்டீச்சரம் கோயில் திருவிழாக்கள்

பழையாறை மாநகரின் ஒரு பகுதியான பட்டீச்சரத்தின் தேனுபுரீசுவரர் ஆலயம் மாநகரின் மற்ற எல்லா ஆலயங்களையும் விட, பொருளும், நிலமும் அருளும் செறிந்த ஆலயமாக, செல்வாக்கு மிக்க ஆலயமாக மக்கள் மத்தியில் பெரும் புகழ் பெற்று விளங்குகிறது.

இக்கோயில் நிர்வாகத்தை அறங்காவலர் குழுவும், இந்து மத அறநிலையைப் பாதுகாப்புத் துறையும் செம்மையாக நடாத்தி வருகின்றன.

மாநகருக்கு வழிகாட்டியாகவும், பெருமைக்குரியவராகவும் இவ்வாலய தலப்பெருமை பூசையும், திருவிழாக்களும் முறையாக நடைபெற்று வருகின்றன.

இவ்வாலயத்தில் நடைபெறும் விழாக்களை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. விசாக விழா
2. முத்துப் பந்தர் விழா
3. மார்கழி விழா
4. மாத விழாக்கள்.

### 1. விசாகவிழா :-

விழாக் காலங்களில் பட்டீச்சரமக்கள் எப்பொழுதும் புதுப்பொலிவோடும் உற்சாகத்தோடும் விழாவில் பங்கு கொள்வர்.

தமிழகக் கோயில் விழாக்கள் வழக்கமாகச் சித்திரை, வைகாசி, ஆனி, மாதங்களில் நடைபெறும். அவ்வண்ணமே இவ்விழாவும் வைகாசி மாதத்தில் விசாக நாளில் வளர்பிறையில் நடைபெறும்.

இவ்விழா நாளில் பட்டீச்சரம் ஊரே விழாக்கோலம் பூண்டிருக்கும். காலையில் பஞ்ச மூர்த்திகள் வாகனங்களில் ஆறுபோல் அகன்ற வீதி வழியே ஊர்வலமாகப் புறப்பட்டு திருமலைராயன் ஆற்றுக்குச் சென்று அவ்வாற்றில்

அமைக்கப்பட்டிருக்கும் பெரிய பந்தலின் கீழ் அமர்ந்து, முறையாக தீர்த்தம் கொடுத்து பக்தர்களுக்கு அருள் சுரக்கும் காட்சி நல்கி, மாலைப் பொழுதில் அங்கிருந்து திரும்பி, இரவில் வீதி வழியே உலாவந்து கோயிலுக்கு வந்து சேரும்.

2. முத்து பந்தர் பெருவிழா :- (மகோற்சவம்)

தேவாரம் மூவருள் முதல்வரான திருஞான சம்பந்தருக்குப் பட்டீச்சுரர் முத்துப்பந்தர் அளித்துச் சிறப்பிக்க நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு ஆண்டுதோறும் நடந்து வரும் விழா முத்துப்பந்தர் பெருவிழாவாகும்.

இவ்விழா ஆனிமாதம் முதல் தேதியில் மிகச் சிறப்பாக நடைபெறும். சிறப்பு மிகு பெருவிழாவாகும். இவ்விழாவில் இவ்வூரைச் சுற்றியுள்ள பல ஊர் மக்களும் விருப்போடு கலந்து கொள்வர்.

இப்பெரு விழா நடக்க இருக்கும் இரண்டு நாட்களுக்கு முன்னதாகத் திருஞான சம்பந்தருக்குத் திருமுலைப்பால் அளித்தல், முத்துச் சிவிகை, முத்துச் குடைகொடுத்தல், பொற்றாளம் தருதல், முத்துச் சின்னங்கள் அருளுதல், திருஞான சம்பந்தர் ஓடமிடுதல் முதலிய விழாக்கள் இங்கு நடைபெறும்.

திருஞான சம்பந்தருக்கு வெவ்வேறு தலங்களில் நிகழ்ந்த மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை இத்தலத்தில் ஒருமைப்படுத்தித் தொடர் விழாக்களாக நடத்துகிறார்கள். திருஞானசம்பந்தருக்குச் சிவபெருமான் திருவால் ஆங்காங்குக் கிடைத்த சிறப்புக்கள் வருமாறு.

சீர்காழியில் உமையாள் திருஞானசம்பந்தருக்குத் திருமுலைப்பால் ஊட்டினார். திருக்கோடிக்காவில் ஐந்தெழுத்து வரையப் பெற்ற பொற்றா-ளங்களைச் சம்பந்தர் பெற்றார். திருவாவடுதுறையில் பொற்கிழி பெற்றார். திருக்கொள்ளம்பூதூரில் ஓடம் விட்டார். பட்டீச்சுரத்தில் முத்துப்பந்தர் பெற்றார். இந்நிகழ்ச்சியினை

"இருந்தண் புகலி கோலக்கா எழில் ஆவடுதுறைச்சீர்

பொருந்தும் அரத்துறை போகங்கள் தாளம் நல் பொன்சிவிகை

அருந்திட வொத்தமுத் தீசெய வேற அரனுறைந்த

பெருந்தகை சீர்த்தனை எம்பர மோதிற பேசுவதே"[3]

" கொவ்ளம் பூதாரிச் சூடிகள் நாவாய் அது கொருக்க

உவ்வமே கோலா வளர்நாள்"[4]

என்ற நம்பியாண்டார் நம்பி கூற்றினால் அறிகிறோம். இச்சிவத்தலங்களை வழிபட்டு வரும் திருஞான சம்பந்தர் திருவலஞ்சுழியை வணங்கிப் பழையாறைப் பதியை வழிபடுவதற்கு அடியார்களுடன் நடந்து சென்ற வழியில் உள்ள மழையாறை மேற்புறத்தலத்தை வணங்கிய பின், தேவியார் வழிபட்ட திருச்சத்தி முற்றத்திற்கு வந்து சேர்ந்து பெரு ஆவலோடு பெருமானை வழிபட்டார்.

பிறகு, அங்கிருந்து பக்கத்திலுள்ள பட்டீச்சரம் சென்று வணங்குவதற்குத் தம் அடியார்களுடன் புறப்பட்டார். அப்போது சூரியன் மிதுன ராசியில் பிரவேசித்திருந்த முதுவேனில் கால மானதால் வெயிலின் கொடிய வெப்பத்தைத் தணிக்க பட்டீச்சரப் பெருமான், திருஞானசம்பந்தருக்குப் பூத கணங்கள் மூலம் அழகிய முத்துப்பந்தரை அனுப்பிவைத்தார். பூதகணங்கள் தாங்கிச் சென்று திருஞானசம்பந்தருக்குத் தெரியாதபடி அவரது திருவழகிற்கு மேல், முத்துப்பந்தரை பிடித்துப் பெருமான் அருளியதையும் முத்துப்பந்தரை பிடித்துப் பெருமாட்டி அருளியதையும் கூறின. திருஞானசம்பந்தர் இறைவன் திருவருளைப் பணிந்து, போற்றி முத்துப் பந்தரின் நிழலில் வந்தார். தேவர்கள் இக்காட்சியைக் கண்டு பூமழை பொழிந்ததால் முத்துப்பந்தர் போலக் காட்சியளித்தது.

முத்துப் பந்தரின் நிழல் அம்பலத்தில் பெருமான் தூக்கிய திருவடி நிழல் போல் விளங்கியது. தொண்டர் கூட்டம் ஆரவாரம் செய்யும், மறைகளின் முழக்கம் முழங்கி எழவும் அடியார் கூட்டம் எதிர் கொள்ளவும், திருஞானசம்பந்தர் அழகிய முத்துப் பந்தரின் நிழலில் பட்டீச்சரம் நோக்கி வந்தார். அப்போது அற்புதக் காட்சியைக் காணவும், திருஞானசம்பந்தர் தம்மை வழிபடவும், பட்டீச்சரப்பெருமான் நந்தி தேவரை விலகும்படி கட்டளையிட நந்தியும் நகர்ந்து ஒதுங்கினார். இதன் காரணமாக முன் கோபுரத்தையடுத்துள்ள நந்தியும் விலகியுள்ளதை இன்றும் காணலாம்.

திருஞானசம்பந்தர் கோயிலினுள்ளே புகுந்து வலம் வந்து பட்டீச்சுவரின் திருவடித் தாமரை மலர்களைத் தரிசித்துப் பூமியில் வீழ்ந்து வணங்கி

"பாடல்-மறை சூடல்மதி பல்வளையொர் பாகமதில்மூன்றோர் கணையால்
கூடஎரி யூட்டி யெழில் காட்டி நிழல் கூட்டு பொழில் சூழ் பல பூசையும்,
மாடமடி பாடியுறை பட்டீச்சுரம் மேயகடி கட்டரவினார்
வேடநிலை கொண்டவரை வீடுநெறி காட்டுவினை வீடுமவரோ"[5]

என்று பாமாலை பாடித் திருவருள் திறத்தை வியந்து ஆனந்தப் பெருவெள்ளத்தில் மூழ்கி பேராதப் பெருங்காதலுடன் திருக்கோயிலின் புறத்தே வந்து தங்கினார்.

இந்நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட இப்பெருவிழா சிறப்புக் குன்றாமல் அன்று போல் இன்றும் நடைபெற்று வருகின்றது.

3. மார்கழிவிழா :-

தசரதர் புதல்வரான இராமர் இலங்கை மாநகரில் சிறை வைக்கப்பட்டிருந்த சீதையை மீட்கவேண்டி இராவணனுடன் போர் புரிந்து அவனைக் கொன்று மாபெரும் வெற்றி பெற்றார். இராவணனைக் கொன்றதனால் ஏற்பட்ட குற்றம், பாவம் நீங்கும்படி தாம் ஒரு லிங்கத்தையும் அனுமனால் கொண்டு வரப்பட்ட லிங்கத்தையும், சேதுவில் பிரதிஷ்டை செய்து வழிபட்டார். பின் அயோத்திக்குத் திரும்பிச் செல்லும் வழியில் பட்டீச்சுரமாகிய இத்தலத்தை அடைந்து அனுமான் கொண்டு வந்த மற்றோர் லிங்கத்தை தாபித்துப் பக்கத்தில் தன் வில்லின் முனையால், ஓர் கிணற்றைத் தோற்றுவித்து அதன் நீரால் பெருமானுக்கு அபிடேகம் செய்து வழிபட்டார். இதனால், பெருமானுக்கு இராமருக்கு இராவணனைக் கொன்றதால் ஏற்பட்ட பிரமஹத்தி தோஷம் நீங்கப் பெற்றுத் தன் நாடு சென்று பலகாலம் வாழலானார். இத்தலத்தில் இராமர் பிரதிட்டை செய்த லிங்கம் இராமலிங்கம் என்றும் அவரால் உண்டாக்கப் பெற்ற கிணறு கோடிதீர்த்தம் என்று வழங்கப் பெறும்.

இராமர் வழிபட்ட ஐதிகமாக மார்கழி மாதம் அமாவசை நாளில் திருவிழா நடைபெறுகிறது. அன்றைக்குப் பஞ்சமூர்த்திகள் புறப்பட்டுக் கோடி தீர்த்தத்தில் தீர்த்தங்கொடுக்கும். இவ்விழா தமிழக ஆலய விழா மரபுக்கு மாறுபட்டு அமாவாசை நாளில் நடக்கிறது என்பது கவனத்தில் கொள்ளத் தக்கதாகும்.

4. மாத விழாக்கள்:
---

மாதந்தோறும் பண்டுமுதல் சிறப்பாகப் பழைய முறைப்படி விழாக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

சித்திரைப் பூரண நாளில் அபிடேக ஆராதனைகள் நிகழும். ஆனியில் நடராச திருமஞ்சனமும் ஆடிப்பூர நாளில் அம்மன் புறப்பாடும், ஆவணியில் நடராசர் அபிஷேகமும், விநாயகர் சதுர்த்தியில் அபிஷேக ஆராதனைகளும் நடைபெறும்.

ஆவணி மூலத்தில் சுவாமி புறப்பாடு உண்டு. நவராத்திரி விழாவும் பத்தாம் நாள் நடைபெறும். ஐப்பசியில் அன்னாபிஷேகமும் நடைபெறும்.

இவ்வாறு மாதந்தோறும் விடுபடாமல் விழாக்கள் சிறப்பாகவும், உற்சாகமாகவும், இன்றும் நடைபெற்று வருகின்றன. இவ்விழாக்கள் அனைத்திலும் பங்குகொண்டு ஊர்களில் உள்ள பக்தகோடிகள் பேரருளைப் பெற்று, இன்புற்று வாழ்-வாங்கு வாழ்கின்றனர்.

4. நந்திபுர விண்ணகரப் பெருவிழா:-
---

(நாதன் கோயில் பிரம்மோற்சவம்)

இரண்டாம் நந்திவர்மன் (கி.பி.710-715) பழையாறை மாநகரினைத் தன் தென்புறத் அடிநகராகக் கொண்டு சோழ நாட்டினை ஆண்ட காலத்தில் பழையாறை மாநகரின் கிழக்கு எல்லையில் விஷ்ணுவுக்குக் கிரகம் ஒன்று கண்டான். நந்திபுர விண்ணகரம் என்ற வழங்கும் இத்தலத்தினைத் திருமங்கையாழ்வார்
மங்களாசன
மங்களாக சாசனம் செய்துள்ளார்.

இவ்வாலயத்தில் நடைபெறும் திருவிழாக்களை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

1. பிரம்மோற்சவம் (பெரு விழா)

2. மாதாந்திர விழாக்கள்

## 1. பிரம்மோற்சவம் (பெருவிழா)

ஆண்டுதோறும் வைகாசி மாதத்தில் விசாக நட்சத்திரத்தில் இப்பிரம்மோற்சவ விழா சிறப்பாக பத்து நாட்கள் நடைபெறும். யாகசாலைப் பூசையுடன் தொடங்கி முதல் எட்டு நாட்கள் கொடியேற்றம் முதலிய நிகழ்ச்சிகளும், ஒன்பதாவது நாள் விசாக நட்சத்திரத்தன்று திருவிழாவும், பத்தாவது நாள் கொடி இறக்கமும் நடைபெற்று விழா இனிது முடியும்.

### முதல் நாள் நிகழ்ச்சி:-

விழா காணவரும் பெருமக்கள் அருள் பெற்று நலம் பெற உற்சவ மூர்த்தி ஜெகன்னாத பெருமாள் படிச்சட்டத்தில் புறப்பட்டு, பிரகாரம் சுற்றி வந்து காலை பதினொரு மணிக்குள் கொடிமரத்தில் நல்லோரையில் முறையாகக் கொடியேற்றி விழாவினைத் தொடங்கி வைப்பர்.

அன்று இரவு உற்சவ மூர்த்தி ஜெகன்னாத பெருமாள் சிறந்த அலங்காரத்துடன் படிச்சட்டத்தில் பக்த கோடி பெருமக்கள் சுமந்து செல்ல எழுந்தருளி தேரின் மேவிய செழுமணி வீதிகளில் காட்சி தருவார்.

### இரண்டாம் நாள் நிகழ்ச்சி:-

இரண்டாம் நாள் காலை உற்சவ மூர்த்தி ஜெகன்னாத பெருமாள் படிச்சட்டத்தில் பிரகாரவலம் வந்து பின் மகச் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் எழுந்தருளி ஆசு போல் அகன்ற வீதி வழியே பெருமிதத்தோடு உலா வருவார்.

அன்று இரவு எட்டு மணிக்கு மீண்டும் உற்சவமூர்த்தி ஜெகன்னாத பெருமாள் படிச்சட்டத்தில் எழுந்தருளி, பெருவீதியின் வழியே வந்து காட்சி தருவார்.

<u>மூன்றாம் நாள் நிகழ்ச்சி:-</u>

மூன்றாம் நாள் காலைப் பொழுதில் உற்சவ மூர்த்தி ஜெகன்னாத பெருமாள் வழக்கம் போல் பிரகார வலம் வந்து பின் சிறந்த முறையில் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வண்ணம் அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் எழுந்தருளிப் பக்தர்களுக்குக் காட்சியினை நல்குவார்.

அன்று இரவு உற்சவமூர்த்தி ஜெகன்னாத பெருமாள் 'ஆதிசேஷவாகனத்தில் அமர்ந்து கம்பீரமாக வீதி உலா வந்து பக்தர்களுக்கும் காட்சித்தருவார்.

<u>நான்காம் நாள் நிகழ்ச்சி:-</u>

வழக்கம் போல் காலை உற்சவ மூர்த்தி ஜெகன்னாத பெருமாள் பிரகார வலம் வந்து பின் எழிலுடன் அலங்கரிக்கப்பிட்ட பல்லக்கில் எழுந்தருளிப் பக்தர்களுக்குக் காட்சியினை நல்குவார்.

அன்று இரவு எட்டு மணிக்கு உற்சவ மூர்த்தி ஜெகன்னாத பெருமாள் கருடவாகனத்தில் எழுந்தருளி சப்பரத்தில் வீதிவழியே சுற்றி வந்து காட்சி தருவார்.

<u>ஐந்தாம் நாள் நிகழ்ச்சி:-</u>

காலை உற்சவ மூர்த்தி ஜெகன்னாத பெருமாள் பிரகார வலம் வந்து பின் அலங்கரிக்கப்பட்ட பல்லடகடிகடவ எழுந்தருளி வீதி வழியே சுற்றி வந்து காட்சி தருவார்.

அன்று இரவு எட்டு மணிக்கு மீண்டும் உற்சவமூர்த்தி ஜெகன்னாத பெருமாள் அனுமான் வாகனத்தில் எழுந்தருளிக் காட்சி தருவார்.

<u>ஆறாம் நாள் நிகழ்ச்சி:-</u>

காலை உற்சவ மூர்த்தி ஜெகன்னாத பெருமாள் பிரகார வலம் வந்து பின் அலங்காரம் செய்யப்பட்ட பல்லக்கில் எழுந்தருளி காட்சி தருவார்.

அன்று இரவு உற்சவ மூர்த்தி மீண்டும் ஜெகன்னாத பெருமாள் பிர் யானை வாகனத்தில் எழுந்தருளி வீதி வழியே சுற்றி வந்து காட்சி தருவார்.

ஏழாம் நாள் நிகழ்ச்சி:-

காலை எட்டு மணியளவில் உற்சவ மூர்த்தி ஜெகன்னாத பெருமாள் படிக்கட்டத்தில் பிராகார வலம் வந்து 'சூரணா' அபிஷேகம்' எனும் 'படி' அளப்பார். இறைவன் முன் நெல்லைக் கொட்டி அறங்காவலர், இறைப்பணியாளர் மூலம் ஆலயத்தில் பணிபுரியும் அனைவருக்கும் அளந்து கொடுப்பார். இந்நிகழ்ச்சியே படியளப்பதாகும். படியளப்பதுடன் அன்றைய நிகழ்ச்சிகள் முடியும். அன்று வீதி உலாக் காட்சி இல்லை.

எட்டாவது நாள் நிகழ்ச்சி:-

காலை உற்சவமூர்த்தி ஜெகன்னாத பெருமாள் பிரகார வலம் வந்து 'வெண்ணெய்த்தாழி' நிகழ்ச்சியைக் காட்டும் அலங்காரத்தோடு பல்லக்கில் எழுந்தருளி உலா வருவது மிக முக்கிய நிகழ்ச்சியாகும்.

அன்று இரவு உற்சவ மூர்த்தி ஜெகன்னாத பெருமாள் குதிரை வாகனத்தில் சுற்றி வந்து காட்சி தருவார்.

ஒன்பதாம் நாள் நிகழ்ச்சி:-

ஒன்பதாவது நாள் பிரம்மோற்சவம் பெருவிழா எனும் இரதநாள் நிகழ்ச்சியாகும். அன்று பக்கத்து ஊர்வாழ் மக்கள் பெருந்திரளாக நாதன் கோவிலைச் சூழ்ந்து விடுவார்கள்.

காலை உற்சவமூர்த்தி ஜெகன்னாத பெருமாள் படிக்கட்டத்தில் பிராகார வலம் வந்த பின் உள்ளத்தைக் கவரும் வண்ணம் அலங்கரிக்கப்பட்ட தோற்றப் பொலிவோடு கம்பீரமாக நிற்கும் தேரில் எழுந்தருளி வீதிகளின் வழியே உலாவந்து பக்தகோடிகளுக்குக் காட்சி தருவார்.

காலையில் தேரில் புறப்பட்ட உற்சவ மூர்த்தி ஜெகன்னாத பெருமாள் இரவு விண்ணகரம் வந்து சேருவார். பெருவிழாவின் இறுதி நாளான அன்று ஊரே விழாக் கோலம் பூண்டு கலகலப்புடன் புது பொலிவோடும் தெம்போடும் காட்சியளிக்கும்.

பத்தாம் நாள் நிகழ்ச்சி:-

காலை உற்சவ மூர்த்தி ஜெகன்னாத பெருமாள் பிரகார வலம் வந்து, விழாவின் தொடக்கத்தில் ஏற்றிய கொடியை இறக்கும் நிகழ்ச்சியை த்வஜாவரோகணமாகும்.

இங்ஙனம் சிறப்பாக நடந்து வந்த இப்பிரம்மோற்சவம், கோயில் நிலத்தைப் பயிரிடுவோர் ஒழுங்காக குத்தகை கொடுக்காத காரணத்தால் வருவாய் குன்றி அண்மையில் நின்று விட்டது.

மாதாந்திர விழாக்களை மட்டும் இவ்விண்ணகரத்தை நிர்வகித்து வரும் வானமாமலை மடம் எளிமையாக நடத்தி வருகிறது.

மாதாந்திர விழாக்கள்:-

1. சித்ரா பௌர்ணமி:- (வசந்த உற்சவம்)

சித்திரை மாத பௌர்ணமிக்கு நான்கு நாட்கள் முன்னதாக விழா தொடங்கும் ஐந்தாவது நாள் சித்ரா பௌர்ணமியன்று சிறப்பாக நடந்து முடியும்.

முதல் நான்கு நாட்கள் உற்சவமூர்த்தி ஜெகன்னாத பெருமாள் பிரகார வலம் வருவார். ஐந்தாவது நாள் சித்திரை முழுநிலவில் உற்சவமூர்த்தி ஜெகன்னாத பெருமாள் சப்பரத்தில் எழுந்தருளி உலாக் காட்சி தருவார். சித்ராபௌர்ணமி விழா பூம்புகார் நகரில் சிலப்பதிகார காலத்தில் நடந்த 'இந்திர விழா' வினை நினைவு படுத்துவதாய் அமைந்துள்ளது.

2. ஆனி மாத விழா :-

ஆனிமாத முதல் தேதியில் ஜேஷ்டா அபிஷேகம் (தைலக் காப்பு சாத்துதல்) நடைபெறும்.

3. ஆடி மாத விழா :-

ஆண்டாள் பிறந்த ஆடிப்பூரத்தில் சிறப்பான பூசை, ஆராதனைகள் நடைபெறும்.

4. கார்த்திகை மாத விழா :-

பெரிய கார்த்திகையன்று கார்த்திகை தீபம் ஏற்றப்படும். சுடலை கொளுத்தப்படும்.

5. மார்கழி மாத விழா :-

இம் மார்கழிமாத விழா பழம்"பாவையார் நோன்பினை" நினைவு படுத்தும், இம்மாதத்தில் திருப்பாவை படம் பிடிக்கப்படும், இவ்விழாவினை இராபத்து, பகல்பத்து என இரு கூறுபடுத்துவர்.

அ.- இராபத்து :-

வைகுண்ட ஏகாதசி முதல் ஒன்பது நாளைக்கு இரவு உற்சவ மூர்த்தி ஜெகந்நாத பெருமாள் உள் பிரகாரத்தில் படிச்சட்டத்தில் எழுந்தருளி காட்சிதருவார். இதற்காகும் செலவுகளை ஊர் மக்கள் ஏற்றுக்கொள்வர்.

ஆ - பகல் பத்து :-

மார்கழி அமாவாசை முடிந்து பிரதமையில் தொடங்கி ஒன்பது நாள் பகல் வேளையில் உற்சவமூர்த்தி படிச்சட்டத்தில் பிரகார வலம் வருவார். இதற்காகும் செலவுகளை வெளியூர் ஏற்றுக் கொள்கிறனர்.

6. தை மாதம் :-

தை மாத அமாவாசை நாளில் உற்சவமூர்த்தி ஜெகந்நாத பெருமாள் கருடவாகனத்தில் எழுந்தருளி வீதி உலாத்து பக்தர்களுக்குக் காட்சி தருவார்.

பழையாறை மாநகரைச் சார்ந்திருந்த பின்னர், சிதைந்து சிற்றூர்கள், பேரூராக மாறியுள்ள மற்றைய ஊர்களில் விழாக்கள் அவ்வளவு சிறப்பாக நடைபெறவில்லை.

பிற்கால சோழர் காலத்திலும், அதனை அடுத்தும் அண்மைக் காலத்திலும் தோன்றிய ஆலயங்களுள் சில இருந்த இடம் தெரியாமல் அழிந்து விட்டன.

இருக்கும் ஆலயங்களில் ஒரு சில கவனிப்பார் அற்ற நிலையில் சிதைந்து அழிவினை நோக்கி மெல்ல நகர்ந்து வருகின்றன. ஒரு சில வருவாய் இன்றிப் பூசை, விழாக்கள் அற்றுப் பொலிவிழந்துள்ளன. இவற்றை நோக்க, மேலே குறிப்பிட்ட ஆலயங்களின் விழாக்கள் சிறப்பாக உள்ளன.

## அடிக்குறிப்புகள்

1. மூப்பக் கோயில் மணியக்காரர் குடும்பம்.
   இப்போது வாரிசு இல்லை.
2. பேட்டி.
3. பதினோராம் திருமுறையில் நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி பா - 40
4. அதே நூல் - பா- 41.
5. திருஞான சம்பந்தர் தேவாரம் 3:73:1.

# பழையாறைக் கோயில்களின் கலைச் சிறப்பு

## பழையாறைக் கோயில்களின் கலைச் சிறப்பு

பழையாறை மாநகரில் நிலவிய ஆலயங்களுள் இன்று எஞ்சி இருப்பன சிலவே ஆகும். அவற்றனுள் தொன்மைச் சிறப்பு குன்றாதன மிகச் சிலவே. அவை சோழர், பல்லவர் முதலான மன்னர் தம் சிற்ப ஓவியக் கலைச் சிறப்பைப் புலப்படுத்தும் அருள் செல்வங்களாகும்

### ஆலய அமைப்பு

பல்லவ அரசன் மகேந்திரவர்மன் (கி.பி. 615-630) காலத்துக்கு முன்னால் திருக்கோயில்கள் பெரும்பாலும் செங்கல் தளிகளாக இருந்தன. இவ்வரசன் அவற்றைக் குடைக் கோயில்களாகவும் கருங்கல் ஆலயமாகவும் மாற்றி கட்டிடக் கலையில் ஒரு புரட்சியைப் புகுத்தினான். பிற்காலச் சோழர்கள் கருங்கற்றளிகளாக அவற்றினை விரிவு படுத்தித் திருத்தொண்டு செய்தனர். கருங்கல் தளிகளாகக் கட்டப்பட்ட ஆலயங்கள் பல மண்டப இணைப்புக்களைப் பெறலாயின. சிற்றாலயங்களாகத் தோன்றியவை நாளடைவில் சுற்றுச் சுவர்கள் கோபுரங்கள், மண்டபங்கள் இவைகளைப் பெற்றுப் பேராலயங்களாக கோயில் மாநகரங்களாக மாறின.

### 1. ஸ்ரீ பழையாறை அருள்மொழித் தேவேச்சரம்

கிழக்கு நோக்கியமைந்த இவ்வாலயம் திருவீதிகள் உள்ளிட்டு மூன்று பிரகாரங்களை உடையது. கிழக்கு மேற்கில் நானூற்று நாற்பது அடிகளும், தெற்கு வடக்கில் 255 அடிகளும் உடையது. இராச கோபுரத்தின் பீடம் 75 அடி அகலம் உள்ளது. இக்கோபுரம் முற்றுப் பெறாத நிலையில் இருக்கிறது. இதனை இராச கோபுரத்தை அடுத்து இரண்டு அடுக்கு நிலையினை உடைய சிறிய கோபுரம் இருக்கிறது. சுவாமிக்கும், அம்மைக்கும் தனித்தனி சன்னதிகள், உள்ளன.

முதல் பிரகாரச் சுற்றில் திருமாடப் பத்தி அமைந்திருந்தது. இப்பொழுது அது சிதைந்து காணப்படுகிறது. இப்பிரகாரத்தில் தட்சிணாமூர்த்தி அர்த்தநாரீஸ்வர

பிரம்ம தேவர் போன்றோர் எழுந்தருளியிருக்கின்றனர். முன் மண்டபத்தில் எழுந்தருளி அன்பர்களை மகிழ்விக்கும் கைலாயநாதர் திருவுருவினைக் காண 'ஆயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே' என்னும் படியாக அவர் எழிலுடன் இருக்கிறார்.

## சிற்பச் செல்வங்கள்

சிற்ப சௌந்தர்யத்தைத் தரும் இவ்வாலயத்திலுள்ள திருவடிவம் ஒவ்வொன்றும் உயிரோவியமாகத் திகழ்கின்றன. அங்குள்ள துர்க்கையம்மன் அங்கு சக்கரங்களுடன் ஆறு திருக்கரங்களுடன் சாந்தி வீசும் திருக்கண்களுடனும் இளநகை வீசும் அதரங்களுடனும் காட்சி அளிக்கிறார்.

## கைலாய நாதர்

கைலாசபதி வீற்றிருக்கும்மலையை நகர்த்தும் அடாத நோக்கத்துடன் இராவணன் அந்த மலையை முதலில் எற்றிக் கொள்கிறான். அவனது பத்து தலைகளும், மலை கிடுகிடு வென்று, இருபது தோள்களும் இந்த வேலைக்குப் பயன்படுகின்றன மலை கிடுகிடு வென்று ஆடுகிறது. உமாதேவியார் இந்த எதிர் பாராத அசைவினால், பயந்தவளாக எம்பெருமானைத் தழுவிக் கொள்ள விழைகிறார். தமது இடக்கையினால் கௌரியை அணைத்த சங்கரர் இந்த நிகழ்ச்சிக்குரிய காரணத்தையறிந்தும் எந்தச் சலனமும் இன்றி கால் கட்டை விரலால் மெதுவாக அழுத்துகிறார்.

இராவணனுடைய விழிகள் பிதுங்குகின்றன. அவன் திணறும் போது மார்பு விம்முகிறது அவனுடைய ஏமாற்றம் பத்து நிலைகளிலும் வெளிப்படுகின்றன. இவற்றை எல்லாம் சிற்பம் அழகுறச் சித்தரித்துக் காட்டுகிறது.

## ஆலய முன் மண்டப அமைப்பு

மண்டபமே ரதமாகி அதற்குச் சிறப்பான வேலைப்பாடுகள் நிறைந்த சக்கரமும் அமைக்கப்பெற்று, உடலெல்லாம் அலங்கரிக்கப்பட்ட குதிரையும், யானையும் அதைப் பலங்கொண்டு இழுப்பது போல மண்டபம் காட்சியளிக்கிறது.

யானையின் வளைந்த முதுகைக் கவனித்தால், அது சிரமப்பட்டு இருக்கிறது என்பதை அறிவோம். அச்சிரமத்தை அதற்கு அளிப்பவர்கள் இருவர், முதுகின் மேல் அமர்ந்து விரட்டுவது மிகப் பொருத்தமாக உள்ளது. சக்கரம் பூமியில் புதைந்து கிடந்தாலும் சிற்பக் கலை நுட்பம் குன்றாமல் குலையாமல் இருக்கின்றது. பூமியின் சக்கரம் உருளும் இடங்களிலும் சிற்ப வேலை நிறைந்திருப்பது நோக்கத் தக்கது. மண்டபத்தின் அடிவரிசை முழுவதும் எண்ணற்ற சிறுசிறு நடனப் பெண் மணிகளின் சிற்பங்களைப் பார்க்கலாம். ஒன்று போல் ஒன்று இல்லாமல் உருவாகியுள்ளன. திறமையுடன், பொறுமையும் பெற்றவர்கள் தென்னாட்டுக் கலை மன்னர்கள் என்பதை இந்த உருவங்கள் விளக்குகின்றன.

<u>நரசிம்ம மூர்த்தி</u>

முன் கோபுரத்தை தாண்டியதும் அம்மன் சந்நதி அமைந்துள்ளது. அதன் முன் மண்டபத்தில் ஏகம் இரு புறங்களிலும் துவார பாலகர் சிலைகள் இருக்க நடுவே, நரசிங்க மூர்த்தியின் விளையாடல்களை விளக்கும் சிற்பங்கள் இருக்கின்றன. இரண்ய கசிபு தனது மைந்தனை நோக்கி

"உன் இறைவன் இந்த தூணிலும் இருக்கிறான்'' என்று ஏளனமாகக் கேட்பதும், பிரகலாதன் 'இருக்கிறான்' என்று திடமாக பதில் சொல்வதுமாகிய நிலையை பீடத்தின் வடகோடியில் நாம் காண்கிறோம். அதற்கு அடுத்த சிற்பத்தில் திருமால் தூணைப் பிளந்து கொண்டு உக்கிரமான வடிவத்தில் பல கைகளுடன் வெளிப்பட்டு இரண்யனுடன் சண்டையிடுகின்றார். இந்த சண்டையின் வெற்றி யாருக்கு என்பதைச் சிற்பத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே சொல்லி விடலாம்.

<u>பழையாறை வடதளி</u>

இக்கோயில் மேற்குத் திசையை நோக்கி அமைந்துள்ளது. சமணர்களின் ஆட்சிக்கு இரையான இவ்வாலயம் திருநாவுக்கரசரால் சிறப்புப் பெறுகின்றது. தரும சேனர், தரும பாலர் போன்ற சமணப் பெயர் அடியாக இவ்வாலயம் பெயரும் இடையில் தருமபுரீஸ்வரர் என்று வழங்கப்பட்டதைக் கொண்டு இக்கோயில் சமணர்களின் ஆட்சிக்கு உட்பட்டு அல்லல்பட்ட பழம் நிகழ்ச்சியை நினைவு கூறலாம்.

பல்லவர் கால பழமை உடைய இவ்வாலயம் மாடக் கோயில் அமைப்புடையது. ஆலயத்தின் வலப்புறத்தில் படிக்கட்டுக்கள் சிறப்பாக அமைக்கப்பெற்றுள்ளன. இடையில் அமைந்த புரையில் முனிவர் திருவுருவம் அதிகார நந்தியின் அழகுருவம் உள்ளன. கோயில் புறமதில் கருவறையில் உள்ள அர்த்தநாரி உருவம் எழிலுடன் செதுக்கப்பட்டுள்ளது. பிரம்மன், இலிங்கோத்பவர், தென்முகக் கடவுள் ஆகிய கோட்டச் சிலைகள் காணப்படுகின்றன. திருக்காம கோட்டமுடைய நாச்சியார் விமல நாயகி என்று அழைக்கப்படுகிறார். திருச்சுற்றுச் சுவர்கள் முழுவதும் அழிந்து விட்டன.

இடிந்த கோபுரம் எதிர் கொண்டு அழைக்கிறது. எத்தனையோ வரலாற்று ஏற்றத்தாழ்வுகட்கு ஆட்படும் இத்தலம் வழிபாட்டுச் சிறப்புக்குன்றாமை மனத்திற்கு மகிழ்ச்சியூட்டுகிறது. நாட்டியச் சிற்பங்களும், குதிரை மேல் இருக்கும் வீரர்கள் உருவங்களும் மிக அழகாகப் படைக்கப்பட்டுள்ளன.

மண்டபப் பகுதிகள் பலவற்றையுடையது இவ்வாலயம். இது ஒரு நிலை எழில் நிலையம், யானையும், குதிரையும் இருப்பதாக அமைந்துள்ள முன் மண்டபம் சோழர் காலக் கலைத்திறனுக்கு எடுத்துக்காட்டு எனலாம். இம்மண்டபத்துள்ள சிவபெருமான், ஆறுமுகம், கைலாயநாதர் ஆகிய திருவுருவங்கள் கண்டாரை மயக்கும் பெற்றியன. இந்த அடுக்குகளையுடைய அழகிய விமானம் சோழர் காலச் சிற்பகலையின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. இராவணன் கைலையை பெயர்க்கும் காட்சி, கஜசம்ஹாரம், நரசிம்ம அவதாரம், உமா சகிதர் உருவங்கள், கோட்டச்சிலைகள் ஆகியவை கண்டவர் நெஞ்சகலாக் காட்சிகளாம்.

காமக் கோட்டப் படிக்கட்டின் அருகில் நரசிம்ம அவதாரம் சிற்பங்கள் வடிக்கப் பெற்றுள்ளன.

அமர்நீதி நாயனார், திருவருளால் துலையே விமானமாகி மனைவி, மைந்தருடன் மேலுலகம் சென்ற காட்சி[2] இங்குச் சிற்ப வடிவில் மிகச் சிறப்பாக கலை நுணுக்கத்துடன் செதுக்கப்பட்டுள்ளது.

### 3. பழையாறை மேற்றளி:

கிழக்கு நோக்கி அமைந்துள்ள இவ்வாலயத்தின் கோபுரம் முற்றிலும் இடிந்து விட்டது. இது குறைந்தது மூன்று நிலைகளையேனும் உடைய கோபுரமாக இருந்திருத்தல் வேண்டும். கோபுர வாயிலின் வெளிப் பகுதியில் நந்தி ஒன்று கம்பீரமாக நிற்கின்றது.

இக்கோயில் ஒரு காலத்தில் பெரிய திருச்சுற்றுகள் உடையதாக இருந்திருக்க வேண்டும். இலிங்கோத்பவர் கதை உருவால் அமைக்கப்பட்டுள்ளார். ஆனால் வடப்புறப்புழை உருவாம் பிரமன் அமர்ந்த கோலத்துடன் கண்டாரைக் கவரும் வண்ணம் அழகிய திருவுருவுடன் அமைக்கப்பட்டுள்ளான்.

### 4. திருப்பட்டீச்சரம்

#### கோயில் அமைப்பு

பழையாறை நகரில் அமைந்துள்ள திருப்பட்டீச்சரர் ஆலயம் சைவ ஆகமப்படி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயில் ஐந்து பெரிய கோபுரங்களைக் கொண்டுள்ளது. உள்ளே மூன்று பிரகாரங்களும், வெளியில் ஒரு வீதியும் உள்ளன. கோயிலுக்குள் முதல் பிரகாரத்தில் நடு மண்டபத்தில் மூலவர் பட்டீச்சரரும் வெளியில் சோமாஸ்கந்தரும், திருஞான சம்பந்தரும் வீற்றிருக்கின்றனர். சுற்றிலும் சப்தக் கன்னிகைகள், சுவர்ண விநாயகர், ஆறு மகாலிங்கம், சண்முகம், இராமலிங்கம், லக்ஷ்மி, முதலியோரின் சந்நிதிகள் உள்ளன. வடமேற்கு மூலையில் அறுபத்துமூவர் மண்டபம் உள்ளது. உட்கோபுர வீதிக்கு முன்னே வன்னிமரமும், ஞானவாவியும், திருஞான சம்பந்தர் மடமும், நந்தவனமும், வடக்குக் கோபுர வாயிலில் துர்க்கைக் கோயிலும் உள்ளன. கோயிலில் உள்ள மூர்த்திகளில் மதவாரணப் பிள்ளையார், சண்முகர், பைரவர், துர்க்கை ஆகிய சிலைகள் சோழன் மாளிகை இருந்து கொண்டு வந்து பிரதிஷ்டை செய்யப்பட்டன.[3] துர்க்கையம்மன் முற்காலத்தில் சோழன் மாளிகைக் கோட்டையில் காவல் தெய்வமாய் இருந்ததாய் சொல்லப் படுகிறது.[5]

ஸ்ரீ

கோயிலின் சுற்றளவு கீழ் மேலடி அறுநூற்று ஐம்பது தென்வடலடி இரு நூற்றுத் தொண்ணூற்றைந்து.

## சிற்பங்களின் சிறப்பு

இக்கோயிலின் தூண்களும், மண்டபங்களும், மூர்த்திகளும் சிறந்த சிற்பங்களைக் கொண்டு விளங்குகின்றன. பட்டிப்பசு வழிபட்டதன் அடையாளமாக ஒரு தூணில் பசு பூசிப்பதைப் போன்ற சிற்பம் உள்ளது. மண்டபத் தூண்களில் சிங்கம், யாளியினுடைய உருவங்கள் உள்ளன. சில தூண்களில் சிங்கம் அடியில் பொருத்தப் பெற்றுள்ளது. சுவர்களில் கருங்கல் பலகணிகள் உள்ளன. மடைப் பள்ளிச் சுவரில் பல நடன உருவங்கள் உள்ளன.

இக்கோயிலில் உள்ள ஐந்து கோபுரங்களில் முன் கோபுரம் ஏழு தூண்களையும் மற்றவை ஐந்து நிலைகளையும் கொண்டவை.

அம்மன் கோயில் மண்டபத்தில் மேல் மண்டபத்தில் பொருத்தப் பெற்ற நல் சங்கிலிகளை உடைய ஊஞ்சல் மிக நுண்ணிய வேலைப் பாட்டுடன் அமைந்திருந்தது. ஆனால் அதன் அமைப்பு சிதைந்த இப்பொழுது அவ்வூஞ்சலில் சங்கிலிகளே எஞ்சியுள்ளன. பாம்புகள் பொருத்தப் பெற்ற சித்திரங்கள் அமைந்த ஒரு வட்டக்கல் குறுகம் நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. அம்மன் கோயிலின் உள் மண்டபத்தில் இக் கோயிலுக்குத் திருப்பணி செய்த கோவிந்த தீட்சிதர் (நாயக்கர் காலம்) அவர் தம் துணைவியார் ஆகிய இருவருடைய சிலைகள் உள்ளன.

## 5. திருச்சத்தி முற்றம்:

கிழக்கு நோக்கி அமைந்துள்ள இவ்வாலயம் கலைச் சிறப்புடையது. இறைவி சிவனை வழிபட்ட அம்மை அவனைத் தழுவி வழிபட்டு முத்தியிட்டாள். இக்காட்சியினை நல் கலைத்திறனுடன் சிற்பமாக வடித்துள்ள பேரழகு காணத்தக்கதாகும்.

இக்கோயில் ஒரே ஒரு கோபுரத்தைக் கொண்டுள்ளது. உள்ளே ஒரு பிரகாரமும், வெளியில் ஒரு வீதியும் உள்ளன. கோயிலுக்குள் நடு மண்டபத்தில் சிவக் கொழுந்தீசுவரரும், வடக்குப் பகுதியில் பெரிய நாயகியம்மையும் வீற்று இருக்கின்றனர். ஆலயத்தினுள் தேவியும், பள்ளியறையும், நவக்கிரகங்களும் சூரியன், சண்டிகேசுவரர் முதலியவர்களுடைய சந்நிதிகளும் உள்ளன. அதன் உள் மண்டபத்தில்

கீழ்ப்புறத்தில் அலங்கார மண்டபம் உள்ளது. இந்தப் பிரகாரத்தின் தெற்கில் தேவாரம் பாடிய மூவர் சந்நிதியும், கிழக்கில் யாக சாலையும், வடக்கில் நந்தி வளையும் அமைந்துள்ளன. கோயிலின் உட்பகுதி விரிந்து பரந்த விசாலமான பரப்புடையதாக அமைந்துள்ளன. பொது நிகழ்ச்சிகளுக்கு எல்லா வசதிகளும் நிறைந்த பகுதியாக இவ்வாலயம் திகழ்கின்றது.

6. இராசராசேச்சரம்:-

இன்று ஐராவதேசுவரர் கோயில் என்று வழங்குவது பழங்காலத்தில் இராசராசேச்சரம் என வழங்கியது.

ஐராவதேசுவரர் கோயிலை அடைந்தால் இன்று சுவரழிந்து காணப்படும் ஒரு கோபுரம் காணப்பெறும். வெளிக் கோபுரத்திற்கு அருகில் கோயில் முற்றத்தில் கருங்கற்கள் பல கிடக்கின்றன. இதனுள் உள்ள கல் துண்டு ஒன்றில் "ஈகை குலேந்திரையர் திருக்கோபுரம்" என்று எழுதப்பட்டுள்ளது. இது இந்தக் கோபுரத்தின் பெயராகலாம். கோபுரத்தின் அடிப்பகுதியில் உள்ள மாடங்களில் பல இறையுருவங்கள் இருந்தன. கோபுரத்தின் வடபுறத்தில் பல சிலைகள் இருந்தன -வென்றும் இன்று ஒருசில சிலைகளே உள்ளன. என்று அறிகின்றோம்'

இரண்டாம் வாயிற்கு அருகில் 'ஸ்ரீ பலிபீடம்' உயர்ந்ததாக அமைந்துள்ளது. பலிபீடத்தின் தென்புறம் அமைந்த படிக்கட்டு வழியாளியும், யானையும் இருப்பதாக அமைகிறது. படிக்கட்டுகளின் இருபுறமும் அழகுக் கன்னியர் காட்சி தருகின்றனர். வெளிப்புறம் வேலைப் பாடமைந்த தூண்களுடன் கூடிய மண்டப உள்ளீட்டின் மேல் 3 அடுக்கும் ஐந்து கலசங்களும் உடையதாக இரண்டாம் வாயில் அமைகிறது. துவார பாலகர் எதிர் கண்டு திருச்சுற்றை அடைகிறோம்.

தேர்க் கால்களுடன் குதிரையால் இழுக்கப்படுவதாக 'அக்கிர மண்டபம்' அழகான காட்சியொடு விளங்குகிறது. கிழக்கு மேற்காக அமைந்த படிக்கட்டுகள் யானையும், யாளியும் இருப்பவனாக அமைகின்றன. தென் சுற்றில் இருக்கும் 12 தூண்களுள் 8 தூண்களில் அமர்ந்த நிலையில் சிங்கரங்கள் உள்ள காட்சி அழகாக இருக்கிறது. பிற தூண்களில் சிவபெருமான் முப்புரம் எரித்தமை, திருமணக் காட்சி, குழுகள் வரலாறு முதலான சிற்பங்கள் காணப்படுகின்றன. இம்மண்டபத்தில்

உள்ள தூண்களனைத்தும் சிற்ப நுட்பச் சிறப்புடையன.

கருவறையின் மேற்புறம் கங்கை கொண்ட சோழச்சுவரம் போன்ற கலை எழில் விமானம் அமைந்துள்ளது. தாராசுரத்தில் இரண்டாம் இராசராசனால் எடுப்பிக்கப்பெற்ற இராசராசேச்சரம், சமய சீர்மையும், வரலாற்றுச் செம்மையும், இலக்கிய உணர்வும் ~~வரலாற்றுச் செம்மையும்~~ இலக்கிய உணர்வும் ஊட்டும் கலைக் களஞ்சியம் ஆகும்.

## திருத்_தொண்டத்_தொகைச்_சிற்பங்கள்

இராசராசேச்சுரம் என்னும் ஐராவதேசுவரர் திருக்கோயிலின் வெளிப்புறச் சுவரில் பெரிய புராணம் கூறும் அறுபத்து மூன்று நாயன்மார்கள், ஒன்பது தொகை அடியார்கள் வரலாற்றினை உயிரோவியங்களாகவும், சிற்பங்களாகவும், நன்கலைத் திறனுடன் அமைத்துள்ளனர். இச் சிற்பங்கள் திருத் தொண்டத் தொகையினை ஒட்டி அமைக்கப் பெற்றவையாகும்.[5] இச் சிற்பங்களின் மேல்புறம், கல்வெழுத்துக்களாக நாயன்மார்களின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன.[6] எழுபத்திரண்டு அடியார்களுள், நாற்பத்து மூவர் பெயர்கள் கல்வெட்டாலும், எண்மர் பெயர்கள் சிவப்பு மையாலும் எழுதப்பட்டுள்ளன. மற்றையோர் பெயர்கள் இச் சிற்பத்தில் மேல் இல்லையெனினும் திருத் தொண்டத் தொகை வரிசைப்படி அமைவதால், அடையாளம் கொள்ள முடிகிறது. இச் சிற்பங்களின் இடை இடையே தெய்வ உருவங்கள் சிலவும் அமைக்கப்பட்டுள்ளன. அரிவாட்டாயர் என்னும் நாயனாருக்குரிய சிற்பமும், திருநாவுக்கரசர் சிற்பத்தில் ஒரு பகுதியும் சிதைந்துவிட்டன.

சிற்பங்களின் மேல் அமைந்த தொடர்களால் சில செய்திகள் தெரிய வருகின்றன. கூற்றுவனார், நெடுமாறனார், கழற்சிங்கனார், புகழ்ச்சோழனார், ஐயடிகள் காடவர் கோனார் என நாயன்மார்களின் பெயருடன் 'ஆர்' விகுதி சேர்த்து வழங்கப்பெற்றுள்ளன.[7] ஆண்டார் என்னும் சொல்லால் சில நாயன்மார்கள் கூறப் பெறுவர். நேசாண்டார், கோட்புலியாண்டார், செருத்துணையாண்டார், இடங்கழியாண்டார், கணம்புல்லாண்டார், சத்தியாண்டார் கலிக்காம ஆண்டார் என்றபெயர் கூறப்பட்டமையால் இதனை உணரலாம்.

ஆதிமந்தார்கதை, சேரமான் பெருமாள் கதை, சிறுத்தொண்டர் கதை என்ற கதை என்ற சொல்லோடு சில இணைந்து எழுதப்பெற்றுள்ளன.[8]

கோச்செங்கட் சோழர் என்னும் அடியவர் பெயரை, 'கோச்சிற்றம் பெருமாள்' எனச் சிறப்புக் குறிப்புக் கூறுகிறது. நின்ற சீர் நெடுமாறரை மனைவியும் அறுபத்துமூன்று அடியவர்களுள் ஒருவரும் ஆகிய மங்கையர்க்கரசியும் 'பாண்டிமாதேவி' எனக் குறிக்கப்படுகிறார். 'ஆளுடையபிள்ளை' என்று சம்பந்தரும் 'உடையநம்பி' என்று சுந்தரரும் கூறப்படுகின்றனர். திருநீல கண்டயாழ்ப்பாணர் 'திரு நீலக் கண்டப் பெரும்பாணர்' எனவும், முப்போதும் திருமேனி தீண்டுவார்' முக்காலும் திருமேனி தீண்டுவார்' என்றும் குறிக்கப் பெறுகின்றனர்.

இராசராசேச்சரம் கடந்த கால வரலாற்றைக் கண்ணாரக் காட்டும் கலைக் களஞ்சியமாய் விளங்குகிறது.

## 7. நந்திபுர விண்ணகரம்

### தல அமைப்பு:

இரண்டாம் நந்திவர்மனால் மிகச்சிறப்பாகக் கட்டப் பெற்ற இவ்விண்ணகரம் மேற்கு நோக்கிய திருவாயிலையும், ஐநிலைக் கோபுரத்தையும், இருதிருச்சுற்றுச் சுவர்களையும் உடையதாகும். வெளிப்புறத்தேயுள்ள திருச்சுற்றில் வேலைப்பாடுகள் அதிகமில்லை. வடகிழக்கு மூலையிலும், தென்கிழக்கு மூலையிலும் காணப்படும் கட்டடப் பகுதிகளாலும், சிறுபகுதிகளாலும், மதிலை ஒட்டி வெளிப்புறத் திருச்சுற்றுப் பகுதியில் சுற்று மாளிகை ஒன்று இருந்ததையை அறியலாம். இடப்புற மூலையில் கிடக்கும் சிற்சில தூண் பகுதிகளும் அப்பழைய கட்டடப்பகுதிக்கு உரியவையாகலாம்.

### கோயில் பகுதிகள்:

இக்கோயிலை பலிபீடம் திருக்கொடித் தேவர் கருடாழ்வார் மண்டபம், மகா மண்டபம், அர்த்த மண்டபம், கருவறை எனும் பல பகுதிகளாகப் பிரிக்கலாம். கருடாழ்வார் அஞ்சலி உருவத்துடன் காட்சியளிக்கிறார். இவர் ஸ்ரீவிமானம் கொண்டதொரு மண்டபத்தே எழுந்தருளியுள்ள அழகமைந்த பதினாறு கால்களுடைய மண்டபம், இது கலைச் சிறப்புடையது. இம்மண்டபம் பிற்காலத்தில் அமைப்பு

என்று ஆய்வாளர் கூறுவர்.

### நாயக்கர் சிலைகள்

நுழைவு வாயிலைக் கடந்ததும் அமையும் மகாமண்டபம் நாயக்கர் காலத் திருப்பணியாகும். இம்மண்டபம் பகுதியிலுள்ள அரசன், அரசியர் சிலைகள், விஜயரங்க சொக்கநாத நாயக்கரையும் அவர்தம் தேவியரையும் குறிப்பிட்டவை ஆகும். அருகிலுள்ள பூரசையில் அமையும் உருவம், அவருடைய தாயாருடைய உருவம் எனக் கூறுவர். அடுத்த அர்த்த மண்டபமும், அதனையடுத்துக் கருவறைப் பகுதியும் உள்ளன.

### கருவறை:

கருவறைப் பகுதியில் மூலவர் ஸ்ரீ நிவாசப் பெருமாள் தனக்கேயுரித்தான தோற்றப் பொலிவோடு காட்சி தருகின்ற மாட்சி காண்பார் உள்ளத்தைக் கவருவதாகும்.

### ஈ. கோபிநாதப் பெருமாள் கோயில் ஆலய அமைப்பு:

'கோனப் பெருமாள் கோயில்' என்ற வழங்கும் இக்கோபிநாதப் பெருமாள் கோயில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. இக்கோயிலின் ஒரு பகுதி கட்ட முழுமையாக காண இயலாதவாறு முற்றும் அழிந்து விட்டது. அந்த பகுதியில் கற்கள் அங்கங்கே சிதைந்து கிடக்கின்றன.

சீர் குலைந்த கிடக்கும் இவ்வாலய அமைப்பினை ஓர் அளவே உய்த்துணர முடிகின்றது. இக் கோயில் மண்டபமும், கருவறையும் உள்ள நிலையை அறிகிறோம். கருடாழ்வாரைக் கடந்து மண்டபத்தினுள்ளே நுழைந்தால் பத்துத் தூண்களாலாகிய முன் மண்டபத்தையும் வளை ஆகம முறைப்படி அமைந்த துவாரபாலகர் சிலைகளையும், கருவறையைச் சுற்றி ஒரு திருச்சுற்றையும், செங்கல்லால் ஆன விமானத்தையும், அர் நகரத்தார் கலைப்பாணியையும் இவ்வாலயத்தில் காண முடிகின்றது. இதில் தான் ஸ்ரீகோபிநாதப் பெருமாள் காட்சி தருகின்றார்.

## 9. திருவலஞ்சுழி

கிழக்கு நோக்கிச் சோலை நடுவே அமைக்கப்பட்டிருக்கும் இவ்வாலயம் கம்பீரமான தோற்றப் பொலிவுடன் காண்பாரை ஈர்க்கவல்ல பெருமையுடையதாகும்.

### ஆலய அமைப்பு:

ஐந்து கலைகள் கொண்ட பெரிய ராஜகோபுரத்துடன் அமைந்துள்ள இக் கோயிலுக்குள் இரண்டு பிரகாரங்களும், வெளியில் ஒரு வீதியும் உள்ளன. முன் கோபுரத்தை அடுத்தாற் போல் திருக்குளமும், தோரணம், மண்டபக் கோயிலும் உள்ளன.

அடுத்த வாயிலுக்குள்ளே கொடிமரமும், நந்தி மண்டபமும், சுவேத விநாயகர் (வெள்ளைப் பிள்ளையார்) சந்நிதியும் உள்ளன. விநாயகர் மண்டபம் சிற்ப சித்திரத் தூண்களும், கல்லுத்தர விளக்குகளும், பல அங்கங்களும் அமைக்கப் பெற்ற உள்ளன.

வடக்கில் அலங்கார மண்டபம் அமைந்துள்ளது. இதை அடுத்து உள்ள சுற்றில் நிறையனி மண்டபம் உள்ளது. தெற்கில் மடப்பள்ளியும், வடக்கில் உத்சவ மண்டபமும், உள்ளன. உள்சுற்றில் தென்புறம் லிங்க மூர்த்திகளும், நவசக்தி மூர்த்திகளும், மேற்கில் ஸ்தல விநாயகர், வலஞ்சுழி விநாயகரும் அடுத்து சோமாஸ்கந்தர், சண்முக சுப்ரமணியர், இலக்குமி முதலிய மூர்த்திகளும் வடபுறத்தில் பலரால் பூஜிக்கப்பட்ட லிங்கங்களும் இருக்கின்றன. தென்புறம் கருவறைச் சுவரில் தக்ஷிணாமூர்த்தி, நடராஜர், பிக்ஷாடனர், முதலிய சில விக்கிரகங்களும், வடபுறம் சண்டேசரும் தனியேயுள்ள சனி பகவானும் (இங்கு நவக்கிரகம் இல்லை) இருக்கின்றனர். சுவாமி சந்நதியில் வடபுறம் உற்சவ மூர்த்திகளின் உருவங்களும் பிரதானமான நடராஜ மூர்த்தியின் பழைய பெரிய செப்பு வடிவமும் உள்ளன. மகாமண்டபம் உள் வடபக்கம் இரண்டு ரிஷிகளும் உள்ளார்.

பெரிய நாயகியார் மூன்றாவது வெளிப்பிரகாரத்தில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது, அழகான காட்சியாகும். பெரும்பாலும் கோயில்களில் சுவாமிக்கு இடப்புறம் அம்மன் வீற்றிருப்பது மரபு. ஒரு சில கோயில்களில் சுவாமிக்கு வலப் புறம் அம்மன் அமையும். இக்கோயில் சுவாமிக்கு வலப்புறம் அம்மன் சன்னதி அமைந்து இருக்கிறது. இராச கோபுரத்தை அடுத்துத் தென்புறமாய் பைரவர்க்கு

என்றே அமைக்கப்பட்ட தனிக் கோயில் சிதைந்த நிலையில் உள்ளது. அதில் இருக்கும் பைரவர் மிக வேலைப்பாடுடன் காணப்படுகிறார். ஆனால் சிலை பின்னமாய் உள்ளது. ஒரு காலத்தில் சிறந்த உக்கிர மூர்த்தியாய் இருந்த பைரவரை உடைத்து விளக்கி இருக்கின்றனர்.

இந்தத் தலத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட பல விக்கிரகங்கள் சரஸ்வதி மகால் கலைக் கண்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளன. சரித்திர ஆராய்ச்சி-யாளர்களுக்கு இந்தக் கோயில் பல வரலாறுகளைக் கொண்டது என்பது புலப்படும்.

வரலாற்றுப் புகழுடைய இக்கோயிலின் சுற்றளவு கீழ்மேல் சுமார் 890 அடிகள்; தென்வடல் சுமார் 354 அடிகள். இரத வீதியைச் சேர்ந்த நான்கு பிரகாரங்களை உடைய இது ஐந்து மண்டபங்களும், ஐந்து நிலை இராச கோபுரமும் பெற்று அகன்று பரந்த மிகப் பெரிய ஆலயமாக நிலவுகின்றது.

## சிற்பத்தின் சிகரம்

சிற்பத்தின் சிகரமாய் விளங்கும் இக்கோயிலில் பழங்காலக் கற்சிற்பங்கள், பலவற்றையும் கண்ணாரக் காண்கிறோம். சுவேத விநாயகர் மண்டபம், சித்திரத் தூண்கள் முற்றிலும் கருங்கல்லாலான பலகணி (சன்னல்) சக்கரத்துடன் கூடிய ரதம் போன்ற அமைப்பு ஆகியவை காண்போர் கண்ணையும் கருத்தையும், கவரும் தன்மை உடையவையாய் பொலிவோடு மிளிர்கின்றன.

பழங்காலச் சிற்பங்களின் சிறப்பை எடுத்துக் காட்டும் ஆறு கல்சுற்றுத்து விளக்கும் அக்குத்து விளக்கு நிற்கும் பெரிய மண்டபமும் இந்திரனால் நிர்மாணிக்கப் பட்டவை எனக் கூறுவர்.

அக்காலத்தில் இவ்வாலயம் மாபெரும் இராசதானிக் கோயிலாக இருந்திருக்க வேண்டும்.

## 10. சுந்தரப் பெருமாள் கோயில்

பழையாறை மாநகரில் அமைந்துள்ள மற்ற ஆலயங்களை விட இச்சுந்தரப் பெருமாள் கோயிலுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. அனைத்து ஆலயங்களும் மன்னர்களால் கட்டப்பட்டவை என உடன்படும் வைதீகப் பெருமக்கள் இவ்வாலயம் மட்டும் தேவேந்திரனால் மிகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்டது என்ற தெய்வீக நிலையுடைய புராணச் செய்தியைக் கூறிப் பெருமை அடைகின்றனர்.

உண்மையில் இவ்வாலயம் சுந்தரச் சோழன் என்று குடிமக்களால் செல்லமாக அழைக்கப்பட்ட இரண்டாம் பராந்தகச் சோழனால் கட்டப்பட்டது என்றாலும், தேவவேந்திரனால் அமைக்கப்பட்டது என்ற புராண செய்தியைக் கூறுவதில்தான் பிற்காலத்துப் பெருமக்கள் நாட்டம் கொள்கின்றனர்.

ஆலய அமைப்பு சிறியது என்றாலும், அழகிய முறையில் எடுப்பாகத் தோற்றப் பொலிவுடன் கம்பீரமாக திகழும் காட்சியை ஒருமுறை கண்டோரும் மறக்கமுடியாது.

ஆலய அமைப்பு :-
------------

ஊருக்கு நடுவில் சோலைகளுக்கு இடையில் கோயில் எடுப்பான தோற்றப் பொலிவுடன் அழகிய திருவுருவாய்க் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. கோயிலின் சுற்றளவு கீழ் மேலடி சுமார் 360. தென் வடவடி சுமார் 170, முன் கோபுரம் 5 கலசங்களைக் கொண்டுள்ளது. கோபுர வாயிலில் வருவோரை வரவேற்கும் விநாயகர் வடக்குநோக்கி அமர்ந்துள்ளார்.

கோபுரவாயிலைக் கடந்து உள்ளே சென்றால் முன்னடியான் சந்நதியும், கருடன் சந்நிதியும் உள்ளன. வடபுறத்தில் ஆலய அலுவலகமும். தென் புறத்தில் மடைப்பள்ளியும், கிணறும் உள்ளன. இது இரண்டாம் சுற்றுச் சுவரினைச் சேர்ந்த பகுதி.

உள்கோபுரம் மூன்று தளங்களை உடையது. உள் கோபுரத்தைக் கடந்து சென்றால் நடு மண்டபத்தில் தென் புறத்தில் வாகன மண்டபம், களஞ்சியம், உக்கிராணம், பொருள் அறை, நவராத்திரி மேடை முதலியன உள்ளன.

சிற்பங்கள் :-
--------

வட புறத்தில் சேனை முதலியார், யோக நரசிம்மன், கண்ணபிரான், அனுமார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், மணவாள மாமுனி முதலியோர்-களுடைய சந்நிதிகள் உள்ளன.

மூலவரைச் சுற்றியுள்ள முதல் சுற்றுச் சுவரில் தெற்கில் சௌந்தரவல்லி தாயார் சந்நிதியும், மேற்கில் பன்னீர் மரமும், வடக்கில் ஆண்டாள் -

கருவிளையா சந்நிதியும் உள்ளன. மூலஸ்தானத்தில் ஸ்ரீசௌந்தர ராஜப் பெருமாள் வீற்றிருக்கின்றார். உற்சவர் கோபாலர் பெருமாள் வீற்றிருக்கிறார். உற்சவர் கோபாலர் வெட்டிச் சிலையாய்க் கம்பீரமாக நிற்கின்றார்.

கற்பக் கிரகத்துச் சுவர்களில் முப்பத்து முக்கோடி தேவர், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் முனிவரிடையில் பெருமாள்வனின் மரத்தடியில் ஸ்ரீதேவி, பூதேவி, ஸ்ரீதேவியுடன் காட்சி தரும் சிற்பங்கள் உள்ளன.

மூலவர் மண்டபத்தின் வெளிச் சுவர்களில் வட புறத்தில் அடியில் லேத்திர பாலகர் உள்ளார். கோயிலுக்கு வெளியே இரண்டும் சுற்றுச் சுவர்கள் உள்ளன.

அண்மைக் காலத்தில் புதையலில் எடுக்கப் பெற்ற பெருமாள், நாச்சியார், சக்கரத்தாழ்வார், காளிங்க நர்த்தனர், திருமங்கையாழ்வார் முதலிய-வர்களின் உற்சவச் சிலைகள் சிற்பங்களில் சிறந்தவையாய் மகா மண்டபத்தில் உள்ளன. இவைகளுக்குப் பூசை இல்லை.

மூலவர் மண்டபத்துக்கு முன்னேயுள்ள மண்டபம் சம அளவுள்ளதாகக் கட்டப் பெற்று ~~அவர்களுக்கு~~ ஆங்காங்கு பல மூர்த்திகள் பிரதிட்டை செய்யப் பெற்றுள்ளனர். பெரிய திருவடியாகிய அனுமாருக்கும் தனித்தனிச் சந்நதிகள் இங்கு உள்ளன.

முடிவுரை:-

பழமையான மாநகரில் சைவரும், வைணவரும் பல்லவர் கால முதல் கால் கொண்டு பிற்காலச் சோழர் காலத்தே செழித்தோங்கி பின் வந்த பேரரசுகளாலும் பேணிக் காக்கப் பட்டமையை இங்கு இன்றளவும் நின்று நிலவும் சிற்பக்கலை வளர்க்கு கோயில்களே காட்டுகின்றன.

## அடிக்குறிப்புகள்

1. சேக்கிழார் சுவாமிகள் - திருத் தொண்டர் புராணம், திருநாவுக்கரசர் புராணம் பா 294 - 300.
2. சேக்கிழார் சுவாமிகள் - திருத்தொண்டர் புராணம் அமர் நீதி நாயனார் புராணம் பா- 48.
3. பட்டீச்சரம் தல வரலாறு - ஆர்.பஞ்சநதம்பிள்ளை - ப-5.
4. அதே நூல் - ப-6.
5. தி-வை-சதாசிவப் பண்டாரத்தார் - பிற்காலச் சோழர் சரித்திரம் பகுதி- 1, ப- 16.
6. அதே நூல் ப-16
7. வே - மகாதேவன் - வரலாற்றுப் போக்கில் பழையாறை மாநகர் - ப- 87.
8. அதே நூல் -ப-87.

# நிறைவுரை

## நிறைவுரை

பல போர்களைப் புரிந்து தொண்ணூற்றாறு விழுப்புண்களைத் தன் மார்பில் பெற்றது, புகழ் பெற்றச்சிறப்பினால் விஜயாலயன் என்ற சிறப்புப் பெயரையே இயற்பெயராய்த் தாங்கிய மாமன்னன் தான் தோன்றிய பழையாறை மாநகரில் பிற்காலச் சோழப் பேரரசினைத் தோற்றுவிக்க வித்திட்டவன்.

பழையாறை மாநகரில் தோன்றிய அப்பேரரசு ஏறக்குறைய 400 ஆண்டுகள் தமிழ்கூறு நல்லுலகத்தை ஒரு குடைக்கீழ் கொண்டு வந்ததோடு கடல் கடந்த நாடுகளையும் வென்று பேரோடும், புகழோடும் விளங்கியது. அப்பேரரசு பல அரும்பெரும் சாதனைகளைப் புரிந்தமையை வரலாற்றில் கண்டு வியக்கிறோம்.

இத்தகைய சிறப்புக்குக் களமாக அமைந்த பழையாறை மாநகர் வரலாறு, ஆலயச் சிறப்பு, கலைச்சிறப்பு, விழாக்களின் சிறப்பு, சான்றோர் பெருமை ஆகிய தலைப்புக்களின் வழி ஆராய்ந்து மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆயிரம் தளிகளைப் பெற்றுக் கோயில் மாநகராக விளங்கிய பழையாறை மாநகர்த் திருக்கோயில்களின் கல்வெட்டுக்களையும், பழையாறை மாநகரின் சிறப்புக்களை உரைக்கும் உரைக்கல்லான தஞ்சைப் பிரகதீச்வர ஆலயக் கல்வெட்டுக்களையும் நன்கு ஆய்ந்தால் மறைந்து கிடக்கும் அரும்பெரும் வரலாற்று உண்மைகள் பல தெரியப்படும்.

சோழன் மாளிகை, நந்திபுரவிண்ணகரம் எனும் நாதன் கோயில், இராசராசேச்சுரம் எனும் தாராசுரம் ஆகிய அகநகர்ப் பகுதிகளில் அமைந்திருந்த மூன்று அரண்மனைகள், இராசேந்திரன் பேட்டை என்ற புறநகர்ப் பகுதியில் அமைந்திருந்த ஓர் அரண்மனை. இந்நான்கு அரண்மனைப் பகுதிகளையும், நகரின் முக்கியப் பகுதிகளையும் அகழாய்வு நடத்தினால் பழையாறை மாநகரினைப் பற்றிய வரலாற்றுச் சிக்கல்கள் பலவற்றுக்குத் தீர்வு காண முடியும்.

ஆயுத்தோரம் பல உண்மைகளை வழங்கும் வரலாற்றுப் பெட்டகமாகப் பழையாறை விளங்குகிறது. பழையாறை மாநகரினை மத்திய, மத்திய, மாநிலத் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் பொறுப்பேற்று பொறுமையுடன் நீண்டநாள் தொடர்ந்து அகழாய்வு நடத்தினால் பழையாறை மாநகரின் புகழ் ஓங்கி நிற்கும் என்பதில் ஐயமில்லை.

# பின்னிணைப்பு

# துணைநூற்பட்டியல்

1. அருணாசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு,
பன்னிரண்டாம் நூற்றாண்டு.

2. அருணாசலம், மு., தமிழ் இலக்கிய வரலாறு,
பதினைந்தாம் நூற்றாண்டு

3. அரங்கசுவாமி. இரா., சுவாமி ந திருவலஞ்சுழி
தலவரலாறு, ஸ்ரீசுவாமிநாத சுவாமி
திருக்கோயில் வெளியீடு,
சுவாமிமலை, 19796

4. இராசமாணிக்கனார், மா., சோழர் வரலாறு,
எடுகேஷனல் பப்ளிஷர்ஸ்,
கம்பெனி, சென்னை, 1952.

5. கணபதி தேசிகர், சொ., திருச்சத்தி முற்றத்திருத்தல வரலாறு,
திருச்சத்தி முற்றத்தேவஸ்தான வெளியீடு,
சத்திமுற்றம், 1968.

6. சதாசிவ பண்டாரத்தார். தி. வை., பிற்காலச் சோழர்
சரித்திரம் பகுதி 2 மூன்றாம் பதிப்பு,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலைநகர், 1967.

7. சதாசிவபண்டாரத்தார். சி. வை., பிற்காலச் சோழர் சரித்திரம்,
பகுதி 3. முதற்பதிப்பு,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,
அண்ணாமலை நகர், 1961.

8. சதாசிவ பண்டாரத்தார். தி. வை., கல்வெட்டுக்களும்
உண்மைகள், மூன்றாம் பதிப்பு,
மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.
1957.

9. சதாசிவப்பண்டாரத்தார், தி.வை., காவிரிப்பூம்பட்டினம்,
மாதவி மன்றம், முதற்பதிப்பு,
மேலப்பெரும்பள்ளம், 1959.

10. சுப்புலட்சுமி, நா., பெரியபுராணத்தில் பெண்மை,
பாரி நிலையம், பிராட்வே,
சென்னை, 1966.

11. சுந்தரமூர்த்தி சுவாமிகள், தேவாரம், தேவாரம் அடங்கன்முறை,
மயிலை இளமுருகனார் பதிப்பு,
திருவருளகம்,
சென்னை, 1953.

12. சுவர்ணகாளீச்சன், க., பழையாறைத் தலவரலாறு,
பழையாறைத் தேவஸ்தான வெளியீடு,
பழையாறை, 1957.

13. சேதுராமன், நா., அருடைச் சோழ மண்டலம்,
டைரக்டரி ராமன் பிரைவேட்லிமிடெட்,
பிடாரிகுளம் ரோடு, கும்பகோணம் 1950.

14. சேதுராமன், நா., இரண்டாம் இராசராசன்,
டைரக்டரி ராமன்பிரைவேட் லிமிடெட்,
பிடாரி குளம் ரோடு,
கும்பகோணம். 1950.

15. சோமசுந்தரம் பிள்ளை, ஜே.எம்.,
சோழர் கோயிற்பணிகள்,
கொற்றவர்குடி, அய்ந்தாம்பதிப்பு,
அண்ணாமலை நகர், 1962.

16. திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள், சம்பந்தர் தேவாரம்,
தேவாரம் அடங்கன்முறை, மயிலை.
இளமுருகனார் (ப.ஆ) திருவருளகம்,
சென்னை. 1953.

17. திருநாவுக்கரசுசுவாமிகள். திருநாவுக்கரசர் தேவாரம்,
தேவாரம் அடங்கல் முறை, மயிலை
இளமுருகனார், (ப.ஆ) திருவருளகம்,
சென்னை. 1953.

18. பஞ்சநதம் பிள்ளை.இரா.., திருப்பட்டீச்சுவரம்
அருள்மிகு தேனுபுரீச்சுவரர்
ஆலயத் தல வரலாறு, தேவஸ்தான
வெளியீ, திருப்பட்டீச்சுவரம் 1979.

19. பஞ்ச நதம் பிள்ளை.இரா., சுந்தரபெருமாள்கோயில்
சௌந்தரராஜ பெருமாள்கோயில் வரலாறு,
தேவஸ்தான வெளியீடு, சுந்தரபெருமாள்
கோயில், 1957.

20. வேங்கடசாமி நாட்டார். ந.மு., அகநானூறு,
மூன்றாம் பதிப்பு, சைவசித்தாந்த
நூற்பதிப்புக்கழகம், சென்னை,1955.

21. வேங்கடசாமி நாட்டார்.ந.மு., மணிமேகலை,
இரண்டாம் பதிப்பு, சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், சென்னை,1951.

22. வேங்கடசாமிநாட்டார்.ந.மு., புறநானூறு,
உ.வே.சாமிநாதய்யர் (ப.ஆ)
நான்காம் பதிப்பு சென்னை,1950.

23. Hultzsh - South Indian Enscriptions
Volume I, II.
Printed of Publlshed by
the Govt. press.
Culcutta 9th October 1916.

24.

24. Nilakantasstri,K.A., The Cholas IInd ed, University of Madras, Madras, 1955.

25. Nilakantasastri.K.A., History of Söth India, Oxford University press, Madras, 1955.

26. Subramaniam.N., Histroy of Tamil Nadu. Madras. 1953.

## பெரிய புராணம்:-

திருஞான சம்பந்தர் நகருக்கு வந்து முத்துப் பந்தர் பெற்றுப் பதிகம் பாடியதைச் சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் நாவாரப் பாராட்டும் பாடல்கள் வருமாறு.

திருஞான சம்பந்தர்புராணம் (பாடல் - 389 - 398)

"சண்பை வரும் பிள்ளையார் சடாமகுடர் வலஞ்சுழியை அன்பு பெருகத் தொழுதேத்திப் பழையாறை எய்துதற்கு அன்புடைய அடியார்களுடன் போத நடந்தருளி விண் பொருநீர் மதிலாறை மேற்றளி சென்றெய்தினார்."

திருவாறை மேற்றளியில் திகழ்ந்திருந்த செஞ்சடையின் உருவாளர் அடி வணங்கி உருகிய அன்பொடு பெற்றி மருவாருங் குழல் மலையாள் வழிபாடு செய்ய அருள் தருவார்தந் திருச்சத்தி முற்றத்தில் புகச்சார்ந்தார்" திருச்சத்தி முற்றத்தில் சென்றெய்தித் திருமலையாள் அருச்சித்த சேவடிகள் ஆர்வமுறப் பணிந்தேத்திக் கருத்து அறிவில் அடையாமல் கை தருவார் கழல்பாடி சிறப்புமிகத் திருப்பட்டீச்சரம் பணிய மேவுங்கால் வெம்மைதரு வேனிலிடை வெயில் வெப்பந்தத் தவிர்ப்பதற்கு மும்மை நிலைத் தமிழ் விரகர் முடிமீதே சிவபூதம் தம்மை அறியாதபடி தண்தரளப்பந்தர் எடுத்(து).

"எம்மை விடுத் தருள் புரிந்தார்பட்டீச்சரர்"
என்றியம்ப
அவ்வுரையும் மணிமுத்தின் பந்தரும் ஆகாயம் எழச்
செவ்விய மெய்ஞ்ஞானமுணர் சிரபுரத்துப்பிள்ளையார்
"இவ்வினைதான் ஈசர்திரு வருளாகில் இசைவதென"
மெய் விரவு புளகமுடன் மேதினியின் மிசைத் தாழ்ந்தார்.
அப் பொழுதே அம்முத்தின் பந்தரினை அருள் சிறக்கக்
கதிரொளிய மணிக் காம்பு பரிசனங்கள் கைக்கொண்டார்

மழ ரமொழி மறைத் தலைவர் மகிழ்ந்தமணயோர்கள் ஒக

பொழிலாசபி

பூமலரால் அப்பந்தர் பூம்பந்தரும் போலும்
தொண்டர் குழாம் ஆர்ப்பெருப்பச் சுருதிகளின் பெருத்தமுனி
எண்டிசையும் நிறைந் தோங்க எழுந்தருளும் பிள்ளையார்
வெண்டரளப் பந்தர் நிழல் மீதணையத் திருமன்றில்
அண்டர் பிரான் எடுத்த திருவடி நிழல் என அமர்ந்தார்.

பாரிலிசை அப்பருடன் வருகின்றார் பக்கத்தில்
ஆரம் அளித்தவர் தந்த அருட் கருணைத் திறம் போற்றி
சாமரங்கள் தமைப்ப எதிர் கொள்ள முக மலர்ந்த
சேர வருந் தொண்டருடன் திருப்பட்டீச்சரம் அணைந்தார்.

சென்றணைந்த திருவாயில் புறத்திறைஞ்சி உள்புகுந்து
வெள்ளி விடை யவர்கோயில் வலங்கொண்டு பெண் கோட்டுப்
பணிந்து கனைத் தறியாத பாததா மரைகண்டு ?
முன் தொழுது விழுந்தெழுந்த மொழி மாலை போற்றிசைத்தார்.

அருள் வெள்ளத் திறம்பரவி அளப்பரிய ஆனந்தப்
பெரு வெள்ளத் திடை மூழ்கிப் போராத பெருங்காதல்
திருவுள்ளப் பரிவுடனே செம்பொன்மலை வல்லியார்
தருவள்ளத் தமுதுண்ட சம்பந்தர் புறத்தணைந்தார்.

பட்டீச்சரப் பதிகப் பகுதாதி
வரைமா திருக்கு-மெசகு-கூ----------

மழுமா லவிந்த திருக்கரமும்
அரைசேர் வேங்கை யதள் குடையும்
அரவா பரணித் தகவி மார்பும்
விரைசேர் கொன்றை முடியுமரா
மேவு மடியும் வெளித் தோற்றி
தரைசேர் விடையான் திருப்பழசை
நகரி வரப் பெற்றேனே.

## திருப்பழையாறை வடதளி

### திருக்குறுந்தொகை (5-ம் திருமுறை)

### திருச்சிற்றம்பலம்

சுவாமி-சோமநாதர்,
வடதளிநாதர், தேவி,
சோமகலா நாயகி,
கௌரியம்மை.

தலையெ லாம்பறிக் குஞ்சமண் கையருள்
நிலையி னான்மறைத் தான்மறைக் கொண்ணுமே
அலையி னார்பொழி லாறை வடதளி
நிலையி னானடி யேநினைந் துய்ம்மினே

மூக்கி னால்முரன் றோதிஅக் குண்டிகை
தூக்கி னார்குலந் தூறறுத் தேதனக்
காக்கி னான்அணி யாறை வடதளி
நோக்கி னார்க்கில்லை யால்அரு நோய்களே

குண்ட ரைக்குண மில்லரைக் கூறையில்
பிண்ட ரைத்துறந் தவிம லன்றனை
அண்ட னைப்பழை யாறை வடதளிக்
கண்ட னைத்தொழு துய்ந்தன கைகளே

முடைய ரைத்தலை முண்டிக்கும் மொட்டரைக்
கடைய ரைக்கடிந் தார்கனல் வெண்மழுப்
படைய ரைப்பழை யாறை வடதளி
உடைய ரைக்குளிர்ந் துள்ளுமென் உள்ளமே

ஒள்ள ரிக்கணார் முன்னமண் நின்றுணும்
கள்ள ரைக்கடிந் தகருப் பூறலை
அள்ள லம்புன லாறை வடதளி
வள்ள லைப்புக ழத்துணை யர் வாருமே

நீதி யைக்கெட நின்ற மணேயுணும்

ராதி யைக்கெடு மாச்செய்த சமணரை
ஆதி யைப்பழை யாறை வடதளிச்
சோதி யைத்தொழு வார்துயர் தீருமே
திரட்டி யரக்கு வைத்திளிக் குஞ்சமண்
மிரட்ட ரைப்பிலித் தபெரு மானறை
அருட்டி றத்தளி யாறை வடதளித்
தெருட்ட ரைத்தொழுத் தீவினை தீருமே
ஒளித்தெழுந் தஞ்சன ராச்சமண்
வேறி னைப்படுத் தானைவெஞ் சுற்றதை
பாத னைப்பழை யாறை வடதளி
நாத னைத்தொழ நம்வினை நாசமே
வாயி ருந்தமி ழேபாடித் தாளா
ஆயி ரஞ்சமண் ணும்மழி வாக்கினான்
பாவி ரும்பிற லாறை வடதளி
மேய பனினை வல்வினை தீருமே
செருத்த னைச்செயுஞ் சேனைக் கஞ்சடல்
எருத்தி றவிர லாலிறை யூன்றிய
அருத்தி னைப்பழை யாறை வடதளித்
திருத்த னைத்தொழு வார்வினை தேயுமே
இல்லார்த்த பெருவேஞர்த் தனியே பேணி
இராப்பட்டுச் சமணர்கட்த மனைகால்புக்கு
எல்லாருந் தனிச்சாத்தான் குடியிர் கான
இறைப்பொழுதில் திருவாரூர் புக்கார்தாமே.



முதல் இராசராசன் அமைத்த
அருண்மொழித் தேவேச்சுர ஆலயம்



சோமநாதராலய முன்மண்டபம்



முன் மண்டப உள்வாயில்



ஸ்ரீ சௌந்தரவல்லித்தாயார் சந்நிதி

பட்டீசரம் துர்க்கை





[illegible]



தாராசுரத்து ராஜராஜேஸ்வரம்